# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை:9 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 5 சனிக்கிழமை (18-03-2000) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்:42


## பௌத்த பீடங்கள் ஆவேசப் பாய்ச்சல்!

# புலிகளுடன் பேசும் முயற்சியை உடனடியாகக் கைவிடுங்கள்!

## சகல வளங்களையும் ஒன்றுதிரட்டி அவர்களை ஒடுக்கவும் வலியுறுத்து

கொழும்பு,மார்ச்18

**★ நோர்வே அரசின் உதவியுடன் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு எடுக்கப்படும் சகல முயற்சிகளையும் உடனடியாகக் கைவிடவேண்டும்.**

**★ இலங்கை அரசின் சகல வளங்களையும் பயன்படுத்தி விடுதலைப் புலிகளை ஒடுக்க முழுமுச்சில் நடவடிக்கை எடுக்க வேண்டும் -**

**இவ்வாறு நான்கு பௌத்த பீடங்களினதும் மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் கூட்டாக கோரிக்கை விடுத்திருக்கின்றார்கள்.**

இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு நீண்ட கடிதம் ஒன்றை நேற்று முன்தினம் அவர்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கர் ரம்புக்வெல்ல ஸ்ரீ விப்பாசி தேரர், அமரபுர பீடத்தின் மகாநாயக்கர் மடிஹே பன்னா சித்த உடநிதர தேரர், அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் ரத்ன பால புத்தகீர்த்த தேரர், ராமான்ய பீடத்தின் மகாநாயக்கர் தெலில் தெனிய மெடலங்கார தேரர் ஆகியோர் அந்தக் கடிதத்தில் கையொப்பம் இட்டுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சம் வருமாறு:-

இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லையே இல்லை.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

## தன் தூதரை நோர்வே அவசரமாக அழைத்தது

கொழும்பு,மார்ச்18

இலங்கை விவகாரத்தில் நோர்வேயின் பங்களிப்புத் தொடர்பாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக கொழும்பிலுள்ள நோர்வே தூதர் நோர்வே தலைநகர் ஒஸ்லோவுக்கு அவசரமாக அழைக்கப்பட்டுள்ளார்.

நோர்வேயில் புதிதாகப் பதவியேற்றுள்ள அரசின் அழைப்பின் பேரிலேயே தூதர் ஜோன் வெஸ்போர்க் நேற்றுமுன்தினம் ஒஸ்லோ விரைந்தார்.

இலங்கை தொடர்பாக நோர்வே அரசு எடுக்கவேண்டிய கொள்கைகள், இலங்கையில் நோர்வேயின் முயற்சிக்கு எழுந்துள்ள எதிர்ப்பலைகள் ஆகியன தொடர்பாக தூதருடன் அந்த நாட்டு அரசின் உயர் மட்டம் ஆராயவிருக்கின்றது.

## நோர்வேயின் புதிய அரசும் சமாதான முயற்சிக்கு ஆதரவு

ஒஸ்லோ,மார்ச்18

இலங்கையில் தொடரும் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை நிலைநாட்டும் முயற்சியில் தனது புதிய அரசும் தொடர்ந்து ஈடுபடும் என்று நோர்வேயின் புதிய வெளிவிவகார அமைச்சர் தோர்ஜேர்ன் ஜக்லண்ட் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சராக நேற்று நியமனம் பெற்ற பின்னர் ஒஸ்லோவில் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

"பதவியேற்றுள்ள தொழிற்கட்சி அரசு இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்காக தொடர்ந்து சமரச முயற்சியில் ஈடுபடும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுவிலில் நேற்று மாலை மோதல் இடையில் சிக்கி 2மாணவர் காயம்

சாவகச்சேரி,மார்ச்18

மட்டுவில் தெற்கில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

சம்பவம் நடந்த இடத்துக்கு சமீபமாக உள்ள வளர்மதி கல்வி நிலையத்தில் கல்வி பயின்றுகொண்டிருந்த இரு மாணவர்கள் இடையில் சிக்கி காயமடைந்தனர்.

மட்டுவில் மகாவித்தியாலய 9 ஆம் ஆண்டு மாணவனான சிவாணந்தம் தயானந்தம் (வயது 14 - மட்டுவில் வடக்கு), மட்டுவில் அமெரிக்க மிஷன் த.க.பாடசாலை 9ஆம் ஆண்டு மாணவனான மார்க் கண்டு கண்ணகைபவன் (வயது 16

(10ஆம் பக்கம் பார்க்க)

## தனங்களப்பில் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்18

தனங்களப்புப் பகுதியில் நெல் அறுவடைக்குச் சென்ற மதியாபான் (வயது 47-கச்சாய்) என்பவர் அங்கு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் ஒன்றில் சிக்கி உயிரிழந்தார் எனவும் -

விடுதலைப்புலிகளே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் எனவும் -

யாழ். பாதுகாப்புப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

## 2 சடலங்கள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்18

மட்டுவில் வடக்குப் பகுதியில் நேற்றுமாலை இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் உயிரிழந்த விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த இருவரின் சடலங்களை படையினர் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைத்துள்ளனர் என யாழ். பாதுகாப்பு படைத்தலைமையகம் அறிவித்துள்ளது.


இப்பொழுது.....

உதயன்

இணையப் பதிப்பு

அனைத்துலகிலும் வாழும் தமிழ் மக்கள் வாசிக்கலாம்.

இணைய முகவரி :

www.uthayan.com


## பீடாதிபதிகளைச் சமாளிக்க பீரிஸ் கண்டிக்கு விரைவு

கொழும்பு,மார்ச்18

இலங்கை அரசுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ள பௌத்த மத பீடாதிபதிகளைச் சந்தித்து அவர்களை சமாளிப்பதற்காக நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று அவசரமாகக் கண்டிக்கு விரைந்தார்.

நோர்வே அரசின் உதவியுடன் விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிக்கு எதிராக பௌத்தபீடங்கள் குரலெழுப்பியுள்ளன.

இதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடிநிலையைத் தணிப்பதற்காக அமைச்சர் பீரிஸ் அவசர அவசரமாக நேற்று கண்டிக்குச் சென்றார்.

அங்கு அவர் பௌத்த பீடாதிபதிகளுடன் கலந்துரையாடினார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## இயக்கச்சி, தனங்களப்பில் தொடர்ந்து மோதல்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்18

இயக்கச்சி, தனங்களப்பு ஆகிய பகுதிகளில் நேற்று மாலை முதல் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் தொடர்ந்து சண்டை நடைபெறுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சாவகச்சேரி பகுதிவரை துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டதாக ஒரு தகவல் தெரிவித்தது.

இந்த மோதல்களால் ஏற்பட்ட சேதவிவரங்கள் குறித்துத் தகவல்கள் கிடைக்கவில்லை. (உ-3)

## வவுணதீவில் 3 இளைஞர்கள் நேற்றுச் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு,மார்ச்18

மட்டக்களப்பு - வவுணதீவுப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் உயிரிழந்ததாகத் தெரிவித்து 3 இளைஞர்களின் சடலங்களை நேற்று மாலை பொலீஸார் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர்.

உயிரிழந்த மூவரும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவித்த மட்டக்களப்புப் படை அதிகாரிகள் அவர்களின் சடலங்களை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பதற்காக செஞ்சிலுவை சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை - வவுணதீவு - நாவற்காட்டுப்பகுதியில் வயல் வேலைக்குச் சென்ற இளைஞர்களின் சடலங்களே இவை என மட்டக்களப்பு ஆஸ்பத்திரி வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

(உ-7-21)

## கிளிநொச்சியில் இதுவரை 35 எலும்புக்கூடுகள் மீட்பு!

வவுனியா,மார்ச்18

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நேற்று வரை 35 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

பெரும்பாலான எலும்புக்கூடுகள் மலசலகூடக் குழிகளிலிருந்தும், ஒருசில பெரிய மரங்களின் அடியிலிருந்தும் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தசமயம் தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற 244 பேர் காணாமல்போனதாக அவர்களின் உறவினர்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்ததாக கூறப்படுகின்றது.

இவ்வாறு காணாமல்போனவர்களில் ஒருதொகுதியினரின் எலும்புக்கூடுகளே தற்போது மீட்கப்பட்டுள்ளன என்று ஊகிக்கப்படுவதாகவும் -

மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் அடையாளம் காண்பதற்காக அக்கராயன் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளதாகவும் - வன்னிச் செய்திகள் தெரிவித்தன. (உ-7)

# வெளி மாவட்டம் செல்ல பயண அனுமதி பெற்றவர்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்18.

யாழ். குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 17 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### நெடுந்தீவு

(12233ஏ), (12233பி), (12233சி), (12870ஏ), (12870பி), (12870சி), (12870டி), (12939ஏ), (12939பி), (12939சி), (12939டி), (12940ஏ), (12941ஏ), (12941பி), (12966ஏ), (12966பி).

### ஊர்காவற்றுறை

(11907ஏ), (11907பி), (12382ஏ), (12382பி), (12382சி), (12775ஏ), (12836ஏ), (12836பி), (12861ஏ), (12881ஏ), (12883ஏ), (12884ஏ), (12887ஏ), (12904ஏ), (12904பி), (12908ஏ), (12909ஏ), (12916ஏ), (12917ஏ), (12917பி), (12924ஏ), (12924பி), (12925ஏ), (12925பி), (12925சி), (12927ஏ), (12932ஏ), (12932பி), (12933ஏ), (12933பி), (12934ஏ), (12934பி), (12934சி), (12934டி), (12934ஈ), (12945ஏ), (12946ஏ), (12946பி), (12952ஏ), (12959ஏ), (12961ஏ), (12961பி), (12961சி), (12961டி), (12962ஏ), (12962பி), (12963ஏ), (12963பி), (12965ஏ), (12970ஏ), (12971ஏ), (12972ஏ), (12972பி), (12979ஏ), (12979பி), (12991ஏ), (12991பி), (12991சி), (12991டி).

### வேலணை

(12465ஏ), (12786ஏ), (12786பி), (12786சி), (12857ஏ), (12857பி), (12857சி), (12862ஏ), (12862பி), (12862சி), (12866ஏ), (12866பி), (12866சி), (12866டி), (12867ஏ), (12882ஏ), (12899ஏ), (12906ஏ), (12907ஏ), (12907பி), (12914ஏ), (12914பி), (12918ஏ), (12918பி), (12920ஏ), (12920பி), (12920சி), (12921ஏ), (12923ஏ), (12923பி), (12923சி), (12923டி), (12926ஏ), (12929ஏ), (12931ஏ), (12936ஏ), (12936பி), (12936சி), (12937ஏ), (12942ஏ), (12942பி), (12948ஏ), (12949ஏ), (12949பி), 12949சி), (12950ஏ), (12953ஏ), (12953பி), (12954ஏ), (12358ஏ), (12958பி), (12958சி), (12958டி), (12958ஈ), (12958எவ்), (12958ஜி), (12958எச்), (12960ஏ), (12968ஏ), (12969ஏ), (12973ஏ), (12978ஏ), (12978பி), (12980ஏ), (12981ஏ), (12982ஏ), (12984ஏ), (12984பி), (12986ஏ), (12986பி), (12986சி), (12986டி), (12986ஈ), (12987ஏ), (12987பி), (12988ஏ), (12988பி), (12989ஏ), (12989பி), (12989சி), (12992ஏ), (12992பி), (12992சி), (12992டி), (12993ஏ), (12993பி), (12995ஏ), (12995பி), (12996ஏ), (12996பி), (13017), (13020ஏ), (13021ஏ).

## இத்தாவிலில் சம்பவம்:

# வர்த்தகர் ஒருவர் மீது மறைந்திருந்து வேட்டு

### கட்டுத்துவக்குடன் 2 பேர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 18

கடையைப் பூட்டிவிட்டு வீடு சென்ற வர்த்தகர் மீது மறைந்திருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சம்பவம் கடந்த செவ்வாய்கிழமை இரவு7.30 மணிக்கு பளை இத்தாவிலில் இடம்பெற்றது.

துப்பாக்கி ரவை மரம் ஒன்றைத் தாக்கியதால் வர்த்தகர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார். இச்சம்பவம் உடனடியாகப் படையினருக்குத் தெரிவிக்கப்பட்டதையடுத்து அப்பகுதியைச் சுற்றிவளைத்த படையினர் பற்றைக் காட்டுக்குள் கட்டுத்துவக்குடன் காணப்பட்ட ஒருவரைக் கைதுசெய்தனர்.

இத்தாவில் பார்ப்பரம்மா தேவாலயத்துக்கு அருகிலுள்ள கடை உரிமையாளரான செபஸ்தியாம்பிள்ளை (வயது 62) என்பவரே துப்பாக்கியால் சுடப்பட்டவராவார்.

இதே இடத்தைச் சேர்ந்த குணம் என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார்.

கடந்த வருடம் இதேபோன்று இடம்பெற்ற ஒரு சம்பவத்தில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டபோது க.இரத்தினசிங்கம் (வயது 48) என்பவர் காயமடைந்தது குறிப்பிடத்தக்கது.

(ஜ-117)

## மிருதங்க ஒலிப்பேழை வெளியீடு

இசைக்கலைமணி சின்னையா துரைராசாவின் மிருதங்கப்பாட செயல்விளக்க ஒலிப்பேழை வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுகிழமை காலை 9மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும், சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் செ.பாலச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் இசைக்கலைமணிக்கு பட்டமளித்து, பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படவுள்ளார். (க-30)

## வண்ணை சிவன் தேர்த்திருவிழா

யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும்.

நாளை காலை 5 மணிக்கு அபிஷேகமும் 7 மணிக்கு வசந்த மண்டப் பூசையும் நடைபெற்று 9மணிக்கு பஞ்சரத தேர்ப்பவனி ஆரம்பமாகும். நண்பகல் 12 மணிக்கு ரத அவரோகணம் இடம்பெறும்.

மறுநாள் திங்கட்கிழமை மு.ப 11.30 மணிக்கு தீர்த்த உற்சவம் இடம்பெறும்.

எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கன்னி ஊஞ்சலைத் தொடர்ந்து திருக்கல்யாணமும் வீதிவலம் வருதலும் இடம்பெறவுள்ளன. (க)

ஒரு கணம்,......
96க்குப்பின்???

ராஜா
யாழ்ப்பாணம்
ரசிகர்களே!
சூப்பர்ஸ்ரார் ரஜனிகாந்த், சௌந்தர்யா, நடிகர்திலகம் மற்றும் பலர் நடித்த
படையப்பா
காட்சிகள்
10.30, 2.00, 5.00
(C/11349)

நாகம்ஸ்
சுன்னாகம்
அஜித், சிம்ரன் நடித்த
அவள் வருவாளா?
(ரீஸ்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
ரசிகர்களே!
21-03-2000 முதல்
அம்மன்
(C/11282)

லிபேட்டி
அச்சுவேலி
சிலதினங்கள் மட்டுமே
அஜித், ஜோதிகா, ரகுவரன், மணிவண்ணன் நடிப்பில்
முகவரி
(பிரதிகள் தரமானவை)
காட்சிகள் – 10.30, 2.30
T.P : 070-212223
070-212678
Fax No:- 0094 - 70212223
(74393)

உ

ஏழாலை
வசந்தி கோயில் என வழங்கும்
## அருள்மிகு பத்திரகாளி அம்மன் திருக்கோயில்
## மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

கும்பாபிஷேகம 22-03-2000 (புதன்) காலை 10.00 மணி
எண்ணைக்காப்பு 21-03-2000 (செவ்வாய்)காலை 10.00மணி தொடக்கம் 3.00 மணிவரை
பிரதமகுரு - சிவப்பிரமஸ்ரீ தியாக கொங்காதரக்குருக்கள் புன்னாலைக்கட்டுவன்

**அனைவரும் வந்து அருள் பெறுக!**
வசந்தி அம்மன் தேவஸ்தானம்.
(74598)

## புலோலி புனித சூசையப்பர் ஆலய வருடாந்த விழா - ஆண்டு 2000

**புனித சூசையப்பர் ஆலய வருடாந்த விழா இம்மாதம் 10 ஆம் திகதி பங்குத் தந்தை வண. பிதா இருதயதாஸ் அடிகள் அவர்களால் கொடியேற்றத்துடன் ஆரம்பித்தது. அதனைத் தொடர்ந்து ஆராதனைகள் நடைபெற்று இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு செபவழிபாடு ஆரம்பமாகி திருச்சுருப பவனி நடைபெறும். அதைத் தொடர்ந்து நற்கருணை வழிபாடும் திருப்பலி பூசையும் இடம்பெறும்.**

**அத்துடன் நாளை 19.03.2000 காலை 7.30 மணிக்கு திருவிழாத் திருப்பலிப் பூசையுடன் விழா நிறைவுபெறும்.**

(C/11451)

## கண்ணீர் அஞ்சலி

### V.S. நவரட்ணம்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். இவரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உரிமையாளர்,
முகாமையாளர், ஊழியர்கள்
**வஸ்தியன் ஹொட்டல்.**
(74600)

## ஆஸ்பத்திரிக்கு தொலைபேசி வசதி இல்லை

சாவகச்சேரி ம.வட்ட வைத்தியசாலைக்கு இதுவரை தொலைத்தொடர்பு வசதி வழங்கப்படவில்லை. தென்மராட்சிப் பகுதியில் பல அரச செயலகங்களுக்கு தொலைத்தொடர்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ள போதும் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு தொலைத்தொடர்பு வசதி வழங்கப்படவில்லை. (ஜ-31)

## முறைசாரா பயிற்சிநெறிகள்

அச்சுவேலி,மார்ச்18

புத்தூர் ஸ்ரீபஞ்சசீக வித்தியாலயத்தில் முறைசாராக் கல்விப்பிரிவின் அனுசரணையுடன் நீர்இறைக்கும் இயந்திரம் திருத்துதல், எழுத்தறிவூட்டல் ஆகிய பயிற்சிநெறிகள், நடைபெறவுள்ளன.

பயிற்சி நெறியில் சேரவிரும்புவோர் அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-11)

## இதய அஞ்சலி

### V.S நவரட்ணம்

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தியறிந்து அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அளப்பரிய இழப்பினால் மனம் வருந்துகின்ற அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

**திரு. திருமதி ஜெறோம்**
மாலா குடும்பத்தினர்.
**திரு. திருமதி சுகே**
குடும்பத்தினர்.
**திரு. திருமதி பாபு**
குடும்பத்தினர்
(74599)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சரஸ்வதி துரைராஜா

(ஆனைப்பந்தி)

யாழ்ப்பாணம் 3ஆம் குறுக்குத்தெருவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி துரைராஜா அவர்கள் 16-03-2000 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற உலகநாதர் துரைராஜா (ஓய்வு உத்தியோகத்தர், மலேசியா) அவர்களின் அன்பு மனைவியும், O.T. நடராஜா (ஓய்வுபெற்ற உதவிக் கட்டுப்பாட்டாளர், குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம், தெஹிவளை), திலகவதி ராஜேந்திரம் (கொட்டாஞ்சேனை), O.T. செல்வராஜா (விவேகா பார்மஸி, கல்வியங்காடு), O.T. ஆனந்தராஜா, காந்திமதி யோகநாதன், O.T. தர்மராஜா(வன்கூவர், கனடா), ராஜசுலோசனா ஸ்ரீதரன் (மொன்றியல், கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் R. ராஜேந்திரம் (ஓய்வு உத்தியோகத்தர், குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம்), T. யோகநாதன் (பிரத்தியேக ஆங்கில ஆசிரியர், ஆனைப்பந்தி), S. ஸ்ரீதரன் (கனடா), புவனேஸ்வரி (தெஹிவளை), கிருஷ்ணலீலாதேதி (ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியை), புவனேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ராதிகா, ரமணன், சுதர்சினி, தனுஷாந்தினி, குகதீபன், ஜெகா, கண்ணன் உங்கு, தனுஷியன், சிந்துஜா, கார்த்திகேயன், கஸ்தூரி ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
O.T. **செல்வராஜா (மகன்),**
(விவேகா பார்மசி, கல்வியங்காடு)
T. **யோகநாதன் (மருமகன்)**
(பிரத்தியேக ஆங்கில ஆசிரியர், ஆனைப்பந்தி)
ஆனைப்பந்தி.
(74582)

## திரு. V.S. நவரட்ணம்

(ஸ்தாபகர், ருவிங்கிள் ஸ்ரார்)

பாண்டியன்தாழ்வு பிரபல வர்த்தகரும், ருவிங்கிள் ஸ்ரார் நிறுவனங்களின் ஸ்தாபகருமான திரு. வைத்திலிங்கம் சிற்றம்பலம் நவரட்ணம் 16-03-2000 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பிரேமாவதியின் அன்புக் கணவரும், திருமதி கனகம்மாவின் அன்புச் சகோதரரும், திரு. சின்னத்தம்பி யோணின் மைத்துனரும், வசந்தி (கனடா), பாலவிநாயகர் (பாலா ருவிங்கிள் ஸ்ரார் Chits & Finance) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திலகரட்ணம் (கனடா), சுமித்ரா ஆகியோரின் அன்பு மாமனாரும், மயூரகாந்த் (கனடா), இரோஜன்காந்த் (கனடா), கௌசிகா (கனடா), தனுப்பிரியன் (St. Johns College), சுபீட்ஷா ஆகியோரின் பாசமிக்க பாட்டனாரும், திரு திலகரட்ணம் (கனடா), திரு. ஆரியதாசன் (இத்தாலி), திருமதி ராணி, திரு. செல்வநாயகம், திருமதி ரஞ்சி ஆகியோரின் தாய்மாமனும், திரு. திருமதி S. நவரத்தினம் அவர்களின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (18.03.2000) சனிக்கிழமை 11-30 மணிக்கு (புதிய நேரம்) நடைபெற்றுத் தகனக் கிரியைக்காகப் பூதவுடல் துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பாலவிநாயகர் (பாலா)**
ருவிங்கிள் ஸ்ரார்,
பாண்டியன்தாழ்வு.
இல. 12/4 A. சந்தனமாதா கோவில் வீதி,
பாண்டியன்தாழ்வு.
(74586)

## சரவணமுத்துகுமாரசூரியர் அருளம்பலகுமாரசூரியர்

உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்தவரும் 11-03-2000 சனிக்கிழமை கொழும்பில் சிவபதமடைந்தவருமான ச. அருளம்பலகுமாரசூரியரின் இறுதிக் கிரியைகள், அன்னாரின் கொழும்பு இல்லத்தில் நாளை (19-03-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் கனத்தை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.

நாளை (19-03-2000) ஞாயிறு காலை 9 மணிக்கு அன்னாரின் உடுப்பிட்டி இல்லத்தில் சிவஸ்ரீ சோமஸ்கந்ததண்டபாணிகதேசிகர் J.P. தலைமையில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெறும்.

தகவல்:
**சு.திருப்பரங்கிரிநாதன்**
இமையாணன்,
உடுப்பிட்டி.
(74597)

# நன்றி நவிலல்

ஊர்காவற்றுறை காம்ப் வீதி இல்லத்தில் 11-03-2000 சனிக்கிழமை நடைபெற்ற எங்கள் பாசமிகு தந்தை

## சபாபதி கணபதி

**அவர்களின் தேகவியோக நிகழ்வில் பங்கு கொண்ட எங்கள் அன்புக்குரிய காம்ப் வீதி உற்றார், உறவினர், அண்ணா சனசமூக நிலையம், அளவெட்டி முற்போக்கு வாலிபர் சங்க நிர்வாகிகள், அங்கத்தவர்கள், சிமெந்துக் கூட்டுத்தாபனம், வடபிராந்திய போக்குவரத்துச் சபை உயர் அதிகாரிகள், ஊழியர்கள், சாரதி, காப்பாளர்கள் மற்றும் அனைவர்க்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

**பிள்ளைகள்**

இராசகோபால் (சிமெந்துக் கூட்டுத்தாபனம்)
ஜீவகாருண்யம, (வ.பி.போ. சபை)
Dr. பேரின்பநாயகம்
(அரசினர் வைத்தியசாலை, மக்கன்னாகம, கண்டி)
நேருஜிநேசன் (கனடா)
(முன்னாள்தொழில்நுட்ப உத்தியோகத்தர், கட்டடத் திணைக்களம், வவுனியா)
திருமதி வீரவாகு மகேஸ்வரி
திருமதி சத்தியானந்தம் கமலகுமாரி

காம்ப்வீதி,
ஊர்காவற்றுறை. (74562)

---

## கல்விசார் உதவிச்செயல் திட்டம்

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தில் தரம் 4இல் கல்வி கற்கும் தந்தையை இழந்த மாணவர்களுக்கான கல்விசார் உதவிச் செயல் திட்டம் நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பிரதமவிருந்தினராக சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.தனபாலசிங்கமும், கௌரவ விருந்தினராக லயன் ஏ.தங்கேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி.வி.பசுபதிப்பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-10)

## பஸ்சேவை நீடிப்பு

வலி.தென்மேற்கு 18 பருத்தித்துறைக்கும் - நவாலிக்கும் இடையில் நடைபெற்ற பஸ் சேவை தற்போது வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிச் சந்தி வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது. தினமும் காலையிலும் மாலையிலுமாக 767 ஆம் இலக்க பஸ்சேவை இடம்பெறுகிறது. (ஐ185)

---

முருகன் துணை

# திருமண அழைப்பு

**அன்புடையீர்,**

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் பங்குனித்திங்கள் 7 ஆம் நாள் (20-03-2000) திங்கட்கிழமை முற்பகல் 10.45 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை உள்ள உத்தர நட்சத்திரமும், சித்தயோகம், இடபலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

| | |
|---|---|
| எமது கனிஷ்ட புத்திரன் | எமது ஏக புத்திரி |
| திருவளர்செல்வன் | திருவளர்செல்வி |
| **நந்தகுமார்** | **செல்வரஞ்சினி** |
| (கிளை முகாமையாளர், யாழ். ப.நோ.கூ.ச., செய்தியாளர் உதயன்) | (ஆசிரியை, நீர்வேலி தெற்கு, இ.த.க. பாடசாலை) |
| **அவர்களுக்கும்** | **அவர்களுக்கும்** |

நீர்வேலி கந்தசாமிகோவில் மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்து இருப்பதால் அத்தருணம் தாங்கள் இஸ்டமித்திர குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை வாழ்த்தி, நண்பகல் விருந்து உபசாரத்திலும் கலந்து சிறப்பித்து ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| **திரு. திருமதி சு. பாலசிங்கம்** | **திரு.திருமதி அ. சண்முகலிங்கம்** |
| **7/1, சுவாமியார் வீதி,** | **நீர்வேலி தெற்கு,** |
| **கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.** | **நீர்வேலி.** |

**(இருவீட்டார் அழைப்பு)** (C/11391)

---

## மிருதங்க ஒலிப்பேழை வெளியீட்டு விழா

**இசைக்கலைமணி திரு. சின்னையா துரைராசா**
அவர்களது
மிருதங்கப் பாட செயல் விளக்க ஒலிப்பேழை

## வெளியீட்டு விழா

இடம்: **கைலாசபதி கலை அரங்கு**
**யாழ். பல்கலைக்கழகம்**

காலம்: **19-03-2000 ஞாயிற்றுக்கிழமை**
காலை 9.00 மணி (புதிய நேரம்)

தலைவர்: **பேராசிரியர் இரா. சிவச்சந்திரன்**
தலைவர், புவியியற்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

**பிரதம விருந்தினர்:**
**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**
துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.

**சிறப்பு விருந்தினர்கள்:**
**பேராசிரியர் அ. சன்முகதாஸ**
பீடாதிபதி, உயர்பட்டப் படிப்புகள் பீடம், யாழ். பல்கலைக்கழகம்.
**பேராசிரியர் செ. பாலச்சந்திரன்**
பீடாதிபதி, கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்.


**நிகழ்வுகள்**

| | |
|---|---|
| மங்கள விளக்கேற்றல்: | திருமதி சாந்தினி சிவநேசன் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் |
| இறைவணக்கம்: | இசைக்கலைமணி திரு. செ.ஞானசொரூபன இசைஆசிரியர் |
| வரவேற்புரை: | இசைக்கலைமணி திரு. அண்ணாமலை செல்வரத்தினம் யாழ். பல்கலைக்கழகம். |
| ஆசியுரை: | ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் இரண்டாவது குருமகா சன்னிதானம் நல்லை ஆதீனம். மகா கனம் கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசன தென்னிந்திய திருச்சபை யாழ். மறை மாவட்டம் அருட்கவி சீ. வினாசித்தம்பி இந்துபேரவைத் தலைவர் |
| தலைமையுரை: | |
| வாழ்த்துரைகள்: | திரு. க. சண்முகநாதன் அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம். திரு. ச. விக்னராசா யாழ். மாவட்ட நீதிபதி கலாநிதி சபா. ஜெயராசா தலைவர் நடனத்துறை, யாழ்.. பல்கலைக்கழகம். திரு. நா. வி. மு. நவரத்தினம M. Phil தலைவர் இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம். கவிஞர் சோ. பத்மநாதன பிரதிக்கல்விப்பணிப்பாளர் சங்கீதபூஷணம திரு. சு.கணபதிப்பிள்ளை ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப்பணிப்பாளர். பிரம்மஸ்ரீ அ. நா. சோமாஸ்கந்தசர்மா M.Phil "வாத்திய விசாரதா" சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம். |
| பிரதம விருந்தினர் உரை | |
| சிறப்பு விருந்தினர்கள் உரை | |
| ஒலிப்பதிவு நாடாவை வெளியிட்டு வைத்தல் | பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம். |
| முதற்பிரதி பெறுபவர். | திரு. E. S P. நாகரத்தினம் |
| ஆய்வுரை | சங்கீதரத்தினம் திரு. M. சிதம்பரநாதன் பகுதி நேர விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம். |
| பட்டமளித்து பொன்னாடை போர்த்தல் | 'மிருதங்க ஞானவாரி' |
| பதிலுரை: | |
| நன்றியுரை: | இசைக்கலைமணி திரு. S. திவாகரன் |

(74520) **விழாக்குழுவினர்.**

---


கொலஸ்ட்ரோல் அற்ற




**'விமல் மார்க்'**

*மரக்கறி சமையல் எண்ணெய்*
**(R.B.D. Palm Olein)**

*** உங்கள் நாளாந்த சாப்பாட்டிற்கு உகந்த வகையில் பாம் (PALM) பழங்களிலிருந்து பெறப்பட்ட சுத்தமான மரக்கறி எண்ணெய் மற்றும் கொலஸ்ட்ரோல் (Cholesterol) அற்றதும் வைட்டமின் E ஊட்டச்சத்து நிறைந்ததும். கைக்கு அடக்கமான பக்கற்றுக்களில் விற்பனையாகிறது.**

*** மற்றும் கைக்கு அடக்கமான பைக்கற்றுகளில் சுத்தமான வெள்ளை தேங்காய் எண்ணெயும் விற்பனையாகிறது.**

**யாழ். ஏக விநியோகஸ்தர்கள்,**

# றூபா பன்முக வர்த்தகம்

104, A ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
ரெலிபோன் - 2479

(74529)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், கல்லுரல், ஆட்டுக்கல், மின்மோட்டர் (Fish Tank motor) விற்பனைக்குண்டு. தொடர்பு பொ. நாகநாதன் கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை. நேரம் காலை 9.00 மணி - 4.00 மணி வரை. (74323)

மிக உன்னத நிலையிலுள்ள Ford Prefect '105E ' (Overhead Valve) 4 Sri, Honda Dax ST 50 Motor Cycle உடன் விற்பனைக் குண்டு. 20, சங்கத்தானை ஒழுங்கை டச்வீதி ஊடாக சாவகச்சேரி. (74469)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த 1963 இல் பிறந்த கனடாவில் நிரந்தர தொழில் புரியும் அழகிய மணமகனுக்குத் தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க் கின்றனர். தொடர்புகளுக்கு: விளம் பர இல. 1023, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (74473)

யாழ். இந்து கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த ஜேர்மனியில் நிரந்தர வசிட்புரிமை பெற்ற நிரந்தர தொழில் புரியும் நற்குணமும் அழகும் நிரம் பப் பெற்ற 1966 இல் பிறந்த செவ் வாய் தோஷமற்ற, கிரகபாவம் குறைந்த மணமகனுக்குத் தகுதியு டைய மணமகளைப் பெற்றோர் எதிர் பார்க்கின்றனர். உங்கள் தொடர்பு களுக்கு: விளம்பர இல. 1024 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (74474)

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த சைவ போசனமும் 29 வயது நிரம்பப் பெற்ற பட்டதாரி ஆசிரியையும் நற்குணமும் அடங்கப் பெற்ற மணமகளுக்கு பெற்றோர் தகுந்த வரனை எதிர்பார்க்கின்றனர். தொடர்புகளுக்கு: விளம்பர இல. 1022, மே/பா உதயன், யாழ்ப் பாணம். (74472)

### இறைச்சிக்கோழி விற்பனை

Broiler, Cullbirds சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தின மும் பெற்றுக் கொள்ளலாம். நியாய மான விலை, நுட்பமான நிறுவை 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (74453)

இறைச்சிக்கோழி (புறொயிலர்) விற்பனைக்கு உண்டு. சகல தினங் களும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- 40 கோயில்வீதி, யாழ்ப் பாணம். (74521)

### திருத்த வேலைக்கு

சகலவித கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஷ் கண், மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத் துறைசார்ந்த ஏனைய துணைக் கருவிகளும் திருத்திக் கொடுக்கப் படும். க. நாராயணசாமி, இல. 301, கஸ்தூரியார்வீதி மேல்மாடி (கன்னா திட்டிச் சந்திக்கு அருகில்) (74441)

### நாடகம்

வானொலி நாடகப் போட்டிக்கு நாடகம் எழுதுகிறீர்களா? 300 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாடகங்களை வாசியுங்கள். 1. யாழ்ப்பாணமா? கொழும்பா? 2. நாடகம் எழுதுவது எப்படி? நாடகம் எழுதுவதை விளக் கும் நூல்கள் ரூபா 50. (74470)

### தவறிவிட்டது

இல-18, விதானையார் வீதி, ஈச்ச மோட்டை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கனகரெத்தினம் சிவபாதசுந்தரம் என்பவருடைய தேசிய அ.அ. (இல-362560810V)யும் விசேட அ.அ (இல-0901Or.6237)யும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பெரியகடை சிவராஜா ரெக்ஸ்ரை லில் அல்லது மேற்கூறிய முகவரி யில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும் (74515)

### உழவு இயந்திரம்

கைதடி,மார்ச்18

தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்கம் தனது பாவனைக்கும், விவ சாயிகளுக்கு உதவும் நோக்கமாக வும் நான்கு சக்கர உழவு இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்துள் ளது. (இ-74)

### வைத்தியசேவை

தாளையடி,மார்ச்18

அண்மைக்கால இராணுவ நடவ டிக்கை காரணமாக உடுத்துறை, வத்திராயன், மருதன்கேணி கிராமங் களில் இருந்து இடம்பெயர்ந்து மாமுனை, செப்பியன்பற்றுக் கிராமங் களில் தங்கி உள்ள மக்களுக்கான வைத்திய சேவையை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பா ணக்கிளையின் நடமாடும் வைத்திய சேவைப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (இ-ரி)

### முறைசாராக்கல்வி பரீட்சை

புன்னாலைக்கட்டுவன்,மார்ச்18

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் நடத்தப்பட்ட முறைசாராக்கல்விப் பாடநெறியில் கலந்துகொண்ட மாணவர்களுக் கான பரீட்சை வெகுவிரைவில் நடை பெறவுள்ளது. இப்பாடநெறிகளை பயின்ற மாணவர்கள் தமது நிலை யம் அமைந்துள்ள பாடசாலை அதி பர்களிடம் தொடர்பு கொண்டு பரீட் சைக்கு தோற்றுவதற்கான ஆயத் தங்களை மேற்கொள்ளுமாறு தென் மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மு.வ.செல்வராஜா கோரியுள்ளார். (இ-133)

### விவரம் சேகரிப்பு

புன்னாலைக்கட்டுவன்,மார்ச்18

தென்மராட்சி கல்வி வலயப்பாட சாலைகளில் பிறப்பு அத்தாட்சிப் பத் திரம் சமர்ப்பிக்காமல் கல்வி பயிலும் மாணவர்களின் விவரங்கள் கோட் டக்கல்வி அதிகாரிகளினால் தற் போது சேகரிக்கப்பட்டு வருகின்றன.

குடாநாட்டில் பெருமளவு மாண வர்கள் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இல்லாமல் இருப்பது அண்மையில் மேற்கொண்ட ஆய்வில் கண்டுபிடிக் கப்பட்டதை அடுத்தே மேற்படி மாணவர் விவரங்கள் சேகரிக்கப் பட்டு வருகின்றன. (இ-133)

### ஊர்காவற்றுறைக்கு மின்சாரம் இல்லை

நெடுந்தீவு,மார்ச்18

மீளக்குடியமர்ந்து நான்கு வரு டங்களாகியும் ஊர்காவற்றுறைக்கு மின்சாரம் வழங்கப்படாது இருப்பது குறித்து அப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த அனேகர் - குறிப்பாக ஆசிரியர் - தமது சொந்த இடங்களில் குடியேற ஆர்வம் கொண்டிருப்பதாகவும் எனி னும் மின்சார வசதிகள் ஏற்படுத்தப் படாமையினாலேயே யாழ் நகரில் தங்கியிருப்பதாகவும் புனித அந் தோனியார் கல்லூரி உதவி அதிபர் வண.யேசுதாசன் தெரிவித்தார். (இ.111)

### குறிகாட்டுவான் நெடுந்தீவு படகுச்சேவை

நெடுந்தீவு,மார்ச்18

கடந்தவாரம் முதல் நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்கு காலை 8 மணிக்கும் பிற்பகல் ஒரு மணிக்கு மான படகுச் சேவை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

தனியார் படகான அக்குவாட்டிக் மற்றும் கூட்டுறவுச் சங்கப் படகு ஆகியவை இச்சேவையில் ஈடுபட் டுள்ளன. குமுதினிப் படகு சேவைக் குத் திரும்பும் வரை மேற்படி படகு கள் இரண்டும் தினசரி சேவையில் ஈடுபடும். (இ-111)

### மத்தியஸ்தர்கள் வகுப்புகள்

யாழ்ப்பாணம்,மார்ச்18

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கம் புதிய மத்தி யஸ்தர்களுக்கான வகுப்புகளை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் முற்பகல் 11 மணிமுதல் யாழ். இந் துக்கல்லூரியில் நடத்தி வருகின் றது. ஏப்ரல் இறுதி வாரத்தில் மத்தி யஸ்தர் தேர்வுப்பரீட்சை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

எமது வாழ்வியல் அவலங்களின் தரிசனம்

### தேவை

கல்வியங்காட்டில் தொலைத் தொடர்புநிலை யம், பான்சி கடைகளுக்கு யுவதிகள் உடன் தேவை.

விவரங்களுக்கு விளம்பரஇலக்கம் 1025 மே/பா உதயன்

(74438)

## நீங்கா நினைவில் நிற்பவர்கள்

முதலாம் ஆண்டு நினைவு நாள் — எட்டாம் ஆண்டு நினைவு நாள்



அமரர்
**சின்னராசா சிவாகரன்**
(V. S. B. களஞ்சியப் பொறுப்பாளர், உரிமையாளர், அம்பாள் ஸ்ரோர்ஸ்)

மண்ணில் 1971-11-04 — விண்ணில் 1999-03-29



அமரர்
**சின்னராசா கிருபாகரன்**

மண்ணில் 1975-07-24 — விண்ணில் 1992-04-27

'ஊரோடு பற்று வைத்து
உறவுக் கெல்லாம் நிழல் கொடுத்து
வேரோடு சாய்ந்த உந்தன்
வேதனையில் தவிக்கின்றோம்
ஓராண்டு ஆயிரமாய்
மாறிடினும் உனை மறவோம்
சீராளா சிவாகரனே
சிவபதத்தில் சாந்தி காண்பாய்'

எங்கள் உயிர்க்காதரவு
உங்கள் துணை என்றிருந்தோம்
வந்த கடன் முடிந்த தென
விதி வழியே சென்றுவிட்டீர்!
எங்கள் அருங்குல விளக்கே!
எமதன்பின் ஜீவிதமே
எந்தப் பிறப்பெடுத்தாலும்
உங்கள் நினைவகன்றிடுமோ!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

என்றும் உங்கள் நினைவில்
அப்பா, அம்மா, அக்கா, அத்தான், சகோதரிகள்.

பிடாரி கோவிலடி, ஆனைக்கோட்டை.

**V. S.B. ஸ்தாபனத்தார்** (74406)


KOBE KOBE KOBE KOBE KOBE

## நீங்கள் வாங்கும் பொருள் தரமானதா?

உங்கள் பணத்திற்கு நாங்கள் உத்தரவாதம் தருகின்றோம்.

உங்களுக்குத் திருப்தி இல்லையெனில் முழுப்பணத்தை யும் மீளப்பெறும் வசதியோடு வருகின்றன!

KOBE

அன்டனாக்களும் பூஸ்டர்களும்

இலங்கையில் விற்பனையில் முதலிடம் வகிக்கும் தரமான பொருள்கள்

உங்களுக்கு அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தங்கு தடையின்றி தெட்டத் தெளிவாகப் பார்த்து மகிழ வேண்டுமா?

*கவலை வேண்டாம்!*

*இப்போது!*

32 வெவ்வேறு வடிவங்களில் அன்டனாக்களும், 21 வடி வங்களில் பூஸ்டர்களும்

இலங்கையில் எப்பாகத்திலும் பாவனைக்குகந்த தரத்துடன் கிடைக்கின்றது.

LANKA NIPPON

No. 18, Keyzer Street, Colombo - 11
Tel: 437735 Fax: 437736
No. 10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junc, Colombo - 4
Tel: 589992

'KOBE தரத்தின் சின்னம்' (C/10933)


18-03-2000


ஐக்கிய

UNOPS/



இதறகென முதலில் ... துக் கூட்டுறவுச்சங்க ... டாக கடன் பெற்ற ... குழு சென்று உ... திரட்டியது.

மிதிவெ...



நீர்வேலிப்பகுதியில் மிதி...

யாழ்ப்பாணத்தில் ... மிதிவெடியகற்றல் செ... நீர்வேலிப்பகுதியில் கா... சிம்பாப்வே நிபுணர் கு... றல் செயற்பாடு நடை...

# ஆசிரிய கலாசாலை அனுமதி நேர்முகப் பரீட்சை அடுத்தவாரம்

காரைநகர்.மார்ச்18

கோப்பாய், பலாலி ஆசிரிய கலாசாலைகளுக்கு 2000ஆம் ஆண்டுக்கான ஆசிரிய மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகத் தேர்வுக்காக கொழும்பில் உள்ள கல்வி அமைச்சின் ஆசிரிய கல்வி நிர்வாகக் கிளையின் கல்விப் பணிப்பாளரினால் அனுப்பப்பட்ட கடிதங்கள் பெரும்பாலான விண்ணப்பதாரிகளுக்குக் கடந்த வியாழனன்று கிடைத்துள்ளன.

யாழ். கல்வித் திணைக்களத்தில் அடுத்த வாரம் முதல் நடைபெறவுள்ள நேர்முகப்பரீட்சையில் பலாலி ஆசிரிய கலாசாலைக்கு வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம், உடற்கல்வி, விவசாயம், ரோமன் கத்தோலிக்கம் ஆகிய பாடநெறிகளுக்கும், கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆரம்பக் கல்வி. இந்துசமயம், தமிழ், மனையியல், சங்கீதம், சித்திரம், நடனம் ஆகிய பா நெறிகளுக்கும் பயிற்சியாளர்கள் சேர்த்துக்கொள்ளப் படவுள்ளனர். (ஐ-73)

## உற்பத்திப் பொருள்கள் தேக்கம்

# நெசவு நிலையங்களை மூடவேண்டிய நிலை

யாழ். மாவட்டத்தில் நெசவு உற்பத்திப்பொருள்களுக்கு மக்களிடையே மதிப்புக் குறைந்து வருவதால் தொழிற்றுறைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்டு வரும் நெசவு உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்கள் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாத் தெரிவிக்கப்படுகிறது.

சேலைகள், படுக்கை விரிப்புக்கள், துவாய்கள் போன்ற உள்ளூர் நெசவு உற்பத்திப் பொருள்களை வாங்காது வெளிநாட்டு உற்பத்திகளையே மக்கள் அதிகம் நாடி வருவதால் அவற்றின் விற்பனை குறைந்துள்ளது.

உற்பத்தி செய்யப்படும் நெசவுப் பொருள்கள் தேக்கமடைந்து வருகின்றன.

நெசவு உற்பத்தி நிலையங்களில் வழங்கப்படும் பயிற்சிகளைப் பெறுபவர்கள் நெசவு உற்பத்தியை மேற்கொள்ளப் பின்னடித்து வருகின்றார்கள்.'

கொழும்பிலிருந்து பலத்த சிரமத்தின் மத்தியில் நெசவு நூல்கள் இறக்குமதி செய்யப்பட்டுப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்ற போதும் அதனைச் சந்தைப்படுத்த முடியாமல் உள்ளது.

மேற்குறிப்பிட்ட காரணங்களினால் நெசவு நிலையங்கள் மூடப்படும் நிலைக்கு வந்தள்ளதாகத் தொழிற்றுறைத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.(ஐ-5-10)

## நாளை

கொழும்புத்துறை,மார்ச்18

யாழ்.பாலர் கல்விக் கழகத்தின் கீழ் இயங்கும் பாலர் பாடசாலை மாணவர்களின் பேச்சுத்திறன் காணும் வைபவமும், பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு நடைபெறவுள்ளன.

யாழ் நீராவியடி நாவலர் பாலர் சோலை மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வுகளுக்கு பாலர் கல்விக் கழகத் தலைவர் இ.தவகோபால் தலைமை வகிப்பார். (ஐ-க-30)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்18

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் நடத்தும் அகத்தியர் தேவாரத் தி[illegible]டு முற்றோதல், பன்னிரு திருமுறைப்பாராயணம் ஆகிய நிகழ்வுகள் நாளை காலை 6 மணி முதல் நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளன. (க)

* * *

கொழும்புத்துறை,மார்ச்18

தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நாளை காலை 7.30 மணிமுதல் பிற்பகல் 5.30 மணிவரை திருவாசகம் முற்றோதல் நிகழ்வு நடைபெறும்.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் இடம்பெறும் இந் நிகழ்வுக்கு ஆச்சிரம சுவாமி செ.மோகனதாஸ் தலைமை வகிப்பார். (ஐ.க)

## முழுநிலாநாள் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச்18

'குடும்பத்தில் இளைஞர்' என்ற கருப்பொருளில் அமைந்த முழுநிலா நாள் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு 'அகவொளி' குடும்ப வளத்துணை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவி இயக்குநர் ரி. சிவதட்சணாமூர்த்தி கருத்துரை வழங்குவார்.

(ஐ-10)

யாழ். பல்கலைகழக கைலாசபதி கலையரங்கில்


திருவருள் மிகு ஸ்ரீ நாகராஜராஜேஸ்வரி அம்பாள் திருக்கோவில்

**கௌரவ பட்டமளிப்பு விழா**

மேற்படி ஆலயத்தில் (05-03-2000) ஞாயிற்றுக் கிழமையிலிருந்து நிகழ்வுற்றுவரும் அலங்கார உற்சவத்தில் தினமும் "இராமாயணம்" என்ற பொருள்பற்றி ஆன்மீக சொற்பொழிவாற்றிய

**'ஷர்மாஜீ'**

அவர்கட்கு 20-03-2000 திங்கட்கிழமையன்று ஆலயத் தொண்டர்களால்

**'ஆன்மீகக் காவலர்'**

என்ற பட்டம் வழங்கி 'பொன்னாடை' போர்த்திக் கௌரவிக்கப்படும்.

இறை தொண்டில்
நவாலி அம்பிகேஸ்வரம்
தொண்டர்கள்.

(74587)



**தொடர்பு கொள்ளவும்**

கபிலஸ் ஆனந்தராசா, சங்கானை தெற்கு, சங்கானை, என்பவரது தேசிய அ.அட்டை (812162 560V), வீசேட அ.அட்டை (0904022203) இரண்டையும் வைத்திருப்போர் மேற்கானும் விலாசத்திற்கு உடனடியாக தொடர்பு கொள்ளவும். அல்லது உங்கள் விலாசத்தை அறியத் தரவும்.

நீங்கள் விரும்பும் சன்மானம் வழங்கப்படும்.

சங்கானை. ஆ. கபிலஸ்

(74578)




உ
சிவமயம்

**திருமண அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் பங்குனித்திங்கள் 7 ஆம் நாள் (20-03-2000) திங்கட்கிழமை மாலை 6.15 மணிமுதல் 7. 45 மணிவரை உள்ள அத்த நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய துலா லக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்

எமது சிரேஷ்ட புதல்வன்
திருநிறைசெல்வன்
**மோகன்**
அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புதல்வி
திருநிறைசெல்வி
**சிவகௌரி**
அவர்களுக்கும்

திருமாங்கல்யதாரண வைபவம் நடைபெற விநாயகர் திருவருள் கூடியமையால் இவ்வைபவத்தில் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமணம் நடைபெறும் மண்டபம்
SANGAM HALL,
210, BURNT OAK BROADWAY, EDGWARE, MIDDX HA8 OAP LONDON.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி குலவீரசிங்கம்,
வேலணை வடக்கு, வேலணை,
இலங்கை.

திரு. திருமதி மணிவாசகம்பிள்ளை,
வேலணை மேற்கு, வேலணை,
இலங்கை.

(இருவீட்டார் அழைப்பு) (C/74564)


**பணிந்தோம் பதம் அருள்வாய்**

மணியாய் ஒளி யானாய் நல்ல மலராய் மணமானாய்
அணிசேர் தமிழ் ஆனாய் அருள் மொழியின்
பொருளானாய்
பிணிதீர் மருந்தானாய் பெரும் பணி ஊர்
உருவானாய்
பணிந்தோம் பதம் அருள்வாய் வண்ணை
வைத்தீஸ்வரத்திறைவா!

\- சிற்பி


**கண்ணீர் அஞ்சலி**

எமது நண்பரும் ருவிங்கிள்
ஸ்ரார் பேக்கரி உரிமையாளருமாகிய
திரு. ந. பாலவிநாயகரின்
பாசமிகு தந்தை
**வை. சி. நவரத்தினம்**

அவர்களது மறைவுச் செய்தி கேட்டு கவலையடைகின்றோம் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவர்களது துயரில் நாமும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உரிமையாளர், ஊழியர்கள்.
லீலா வெதுப்பகம்,
சங்கானை.

(74596)



**கண்ணீர் அஞ்சலி**

எமது பங்காளர்
திரு. ந. பாலவிநாயகர்
அவர்களின் பாசமிகு தந்தை
**வை. சி. நவரத்தினம்**

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா, சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பங்காளர், பணியாளர்கள.
எஸ்.ஜே.பி.ரேட் ஏஜென்ஸி,
39, 3 ஆம் குறுக்குதெரு,
யாழ்ப்பாணம்.

(74595)



**கண்ணீர் அஞ்சலி**

ருவிங்கிள் ஸ்ரார் பேக்கரி உரிமையாளர்
திரு. ந. பாலவிநாயகர்
அவர்களின் அன்புத் தந்தை
**சிற்றம்பலம் நவரத்தினம்**

அவர்களின் மரணச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கரசன் எலெக்ட்ரிக்கல்ஸ்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(74593)



**கண்ணீர் அஞ்சலி**

யாழ். வைத்தியசாலையின் பங்காளர்
லயன் ந. பாலவிநாயகரின்
அன்புத் தந்தை
**V.S. நவரத்தினம்**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ் வைத்தியசாலை
வைத்தியர்கள், தாதிகள், ஊழியர்கள்,
சிற்றூழியர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்,
பொறுப்பாளர் (O.S.C)

(74592)



**கண்ணீர் அஞ்சலி**

பாண்டியன்தாழ்வு 'ருவிங்கிள் ஸ்ரார்' நிறுவன உரிமையாளர்
N. பாலவிநாயகர்
அவர்களின் அன்புத்தந்தை
**V. S. நவரத்தினம்**
(பிரபல வர்த்தகர், பாண்டியன்தாழ்வு)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி கா.சண்முகநாதன்,
குடும்பத்தினர்.
இல. 227, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

(74591)

## இந்தியத் தூதர் மீனவரைப் பார்வையிட்டார்

கடந்த மாதம் 21 ஆம் திகதி காங்கேசன்துறைக் கடற்பரப்பில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்து சிகிச்சைக்காக யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இரண்டு தமிழக மீனவர்களையும் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள இந்தியப் பிரதித் தூவர் திரிபாதி நேற்று முன்தினம் பார்வையிட்டார்.

மீனவர்களின் நலன்கள் குறித்துக் கேட்டறிந்த பிரதித்தூதுவர் மீனவர்களை தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைப்பது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

யாழ்.ஆஸ்பத்திரிப்பணிப் பாளரின் அலுவலகத்தில் கூட்டம் ஒன்றும் இடம்பெற்றது. (ஐ-7-139-17)

26.02.2000 ஆம் திகதி
ஞாயிற்றுக்கிழமை

யாழ்.குடாநாட்டு மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் சிறந்த சேவை ஆற்ற மகிழ்வுடன் முன்வந்துள்ளது நெல்லியடி

✲ ஆனந்த் மணப்பந்தல் சேவை ✲

★ மனங்கவர் வர்ணங்களுடன் கூடிய
நீரோடிச் சொக்கட்டான் மணப்பந்தல்

★ அலங்கார அமைப்புகளுடன் கூடிய
பிளாஸ்ரிக் கதிரைகள்

★ அழகு மிளிரும் வேலைப்பாடுகள் கொண்ட
மணவறை

★ கண்கவர் கட்டமைப்புக் கொண்ட
அலங்கார மாலைகள்

★ இன்னிசைக் கானம் வழங்கும் நவீன ஒலி பெருக்கிச் சாதனங்கள் பொருத்திய
பொக்ஸ் செற் (CD)

★ மின் விசிறிகள் ★ இரும்புக் கதிரகள் ★ பிளாஸ்ரிக் பாய்கள்

போன்ற அமைப்புகளுடன் சேவை வழங்குகின்றோம். என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

திருமண வைபவம், பூப்புனிதநீராட்டுவிழா, பிறந்ததினக் கொண்டாட்டம், வேறு எந்த வைபவம் என்றாலும் நீங்கள் திருப்தி அடையும் விதத்தில் சேவை ஆற்றுவோம்.
உங்கள் மகிழ்ச்சியே எங்கள் சேவை

ஆனந்த் மணப்பந்தல் சேவை

திரு.V.ஆனந்த்
முருகன் கோயில் வீதி, நெல்லியடி,
கரவெட்டி.

(C/11445)

## பிற்போடப்பட்டுள்ளது

எ.. கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தினால் இன்று (18.03.2000) சனிக்கிழமை நடத்தப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களினால் 05.05.2000 திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

*உயர்தர மாணவர் மன்றம்*

பளை மத்திய கல்லூரி,
பளை. (74584)

## கண்ணீர் அஞ்சலி

லயன் ந. பாலவிநாயகரின்
அன்புத் தந்தையார்
V. S. நவரத்தினம்

அன்னாரின் பிரிவுச் செய்திகேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறுற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

லயன் க. மு. பத்மநாதன்
குடும்பத்தினர்.

WESCO, 470 (250),
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (C/11448)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். வைத்தியசாலையின் பங்காளராகிய
லயன் ந. பாலவிநாயகரின்
அன்புத் தந்தையார்
V. S. நவரத்தினம்

இறைபதம் அடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயுருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகிகள்,
லயன் க. மு. பத்மநாதன்,
லயன் சி. குலேந்திரராஜா,

யாழ். வைத்தியசாலை,
284, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (C/11447)

# 5 ஆம் ஆண்டு நெஞ்சகலா நினைவஞ்சலி



## அமரர் பொன் சத்தியமூர்த்தி

(பொது முகாமையாளர், வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க கொத்தணி, யாழ்.மாவட்ட சி.க.கூ. சங்க சமாச நெறியாளர், யாழ்.மாவட்ட சித்த வைத்திய கூட்டுறவுச் சங்க இயக்குநர்)

மலர்வு 23-06-1949 — உதிர்வு 15-03-1995

திதி:18.03.2000

பொழுதெல்லாம் உறவாடிக் கொண்டோமே நாங்கள்.
பிரியாத உறவையேன் பிரித்தோடினீர்கள்.
நினைவென்ற ஒன்றுள்ள மட்டும் நாம் மறவோம்.
நெஞ்சத்து அஞ்சலிகள் நின்னடிக்கே இடுவோம்.
நீங்கள் எமை விட்டகன்று ஆண்டுகளோ ஐந்து.
நாமுங்கள் நினைவுநாள் தனிற் கூடுவோமே
*சாந்தி பெற வேண்டுகின்றோம்.*

*நிழல் வாடி,*
*கரவெட்டி.*

*மனைவி, மகன், மாமி*
*சகோதரர், குடும்பத்தினர்.*

*அன்ரன் செல்வராசா குடும்பத்தினர்*
*நண்பர்கள், ஊழியர்கள்.*

**மொடேர்ன் ஸ்ரோர்ஸ்,**
நெல்லியடி, கரவெட்டி.

(C/11425)

UNOPS
இதழ் :13
March 2000

# ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடான ஐக்கிய நாடுகள் திட்ட சேவைகள் அலுவலகம்

## UNOPS/JRRP இன் சுயதொழில் முயற்சிக்கடன் திட்ட பயனாய்வு



UNOPS/JRRP இன் மக்கள் பங்கேற்பு அணுகு முறைக் குழு யாழ்ப்பாணத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் UNOPS/JRRP இனால் பல நோக்குக் கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கிகளினூடாக வழங்கப்பட்டு வருகின்ற சுயதொழில் முயற்சிக்கடன் மக்களிற்கு எவ்வகையில் பயன்படுகின்றது என்பவற்றை அடையாளம் காண்பதற்காக ஓர் ஆய்வினை மேற்கொண்டது.


இதற்கென முதலில் சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கிகளினூடாக கடன் பெற்ற பயனாளிகளிடம் இக் குழு சென்று உரையாடி தகவல்களை திரட்டியது.

இத்தகவல்களின் மூலம் அவர்கள் பெற்ற முடிவுகளை இவ்வாண்டு மார்ச் மாதம் UNOPS/JRRP அலுவலகத்தில் சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர், வங்கிச்சேவைகள் முகாமையாளர், அப்பகுதி கிராமிய வங்கிகளின் முகாமையாளர்கள், UNOPS/JRRP இன் சுயதொழில் முயற்சிக்கடன் திட்டத்துடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோர் முன்னிலையில் மக்கள் பங்கேற்பு அணுகுமுறைக் குழுவினர் சமர்ப்பித்தனர். இவ்வாய்வின்போது

- ☆ அதிகமானோர் விவசாய முயற்சிகளிற்காகவே கடன் பெற்றுள்ளனர்.
- ☆ தொழில் நிலையங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டதாலும், ஏற்கனவே உள்ள தொழில் நிலையங்கள் விரிவுபடுத்தப்பட்டதாலும் வேலைவாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.
- ☆ இத்திட்டத்தினால் உருவாக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலைகள், மின்உபகரண விற்பனை நிலையங்கள், தொலைத்தொடர்பு நிலையங்கள் என்பவற்றால் அம்மக்கள் உட்பட கிராமங்கள் முன்னேற்றமடைவதைக் காணக்கூடியதாக உள்ளது.
- ☆ வீட்டுப்பெண்கள் வீட்டிலிருந்தபடியே சிறுதொழில்கள் ஆரம்பித்துள்ளனர்.
- ☆ தொழிலாளி முதலாளிகளிடையே புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளது.
- ☆ குடும்ப நல்லுறவு மட்டுமன்றி அயலவர், உறவினர், வெளிநாட்டுறவினர்களிடையேயும் நல்லுறவு ஏற்பட்டுள்ளது.
- ☆ குடும்ப வருமானம் அதிகரித்திருப்பதுடன் சேமிப்பும் அதிகரித்துள்ளது.
- ☆ இதனால் மீளச்செலுத்துகை சீராக நடைபெறுகின்றது.
- ☆ கூடிய வட்டியில் தனியாரிடம் கடன் பெறுவதைவிட இத்திட்டத்தின் மூலம் பெறும் கடன் பயனாளிகளின் சுமையை குறைக்க உதவுகிறது

என்பன போன்ற பல பயன்களை எடுத்துக் கூறினர். அத்துடன் கூட்டுறவுச் சங்கங்கள் இக்கடனை வழங்குவதில் மேலும் எவ்வகையில் வினைத்திறனுடன் செயற்பட முடியும் என்பதையும் விவாதித்தனர்.
இப்பயனாய்வு இம்மாதம் 23 ஆம் திகதி UNOPS/JRRP இனால் கடன் வழங்கப்பட்ட பத்து கூட்டுறவுச் சங்கங்களின் முன்னிலையிலும் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

## ஏழாலை மத்திய மருந்தகம் கையளிப்பு



UNOPS/JRRP இனால் இரண்டு லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வந்த ஏழாலை மத்திய மருந்தகப் புனருத்தாரண வேலைகள் நிறைவடைந்துள்ளது.

இக்கட்டடத்தினை UNOPS/JRRP இன் சுகாதார ஆலோசகர் Dr.அஞ்சலீகா பதில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் Dr.உமா சிவபாதசுந்தரம் அவர்களிடம் இம்மாதம் 3 ஆம் திகதி கையளித்தார்.

தற்போது தற்காலிகமாக இயங்கிவரும் ஏழாலை மத்திய மருந்தகத்தை இப்புதிய கட்டடத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

## மிதிவெடியகற்றல் செயற்பாடு



நீர்வேலிப்பகுதியில் மிதிவெடியகற்றல் செயற்பாடு

யாழ்ப்பாணத்தில் இவ்வருடத்திற்கான மிதிவெடியகற்றல் செயற்பாட்டின் ஆரம்பமாக நீர்வேலிப்பகுதியில் கடந்த சில வாரங்களாக சிம்பாப்வே நிபுணர் குழுவினால் மிதிவெடியகற்றல் செயற்பாடு நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இவ்வாண்டு பெப்ரவரி மாதப்பிற்பகுதியில் யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரிச் சுற்றாடலில் முன்னைய செயற்பாட்டின் போது அகற்றப்படாதிருந்த இடங்களிலும், கோப்பாய் பகுதியிலும் மிதிவெடியகற்றல் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் பத்துப் பேராகவிருந்த Mine Tech நிறுவனத்தைச் சேர்ந்த சிம்பாப்வே நிபுணர் குழுவினர் இவ்வருடம் இருபத்தாறு பேராக அதிகரித்ததைத் தொடர்ந்து தற்போது ஒரே சமயத்தில் இம்மூன்று இடங்களிலும் மிதிவெடியகற்றல் செயற்பாடு நடைபெற்று வருகின்றது.

அத்துடன் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட நாயன்மார்க்கட்டுப் பிரதேசத்தில் நடைபெற்றுவரும் மிதிவெடியகற்றல் செயற்பாடுகளின் போது மக்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பன பற்றி மக்களிற்கு விளக்குவதற்கான கலந்துரையாடல் இம்மாதம் 9 ஆம் திகதி அப்பகுதியில் நடைபெற்றது.



கோப்பாய் பகுதியில் அதிகாரிகளின் விஜயம்

மிதிவெடியகற்றல் செயற்பாடு பற்றி **UNOPS/JRRP** இன் கண்ணிவெடி செயற்றிட்ட இணைப்பாளர் திரு.எடி சாம்ஸ், Mine Tech நிறுவன முகாமையாளர் திரு.ஜோண் டிக்சன் ஆகியோர் அப்பகுதி கிராம சேவகர், சமுர்த்தி அலுவலர், கோப்பாய் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரிற்கு விரிவாக விளக்கினர். மேலும் மிதிவெடியகற்றல் செயற்பாடு நடைபெறும் போது அவ்விடங்களில் உள்ள மக்கள் மிதிவெடியகற்றும் நிபுணர்களிற்கு போதிய ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அப்பிரதேசங்களில் இடப்படும் அடையாளங்களை அகற்றக்கூடாது. காலை 8 மணியிலிருந்து மாலை 3 மணிவரை அப்பிரதேசம் மிதிவெடியகற்றும் நிபுணர்களுடைய பிரதேசமாக கருதப்படும் என்பன போன்ற பல முக்கிய விடயங்கள் விளக்கப்பட்டது.

## UNOPS/JRRP இன் நிறைவடைந்த திட்டங்களின் பயன்கள்

### பாபறா மல்வாணி கணனிப்பயிற்சி நிலையம்



UNOPS/JRRP இன் கடந்த வருடத்திற்குரிய திட்டங்களில் ஒன்றான *பாபறா மல்வாணி கணனிப்பயிற்சி நிலையம்* இவ்வருடம் முதல் UNOPS/JRRP இன் மேற்பார்வையின் கீழ் சுயமாக இயங்கி வருவதை எமது முன்னைய இதழ்களின் மூலம் அறியலாம்.

கடந்த வருடம் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் உள்ள இளம் பெண்களிற்கு இலவசமாக கணனிப்பயிற்சியை வழங்கிய இந்நிறுவனம் தற்போது UNOPS/JRRP இனால் தெரிவுசெய்யப்பட்டு பயிற்றுவிக்கப் பட்ட பெண் கணனிப்பயிற்றுனர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஒருவர் அதன் நிர்வாகச் செயற்பாடுகளிற்குப் பொறுப்பாக இருப்பதுடன் எல்லோரும் பங்குதாரர்களாக செயற்பட்டு அந்நிறுவனத்தை இயக்கி வருகின்றனர்.
இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் யாழ் மக்களிற்கு கணனி அறிவை வழங்குதலே ஆகும். அத்துடன் தற்போதும் பெண்களிற்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் சிறுவர்களிற்கும் கணனிப்பயிற்சியை வழங்கி வருகிறது. UNOPS/JRRP இன் மேற்பார்வையின் கீழ் தொடர்ந்து இயங்குவதால் சகல வசதிகளுடன் கூடிய பயிற்சியை வழங்கக் கூடியதாகவுள்ளது என அப்பயிற்றுனர்கள் தெரிவித்தார்கள்.

### வதிரி தோற் தொழிற்சாலை (*VATHIRY CRAFT*)



பருத்தித்துறை கிளை விற்பனை நிலைய திறப்பு விழாவின் போது

வதிரி கிராமத்தில் ஓர் தோல் பொருட்கள் உற்பத்தி நிலையத்தினை 1999 ஜனவரியில், UNOPS/JRRP இன் நிதியுதவியுடன் ஆரம்பித்த இந்நிலையம் தொடர்ந்து செயற்பட்டு வருகிறது. அதன் வளர்ச்சிப் படிகளாக உற்பத்தி நிலையத்திலேயே முதலாவது பாதணிகள் விற்பனை நிலையம் ஒன்று அமைந்துள்ளது. இரண்டாவது விற்பனை நிலையம் SLRCS இன் யாழ்ப்பாணக் காரியாலயத்தில் இயங்கி வருகின்றது. மூன்றாவது விற்பனை நிலையத்தினை பருத்தித்துறை தபாற்கந்தோரிற்கருகில் இவ்வாண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி திரு.சி. நடராஜலிங்கம் (முகாமையாளர். இலங்கை வங்கி பருத்தித்துறை) அவர்களால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

வேலை வாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளை சுய வேலை வாய்ப்பில் ஈடுபடுத்தும் நோக்கத்திற்கமைய UNOPS/JRRP, தோற்பொருட்கள் பயிற்சித்திட்டம் ஒன்றினை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் (SLRCS) அனுசரணையுடன் 1998 ஜூலை மாதத்தில் புலோலியில் மேற்கொண்டது. இத்தொழிற்சாலையில் பயிற்சி பெற்ற 40 இளைஞர்யுவதிகள் ஒன்றிணைந்து "வதிரி கிறாப்ற்" என்ற பெயரில்

உள்ளூர் உற்பத்திகளை மக்களாகிய நாம் நுகர்வதன் மூலம், உள்ளூர் உற்பத்திகளை பெருக்குவதோடு, வேலை வாய்ப்பற்ற பல இளைஞர் யுவதிகளுக்கு பேருதவி வழங்குபவர்கள் ஆகின்றோம்.

இவ்விதழ் தொடர்பான உங்கள் சந்தேகங்கள், கேள்விகளுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
*Programme Manager*
*Public Information Team, UNOPS/JRRP*
*125, Temple Road*
*Jaffna.*

# 31 ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு
10
-
02
-
1907



உதிர்வு
17
-
02
-
2000

திருமதி
## சுந்தரம் இளையதம்பி

17-02-2000 அன்று இறைபதமடைந்த திருமதி சுந்தரம் இளையதம்பி அவர்களின் 31 ஆம் நாள் நினைவையொட்டி இன்று (18-03-2000) அன்னாரின் ஆத்ம சாந்தி வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
(74558)

## கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்18

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ-10)

## தவக்காலச்சிந்தனை

**பதினொராம் நாள்**

*உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்.* (மத் 5:44)

இப்படிக் கூறிய இயேசுக் கிறிஸ்து, கூறியதுடன் நின்றுவிடவில்லை. வாழ்ந்தும் காட்டினார். சிலுவையில் தனது உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் போது கூடத் தன்னைச் சிலுவையில் அறைந்தவர்களை மன்னிக்கும்படி பிதாவிடம் வேண்டுவதிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்.

இன்று எம்மை நாம் நோக்கும் போது என்ன செய்கிறோம்? பழிக்குப் பழி; இரத்தத்துக்கு இரத்தம் என்று செயற்படுவது மட்டுமல்லாமல் பகைவரைத் தண்டிக்கும்படியும் இறைவனிடம் வேண்டுகின்றோம். இது கிறிஸ்து வாழ்ந்துகாட்டிய வாழ்க்கைக்கு ஏற்புடையதா? அல்லது கிறிஸ்துவை விட்டு விலகி வேறு வாழ்க்கையை நாம் வாழ்கின்றோமா? சிந்தியுங்கள்.

**கொலிந்திரன**
(நல்லூர்)

உறவுகளைத் தொலைத்தவர்களின் மூச்சை அக்கினியாக்கி வெளிவருகிறது.

உ

# அளவெட்டி வடக்கு அருள்மிகு ஐயனார் கோவில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம்

மேற்படி ஆலய மகாகும்பாபிஷேகம் பிரமாதி வருடம் பங்குனி மாதம் 7 ஆம் நாள் (20-03-2000) திங்கட்கிழமை காலை 7 மணி அளவில் நிறைவேறத் திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் ஐயனார் அடியவர்கள் அனைவரும் கலந்து அபிஷேக ஆராதனைகளைக் கண்டு ஐயனார் அருள் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் அதற்குரிய கிரிகைகள் யாவும் (16-03-2000) வியாழக்கிழமை முதல் நிகழ்வுற்ற வண்ணம் உள்ளன. நாளை (19-03-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் எண்ணெய்க்காப்பு சாத்தப்படும். அடியார்கள் வந்து தங்கள் நேர்த்திகளை செய்து கொள்ளலாம். கும்பாபிஷேக நிகழ்வினைத் தொடர்ந்து 11 நாள்கள் மாலை 2 மணி அளவில் அபிஷேகங்கள் நடைபெற்று 12ஆம் நாள் (01-04-2000) சனிக்கிழமை மண்டலாபிஷேகம் *காலை 7.00 மணியளவில் நடைபெறும்.* அன்றைய தினம் அன்னதானமும் வழங்கப்படும். மண்டலாபிஷேக தினத்தன்று தீக்குளிப்பு வைபவமும் நடைபெறுவதற்கு ஐயனார் அருள் பாலித்துள்ளது. வைபவத்தில் கலந்து கொள்ளும் அடியார்கள் விரதமிருந்து வைபவத்தில் கலந்து கொள்ளலாம்.

திருப்பணி, கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் யாவும் பொது மக்கள் உதவியுடன் நடைபெறுகின்றன. நிதி உதவி புரியும் அன்பர்கள் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவும். அதற்குரிய வரவு செலவு அறிக்கை வெளியிடப்படும்.

அபிஷேகம் செய்பவர்கள் கோவிற் பூசகருடன் தொடர்பு கொள்ளவும்.

*** அடியார்களின் போக்குவரத்து வசதிகருதி C.T.B [768] பஸ்சேவை தினமும் நடைபெற்றுக் கொண்டிருப்பது அனைவரும் அறிந்ததே!**


அளவெட்டி வடக்கிலிருந்து யாழ்ப்பாணம்
காலை 7 மணி, 10 மணி பிற்பகல் 1 மணி, 4 மணி
யாழ்ப்பாணத்திலிருந்து அளவெட்டி வடக்கு
காலை 8.30மணி, 11.30 மணி பிற்பகல் 2.30மணி, 5.30மணி

*கி. சிவபாதரத்தினம்,*
*சி. சிவமயம்*
*திருப்பணி நிதி,*
*விழாப் பொறுப்பாளர்கள்.*

ஐயனார் கோவிலடி,
அளவெட்டி வடக்கு.
(74583)

# 6 ஆம் மாத நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**மண்ணில்**
16
-
03
-
1983



**விண்ணில்**
18
-
09
-
1999

## கணபதிப்பிள்ளை சிவாகரன்

(சாவ/இந்துக்கல்லூரி ஆண்டு 11 மாணவன் 1999)

நீ நடந்த பாதையெல்லாம் புல் முளைத்தது.
நீ பாடித் திரிந்த வீதியெல்லாம் ஊமையானது.
நீ துள்ளி விளையாடிய உன் இல்லம் சோபை இழந்தது.
மௌனத்தை தாய் மொழியாக்கி மரணத்தை நேசித்தவனே!
மரணத்தின் காரணம் புரியாமல் மாய்கின்றோம்.
பூத்துக் குலுங்குகின்ற புன்னகையின் இருப்பிடமே!
கருவில் உன்னைத் தாங்கியவள் உருவழிந்து கதறுகின்றாள்.
கல்வியூட்ட நின்ற தந்தை கதிகலங்கி வாடுகின்றார்.
உடன் பிறந்த சோதரர்கள் துடிதுடித்து சோருகின்றனர்.
தோள் பிடித்த தோழரெல்லாம் வாடியழுகின்றனர்
சிவா! இன்றைக்கு நீ இங்கில்லை
எண்ணிரண்டு பதினாறில் நீ பறந்த மாயமென்ன?
கூண்டுக்கிளியே எம் கூட்டை விட்டு ஏன் பறந்தாய்!
பார்புகழ பல்கலையும் பயில்வாய் என நாமிருக்க
கூடியழவைத்துவிட்டு குலக்கொழுந்தே சென்றாயே!
காலனவன் கடுகதியில் முடித்து விட்டான்.
ஆறுதிங்களல்ல ஆறேழு ஜென்மம் எடுத்தாலும் உன்னை மறவோமடா!

எங்கள் அன்புச் செல்வத்தின் அகால மரணம் கண்டு துன்பக் கடலில் நாங்கள் தத்தளித்த வேளையில் ஓடோடிவந்து ஆறுதல் அளித்து பலவகையிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் வைத்தியசாலையில் உடனுக்குடன் உதவிய வைத்தியர்கள், தாதிமார்கள், ஊழியர்கள் மரணச்சடங்கில் நேரில் கலந்தும், அஞ்சலி உரை நிகழ்த்தியும், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டும், மலர்வளையம் சாத்தியும் அஞ்சலி செலுத்திய சாவகச்சேரி இந்துக்கல்லூரி, கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களுக்கும் பிறைற்றின் கல்வி நிலையம், அருண் கல்வி நிலைய ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் பொறியியல்பீட மாணவர்களுக்கும் மற்றும் தபால், தந்தி, தொலைபேசி மூலம் ஆறுதல் தந்த அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகள்

18-03-2000 சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரக்கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் வாடும்
**அன்பு அப்பா, அம்மா, சகோதரர்கள்.**

கல்வயல்,
சாவகச்சேரி.
(C/11431)

# 56 ஆம் நாள் நினைவஞ்சலியும் 36 ஆவது பிறந்ததினமும்

மலர்வு
18
-
03
-
1964



மறைவு
23
-
01
-
2000

அமரர்
## சண்முகராசா இந்திரகுருபரன்
**(இந்திரன்)**

(உரிமையாளர் - நியூ வெஸ்கோ கிறீம் ஹவுஸ், திருநெல்வேலி.)

அன்பின் திருவுருவே
பாசத்தின் ஒளிவிளக்கே
உங்கள் அன்பு மனையாளை
பாசத்தின் நல்லாளை...
கண்ணீரில் வாழவிட்டு
கணப் பொழுதில் நீங்கள் மறைந்த
மாயம் தான் யாமறியோம்
ஐம்பத்தியாறு நாள் சென்றாலென்ன
ஐம்பத்தியாறு ஆண்டுகள்தான் சென்றாலென்ன
உங்கள் நினைவில் துயருற்றிருக்கும்.

**அன்பு மனைவி,**
**பெற்றோர், சகோதரர்கள்,**
**மைத்துனர்மார், மாமி.**

தகவல்:-
திருமதி அ. இந்திரகுருபரன்
இணுவில் மேற்கு,
இணுவில்.
(74537)

## அதிரடி ராங்கு

கள்ளு பருவகாலம் தொடங்கிவிட்டதால் பெருங்குடிமக்களுக்கு ஒரே கொண்டாட்டம்.

கள்ளு விற்பனையிலும் பல தந்திரங்கள் உள்ளன. நவாலிப் பகுதியில் பெருங்குடி மக்களுக்கு விசேட தள்ளுபடி வழங்கப்படுவதாக ஒரு தகவல். அங்கு இரண்டு போத்தல் கள்ளு வாங்கினால் அரைப் போத்தல் கள்ளு இனாம்! இதனால் அங்கு மதுப்பிரியர்கள் பெரும் எண்ணிக்கையில் படையெடுப்பதாகத் தகவல்.

கள்ளு விற்பனையிலும் ஒரு "Tactics" உள்ளது பாருங்கோ!

* * * *

யாழ். பல்கலைக்கழக மாணவன் ஒருவன் 'ராகிங்' வதைக்கு உட்படுத்தப்பட்டு வருவது குறித்து கடந்த வார சஞ்சீவியில் இதே பத்தியில் வெளியான தகவல்கள் தொடர்பாக கலாநிதி எஸ். ஸ்ரீசற்குணராசா சஞ்சீவிக்கு ஒரு கடிதம் வரைந்திருக்கின்றார். அதில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

"ராகிங்கைத் தவிர்ப்பதற்காக நீங்கள் எடுத்து வரும் தளரா முயற்சி மற்றும் பிரசுரங்களை விஞ்ஞான பீட அலுவலர்கள் பாராட்டும் அதே வேளையில் பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையிலும், மேலதிக சிரேஷ்ட மாணவ ஆலோசகர் என்ற முறையிலும் 11-03-2000 ஆம் திகதிய பத்திரிகையில் விஞ்ஞான பீடத்தில் நடத்த ராகிங் தொடர்பாக வெளிவந்த செய்தி குறித்து பின்வரும் கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன்.

"உங்களால் குறிப்பிடப்பட்ட ராகிங் சம்பவம் எங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் -

"தவறானா அல்லது ஊகத்தின் அடிப்படையில் யாரோ தங்களுக்குத் தெரிவித்த தகவலைக் கொண்டு விஞ்ஞான பீட அலுவலர்களின் நற்பெயருக்குத் தாங்கள் களங்கத்தை ஏற்படுத்தியிருப்பதற்கு எமது கடும் ஆட்சேபத்தைத் தெரிவிக்கின்றோம்." - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிதம் தொடர்பாக பின்வருவனவற்றைத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

1) 'ராகிங்' வதையை தடுத்து நிறுத்த நாம் எடுக்கும் முயற்சியை பாராட்டியமைக்காக நன்றிகள்.

2) ராகிங் வதைக்கு உட்படுத்தப்பட்ட மாணவனின் பெயரையும் ராகிங் செய்ததாகக் கூறப்படும் மாணவரின் பெயரையும் மட்டுமே (முதலெழுத்துக்களைக் கூடக் குறிப்பிடாமல்) நாம் பிரஸ்தாபித்திருந்தோம். அவர்கள் எந்தப் பீடத்தைச் சேர்ந்தவர்கள் என்று எதுவும் நாம் குறிப்பிடவில்லை. எனினும் விஞ்ஞான பீடத்திலேயே அச்சம்பவம் நடைபெற்றதாக வெளிப்படுத்திக் கடிதம் வரைந்தமைக்காக கலாநிதி ஸ்ரீ சற்குணராஜாவைப் பராட்டுகின்றோம்.

3) எமக்குத் தெரிந்த தகவல்களை அந்தப் பத்தியில் குறிப்பிட்டோம். அதேசமயம் இது விடயம் குறித்து பல்கலைக்கழக வட்டாரங்களில் அடிபடும் பேச்சையும், அப்படி பல்கலைக்கழக வட்டாரங்களில் பேசப்படுவதாகக் குறிப்பிட்டு வெளியிட்டிருந்தோம். எனவே தவறான - தகவல்களை வெளியிடும் எண்ணமோ இது விடயத்தில் யாருடைய நற்பெயருக்கும் களங்கம் விளைவிக்கும் எண்ணமோ எமக்கு இல்லை.

4) பல்கலைக்கழக வட்டாரத்தில் அடிபடும் பேச்சுக்கள் என்று தெரிவித்து நாம் குறிப்பிட்ட அம்சங்கள் முற்றிலும் தவறானவை என்றால், அவற்றுக்கு முரணாக, நேர்மையான முறையில் செயல்பட்டு அந்த வட்டாரங்களில் அடிபட்ட பேச்சு தவறானது என்று செயலில் நிரூபிப்பது பொருத்தமானதாக இருக்கும்.

5) அத்தோடு இந்த 'ராகிங்' வதைச் சம்பவம் குறித்து நியாயமான முறையில் நடவடிக்கை எடுப்பதன் மூலமும் அநியாயம் நடப்பதற்கு இடமளிக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவதன் மூலமும் சம்பந்தப்பட்டோர் தங்கள் நற்பெயருக்குக் களங்கம் வராமல் பார்த்துக் கொள்ள முடியும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அது அவர்களின் கடமையும் கூட.

6) "நீதி நிலைநாட்டப்படுவதோடு நிலை நாட்டப்படுவது போல காட்டப் படவும் வேண்டும். (Justice not only be done, but also appear to be done) என்று ஒரு பழமொழி உள்ளது. இது விடயத்தில் நீதி நிலை நாட்டப்படுவதோடு அது பற்றிய விவரங்கள் அம்பலப்படுத்தப்பட்டு நீதி நிலைநாட்டப்படுவது பொதுமக்களுக்குக் காட்டப்படவும் வேண்டும் என்பதையும், அதற்கு சம்பந்தப்பட்டோர் ஆவன செய்ய வேண்டும் என்பதையும் கூட சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

* * * *

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு சர்வதேச தொண்டர் நிறுவனம் ஒன்றின் மூலம் - ஒவ்வொரு கல்வி வலயத்துக்கும் பல நூற்றாக்கணக்கு என்ற அடிப்படையில் - சிறுவர் விளையாடுவதற்கான காற்று நிரப்பப்பட்டு மூடப்பட்ட பிளாஸ்டிக் பந்துகள் நன்கொடையாக விநியோகிக்கப்பட்டன.

பாடசாலைகளுக்கு ஐந்து,பத்து என்று அவை ஒதுக்கப்பட்டன. ஆனால் அவற்றைப் பெறச் சென்ற பாடசாலை அதிபர்களுக்கோ ஏமாற்றம். பெரும்பாலன பந்துகள் எல்லாம் காற்றில்லாமல் அப்பளமாய் நசிந்து கிடந்தன. மீண்டும் காற்றடித்துப் பயன்படுத்தும் வசதி கொண்ட பந்துகள் அல்ல அவை. அந்த "அப்பளப் பந்துகளைக் கொண்டு போய் குப்பையில் போடுவதா?" என்று கேட்டு பல அதிபர்கள் அவற்றைப் பொறுப்பேற்கவே மறுத்து விட்டனர். ஆனால் நன்கொடையை(?) ஏற்காவிட்டால் அடுத்த தடவை வரும் அன்பளிப்பு அந்தப் பாடசாலைக்கு ஒதுக்கீடு செய்யப்படாமல் போகலாம் என்று கூறப்பட்டதால் பல அதிபர்கள் அவற்றைப் பொறுப்பேற்றுக் கொண்டு போய் தமது பாடசாலையில் மூலையில் போடுவதாகத் தெரிகின்றது.

ஓர் உலகப் புகழ்பெற்ற சர்வதேச தொண்டர் அமைப்பின் பெயரில் இப்படி மோசடியா என்று விரலை மூக்கில் வைக்கின்றார்கள் விடயம் தெரிந்தவர்கள்.

யாழ். மாவட்டத்தில் ஒரு கல்விவலயத்துக்கு வழங்கப்பட்ட ஆயிரத்துக்கும் அதிக பந்துகளில் நூறு கூட ஒழுங்கானதாக தேறவில்லையாம். இன்னொரு வலயத்தில் அப்பளப் பந்துகள் குப்பையாகப் போடப்பட்டு குவித்து வைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளின் விசாரணைக்கு இவ்விடயம் சமர்ப்பணம்.

பாடசாலைச் சிறுவர்களுக்கு பந்து விநியோகம் என்ற கணக்கில் எத்தனை ஆயிரம் டொலர் சர்வதேச தொண்டர் நிறுவனக் கணக்கில் ஏப்பம் விடப்பட்டது என்பதை அதிகாரிகள் கண்டுபிடித்து வெளியிட்டால் நல்லது.

– மின்னல்


## கண்ணீர் அஞ்சலி

லயன் வே.பாலவிநாயகர் (பாலா)
[ருவிங்கிள் ஸ்ரார் சிற் அன் பினான்ஸ்]

அவர்களின் அன்புத் தந்தை
திரு. V.S நவரெட்ணம் அவர்களின்
[ஸ்தாபகர், ருவிங்கிள் ஸ்ரார்]

பிரிவு ஆழ்ந்த கவலை தருகின்றது. அன்னாரின் பிரிவால் துயரடைந்துள்ள அவரது குடும்பத்தினரோடு நாமும் பங்கு கொள்கிறோம்

நண்பன்: பீ.என். சற்குணராசா,
பைந்தமிழ் வெதுப்பகம்,
சாவகச்சேரி

(74602)


# சிவஞான தமிழ்ப் பரம்பரையின் இன்றைய வாரிசு இலக்கண வித்தகர்

**இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகரின் சதாபிஷேகப் பெருவிழா நாளை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறுகிறது. அதனை முன்னிட்டு இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.**

இது ஒரு மிகப் பழைய கதை.

இருந்தும் புதுமைக்கு மெருகூட்டும் கதை.

சப்பட்டங்குருவி உள்ளங்கைக்குள் அடக்கக்கூடிய பிராணி. அது செய்யும் வேடிக்கையைக் காட்ட ஒருவர் சுவாரசியமான கற்பனை ஒன்று செய்தார். வானத்து இடிமுழக்கம் கேட்டவுடன் இந்தக் குருவி மல்லாக்காகப் படுத்துக் கொண்டு கால்களை உயர்த்திக் கொள்ளுமாம். ஒரு பெரிய பறவை - இதை ஏப்பம் விடக்கூடியது - கேட்டதாம், "ஏன் இப்படிச் செய்கிறாய்?" என்று.

சப்பட்டங்குருவி சொன்ன பதில், "வானம் உடைந்து விழப்போகிறது அதைத் தாங்கவேண்டாமா?" என்பதே.

சப்பட்டங்குருவி போன்றுதான் எம்மில் பலர் இருக்கிறோம். "நான் இல்லை என்றால் இங்கு என்ன நடக்கும்?"

இது வீட்டிலும் நாட்டிலும் கேட்கப்படுகின்ற ஒன்று.

ஆனால் உண்மை எது?

யாரோ ஒரு சிலருக்காகவே மழை பெய்கிறது. அந்தச் சாரலால் நாமும் வாழ்கின்றோம்.

இதுவே உண்மை.

நம்மில் பலர் ஏற்றுக்கொள்ள மறுத்தாலும்..................

இதுவும் ஒரு மிகப் புராதனமான செய்தி.

சங்கச் சான்றோன் சொன்னது.

வயது 20 மதிக்கக் கூடிய ஓர் இளைஞன், கடந்த 15வருடங்களாக ஒரு முதியவரை அவதானித்து வந்தான். தன்னிடம் கண்டுகொள்ளமுடியாத இளமையை முதியவரிடம் கண்டு வியந்தான். ஒருநாள் தெம்பை வரவழைத்துக் கொண்டு கேட்டேவிட்டான்.

பெரியவரே! உள்ளத்தாலும் உடலாலும் இத்தனை இளமையோடு இருக்கிறீர்களே? எப்படி முடிகிறது?"

முதியவர் கூறிய விடைதான் புறம். 191ஆம் பாட்டு பாடியவர் பிசிராந்தையார். தெரிந்த பாட்டு இறுதி இரு வரிகள்தான் இன்று முக்கியம்.

"ஆன்று அவிந்து அடங்கிய
கொள்கைச் சான்றோர் பலர் யான்
வாழும் ஊரே"

யாழ்ப்பாணமும் அப்படிப்பட்ட ஓர் ஊர்தான்.

ஒவ்வொரு கிராமமும் ஒரு சான்றோரின் செம்மையால் செழிப்புற்று நின்றது; நிற்கிறது.

*- க.சிவராமலிங்கம் -*

இச்சான்றோர் வரிசையில் யாருக்கும் அடுத்தவராகா நிலையில் வாழ்ந்த செந்தண்மையாளர் - வித்துவ சிரோன்மணி கணேசையா. தமிழ்க் கடலில் குடைந்து குடைந்து ஆடி மகிழ்ந்தவர். தெய்வத்திருவருட் பெருங்கடலில் நின்றும் இருந்தும் கிடந்தும் தோய்ந்தவர்.

அவர்தம் தலை மாணாக்கர் ஒருவர்.

அது பற்றிக் குறிப்பிடும்போது எனக்கொரு சந்தேகம்.

ஐயர் அவர்கள் ஒரு பெரிய ஆசிரியனாக இருந்திருக்க முடியுமா?

மென்மையான பேச்சு. சொற்களைத் தரம் உணர்ந்து தூக்கி வைப்பார் 'இன்னொருதரம் சொல்லுங்கள்' என்ற வினாவுக்கே இடமிராது.

ஆனால் உதவித் தினைத்துணையாக இருந்த போதும் பனைத்துணையாகக் கொண்டு, நெஞ்சால் வாழ்த்தி வாழவைக்கும் திருவுருவே நான் கண்ட கணேசையர். அத்தமிழ் முனிவன் நெஞ்சார்ந்த மாணாக்கன்தான் வித்தகர் ஐயா - நமசிவாய தேசிகர்.



இந்த வரலாற்றை நினைத்துப் பார்க்கிறேன்.

மலை மகளை மணக்கத் தென்னாடுடைய சிவன் வடநாடு புறப்பட்டான். நாடு நிலை தளம்பிற்று.

கூட்டத்தே ஒருவராகச் சென்ற குடமுனியைத் தென்னாட்டில் தங்கி தளம்பாநிலையைப் பேணும்படி சிவன் கேட்டான்.

திருமணக்கோலம் காணும் வாய்ப்பு இழக்கப்படுமே என்ற அவரது கலக்கத்தை மணக்கோலம் பொதிகையில் காட்டுவேன் என்று கூறித் தெளிவித்தான் இறைவன். அடுத்த கலக்கம்தான் பெரும் கலக்கம். "தென்னாட்டவர் 'தமிழ்' வல்லவர்களாயிற்றே?" என்றார் அகத்தியர். நியாயமான கலக்கம்.

அந்த நிலையிலேயே சிவன் அகத்தியருக்கு தமிழ் தந்தான் இது கதையா? இல்லை சிவன் அகத்தியருக்கு அருளிய தமிழ் தொல்காப்பியர் வழி -ஞான நிலையில் - கணேசையாவுக்கு வர, அது தேசிகர் ஐயாவுக்கும் வந்துள்ளது என்பதே உண்மை.

என்னைப் பொறுத்தவரை வித்தகர் ஐயா சிவஞானத் தமிழ்ப் பரம்பரையின் இன்றைய வாரிசு.

வித்தகர் ஐயாவின் காலத்தில் வாழ்ந்தோம். அவருடன் உரையாடினோம் என்ற நிறைவு எம் பிறவிப் பெரும் பயன்.

*

## மாணவருக்கு அன்பளிப்பு

வலிதென்மேற்கு,மார்ச்18

சண்டிலிப்பாய் கோட்டத்தில் உள்ள நான்காம் ஆண்டு கல்வி பயிலும் தந்தையை இழந்த மாணவ மாணவியர்களுக்கு இலவசமாக எழுதுகருவிகள், கொப்பிகள், பாடசாலை பைகள் என்பன வழங்கப்படவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள இந்த வைபத்துக்கு பிரதம விருந்தினராக கோட்டக் கல்வி அலுவலர் கே.தனபாலசிங்கம் கலந்து கொள்வார். (ஐ185)

## விபத்தில் சிறுவன்பலி

யாழ்ப்பாணம்,மார்ச்18

புலோலி தெற்கில் கடந்த புதனன்று மாலை இடம்பெற்ற உழவு இயந்திரம் - சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

சைக்கிளை ஓட்டிச் சென்றவரான புலோலி தெற்கைச் சேர்ந்த நரசிங்கம் சத்தியரூபன் (வயது 13) என்ற சிறுவனே மரணமானவராவார்.

விபத்தில் படுகாயமடைந்து ஆபத்தான் நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டு சிகிச்சைக்குட்படுத்திய நிலையிலேயே சிறுவன் அங்கு மரணமானார். (ஐ-15)

## திருச் சொரூப பவனி

நெல்லியடி, மார்ச்18

புலோலி புனித சூசையப்பர் ஆலய திருச்சொரூப பவனி இன்று மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

கூட்டுத் திருப்பலி பூஜை நாளை காலை 7.30 மணிக்கு இடம்பெறும் (ஐ-15-109)

**யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சக் கவிதை 5ஆம் பக்கத்தில் வெளியாகியுள்ளது.**

## சேவைக் கட்டணத்துக்குப் பதிலாக இரு கூட்டுறவுச் சங்கங்களுக்கு செயலகத்தால் சீனி விநியோகம்

### 'உ' அட்டைக்கு பகிர்ந்தளிப்பு

வலிகாமம் மேற்கில் 'உ' அட்டையை வைத்திருக்கும் குடும்பங்களுக்கு மலிவானவிலையில் சீனியை விநியோகம் செய்வதற்கு விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் சங்கானைப் பிரதேச செயலகம் ஏற்கனவே மேற்கொண்டுள்ளது.

தெல்லிப்பளை மற்றும் சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகளின் ஊடாக இவ் விநியோகம் நடைபெறுவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

மேற்படி இரு சங்கங்களுக்கும் வழங்கவேண்டிய சேவைக் கட்டணங்களுக்குப் பதிலாக மலிவு விலையில் வழங்கப்பட்ட சீனியே இவ்வாறு 'உ'அட்டை உடைய குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. ஒரு கிலோ சீனி இருபத்து நான்கு ரூபா என்ற விலையில் குடும்பம் ஒன்றுக்கு ஆறுகிலோ சீனி விநியோகம் செய்யப்படவுள்ளது. இவ்விசேட விநியோகத்தைக் காலதாமதமின்றி மேற்கொள்ளுமாறு மேற்படி இரு சங்கங்களுக்கும் வலி. மேற்குப் பரதேச செயலகம் பணிப்புரை விடுத்துள்ளது. (ஐ-99)

## அரங்க திறப்புவிழா

கரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திறந்த வெளி அரங்கத் திறப்பு விழாவும், வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியும் நாளை ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு அதிபர் கே.பொன்னையா தலைமையில நடைபெறும்.

பிரதம விருந்தினராக, யாழ். மாவட்ட அரசஅதிபர் க.சண்முகநாதனும், அவரது துணைவியாரும் கலந்து கொள்வார்கள். (ஐ-109-173)

## இலக்கண வித்தகரின் சதாபிஷேகப் பெரு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 18

இலக்கண வித்தகர் இ.நமசிவாய தேசிகர் அவர்களின் சதாபிஷேகப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7மணி முதல் நல்லூரில் நடைபெறவுள்ளது.

காலை 7 மணி தொடக்கம் 9 மணிவரை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் சதாபிஷேக சாந்தி நடைபெறும். தேசிகரின் சிரேஷ்ட மாணவர் 'சிவாகம ஞானபாஸ்கரன்' சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் தலைமையிலான அந்தணர் குழுவினர் கிரியைகளை நடத்துவர்.

தொடர்ந்து இ.நமசிவாய தேசிகர் தம்பதிகள் காலை 9 மணியளவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இருந்து நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்துக்கு ஊர்வலமாக அழைத்துவரப்படுவர்.

பின்னர் அங்கு யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நமசிவாயதேசிகருக்கான கௌரவிப்பும், "வித்தகர் தரிசனம்" என்ற நூல் வெளியீட்டு விழாவும் இடம்பெறும்.

மாவை ஆதீனம் மகாராஜஸ்ரீ சு.து.சண்முகநாதக்குருக்கள்,நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் ஆசியுரைகளை வழங்குவர்.

பாலர் ஞானோதய சங்கம் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. (ஐ-7)

# மாபெரும் கிரிக்கெட் மோதல்கள்

## சென்ட்ரல் முன்னிலை

யாழ்ப்பாணம்,மார்ச்18

சென்ட்ரல் - சென்.ஜோன்ஸ் அணிகளுக்கு இடையில் நேற்று ஆரம்பமான வடக்கின் மாபெரும் மோதலில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் அணி தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து ஆடிய சென்ட்ரல் அணி ஆட்டநேர இறுதியில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது.

சென்.ஜோன்ஸ் அணித்தலைவர் டினேஸ் எபநேசன் 40 ஓட்டங்களையும், ஆர்.ரட்ணம் 29 ஓட்டங்களையும் -

சென்ட்ரல் அணித் தலைவர் பி.கஜிதரன் 39 ஓட்டங்களையும் பிரசாந்த் 32 ஓட்டங்களையும் - பெற்றனர்.

ஆட்டம் இன்று தொடர்ந்து நடைபெறும். (உ-3)

## பற்றிக்ஸ் முன்னணி!

யாழ்ப்பாணம்,மார்ச்18

சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் நேற்று ஆரம்பமான 'பொன் அணிகளின் போரில்' முதல் இன்னிங்ஸில் சென்.பற்றிக்ஸ் அணி ஆறு விக்கெட்டுக்கள் இழப்புக்கு 252ஓட்டங்களைப் பெற்றதுடன் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஆட்டநேர இறுதியில் 4விக்கெட் இழப்புக்கு 48ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

சென்.பற்றிக்ஸ் அணியில் பானுஜெயன் 64, பிரசாந்தா ஜோசப் 52, அருள்ராஜ் 59 ஓட்டங்களைப் பெற்றனர். ஆட்டம் இன்று தொடர்ந்து நடைபெறும்.

(உ-4)

## இந்தியா 4 விக்கெட்டுகளால் வெற்றி

புதுடில்லி,மார்ச்18

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்ற நான்காவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 4விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 282 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 49.5 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றிக்குத்தேவையான ஓட்டங்களைப் பெற்றது.

இந்த ஆட்டத்தில் சச்சின் டெண்டுல்கர் தனது 25ஆவது சதத்தைப் பெற்றதுடன் ஆட்டநாயகனாகவும் தெரிவானார்.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இந்தியா 3-1 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது. (உ-4)

## 200அடி பள்ளத்தில் வீழ்ந்தது பஸ்! 5பயணிகள் பலி! 26பேர் காயம்!!

### நானுஓயாவில் நடந்த கோரம்

கொழும்பு,மார்ச்18

நானுஓயாவில் பஸ் ஒன்று விபத்துக்குள்ளாகி 200அடி பள்ளத்தில் வீழ்ந்ததில் ஐந்து பயணிகள் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்; 26 பேர் படுகாயமடைந்தனர்.

பதுளையில் ஒரு திருமண வைபவத்தில் கலந்துகொண்டு விட்டு திரும்பிய பயணிகளை கிபுல்கல்லவுக்கு கொண்டு சென்ற பஸ்ஸே நேற்றுமுன்தினம் இரவு இடையில் விபத்துக்குள்ளானது. (உ-க-3)


## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### முழு நிலாநாள் கருத்தரங்கு

**இடம்:-** யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

**காலம்:-** நாளை (19.03.2000) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30மணி (புதிய நேரம்)

**தலைமை:-** பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை (துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

**கருத்துரை:-** "ஆரோக்கியமான பாலியல் உறவு"

**வழங்குபவர்:-** வைத்தியகலாநிதி இ.சிவசங்கர்

அனைவரும் வருக!

**பழைய மாணவர் சங்கம்,**
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

**ஆதரவு:-** STP COMPUTER WORLD
54A, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி:-2674 e.mail: Stpcom@Sltnet.lk

(C/11453)


## கண்ணீர் அஞ்சலி

மல்லாகம் நீதிமன்ற நீதிவான் **பா.சுப்பிரமணியம்** J.P. அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி விஜயலட்சுமி பாலசிங்கம்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஜெயகணேசா ஸ்ரோர்ஸ்,
*பருத்தித்துறை.*

T.P. 3284 (C/11452)

அக்கினிப் பெருமூச்சு (நாடகம்)

## ஒத்திவைப்பு

திருகோணமலை,மார்ச்18

பன்னிரண்டு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் 21ஆம் திகதி வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நடத்தப்படவிருந்த ஒரு நாள் அடையாள சுகவீன லீவுப் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது. (உ-7)

## காணாமற் போனோரின் பாதுகாவலருக்கு!

யாழ்ப்பாணம்,மார்ச்18

கைதடிச் சுற்றிவளைப்பின்போது கைது செய்யப்பட்டு காணாமற் போனோரின் உறவினர்களை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு றக்கா வீதியிலுள்ள - வட பகுதியில் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்க - அலுவலகத்துக்குச் சமுகம் தரும்படி சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

காணாமற் போன தமது கணவன்மாரின் சம்பளத்தை உரிய திணைக்களத்திடமிருந்து பெற்றுத் தருமாறு அரசஅதிபரிடம் முறையிட்டிருந்தோரையும் இச்சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-4)

## பயிற்சிநெறி இன்று ஆரம்பம்

நெல்லியடி,மார்ச்18

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின், வடமராட்சி உப நிலையத்தின் முன்பள்ளி பயிற்சிநெறி இன்று காலை வட இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பித்துவைக்கப்படும்.

யாழ். மாவட்டத்திலேயே முதல் தடவையாக ஆரம்பித்து வைக்கப்படும் இப்பயிற்சிநெறி யாழ். பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவபீடத் தலைவரும் புறநிலை அலகின் உபநிலைய இணைப்பாளருமாகிய பேராசிரியர் என்.நடராசசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

சுமார் 50 பயிற்சியாளர்கள் இப் பயிற்சியில் கலந்துகொள்வர்.

(உ-109)


### பிரமிட் வீடியோ C.D வெளியீடு

* தைபொறந்தாச்சு (துண்டுகள் வெட்டாத முழுமையானது)
* மாடப்புறா
* ராஜராஜசோழன்

விஷ்ணு வீடியோ
K.K.S. Road,
கோண்டாவில்.

(74606)



### நிறுவன தினம்

#### சான்றிதழ் பெற இருக்கும் மாணவர் கவனத்திற்கு!

1999/2000 கல்வியாண்டில் பயிற்சிநெறிகளை முடித்துக் கொண்ட மாணவருக்கு எதிர்வரும் 25-03-2000 அன்று நடைபெற இருக்கும் சான்றிதழ் வழங்கும் வைபவம் தொடர்பான முக்கிய கூட்டம் நாளை (19/03/2000) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு IIS தலைமையகத்தில் இடம்பெறும். பயிற்சிநெறியினை முடித்துக்கொண்ட அனைத்து மாணவர்களையும் தவறாது நிறுவனத்தின் பிரதான மண்டபத்தில் கூடுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

* நிறுவன தினத்தில் சான்றிதழ் பெறஇருக்கும் மாணவர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்து தமது பதிவினை மேற்கொள்ளல் அவசியம்.
* 9MS,3DCP,10E,11W பரீட்சை முடிவுகள் 16.03.2000 அன்று வெளியிடப்பட்டது.

*இயக்குநர்*
**IIS**

(C/11409)


## 2 பிள்ளைகளைக் கிணற்றில் தள்ளிக் கொன்ற தந்தையார் கைது

### மனைவியையும் கொல்ல முயன்றாராம்

வவுனியா,மார்ச்18

தனது இரண்டு குழந்தைகளை கிணற்றுக்குள் தள்ளிப் படுகொலை செய்ததுடன் மனைவியையும் படுகொலை செய்ய முனைந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று செட்டிகுளம் பகுதியில் வைத்துப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பலவன் பொக்கணையைச் சேர்ந்த டேவிட் கொன்ஸ்ரைன் (வயது 35) என்பவரே தர்சிகா (வயது 2), விஜிதா (4 மாதம்) ஆகிய குழந்தைகளைப் படுகொலை செய்ததுடன் சசிதேவி (வயது 27) என்ற மனைவியை படுகொலை செய்ய முனைந்துள்ளார் எனக் கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் செட்டிகுளம் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-7-164)

## ஐயாயிரம் இலங்கையருக்கு ஜேர்மனியில் புகலிடம் மறுப்பு

கொழும்பு,மார்ச்18

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரியவர்களில் சுமார் 5 ஆயிரம் இலங்கையர்கள் நாடு கடத்தப்படவிருப்பதாக ஜேர்மன் தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் என்று ரோய்ட்டர் செய்தி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஜேர்மனியில் உள்ள நாடு கடத்தும் நிலையங்களில் இருந்து 20 இலங்கையர்கள் விசேட விமானம் மூலம் ஜேர்மன் அரசால் நேற்று முன்தினம் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் -

சுமார் 40 பேரை இந்த விமானத்தில் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் அரைவாசிப்பேர் ஜேர்மனுக்கு உள்ளேயே காணாமற் போய்விட்டனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

விமான மூலம் கட்டுநாயக்காவுக்கு அனுப்பப்பட்ட 20 பேரில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வைத்திங்கம் சுதாகரன், சுப்பிரமணியம் தெய்வேந்திரம் ஆகியோர் இரகசியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (உ-க-3)

### மட்டுவிலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுவில் தெற்கு) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-3-5-31)

### பீடாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"அரசு முன்வைக்கும் எந்தத் தீர்வுத்திட்டமும் பகிரங்கமாகவே வெளியிடப்படும். ஒளிவு மறைவு எதுவும் இருக்காது. அத்துடன் புலிகளுடன் இரகசியமாகப் பேச மாட்டோம்" என்று அமைச்சர் பீடாதிபதிகளுக்கு உறுதியளித்ததாகக் கூறப்பட்டது. (உ-3)

### நோர்வேயின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானத்துக்காகத் தொடர்ந்து பாடுபடும்" - என்றும் அவர் தெரிவித்தார்.

நோர்வேயில் பதவியிலிருந்த முன்னைய அரசு தனது பிரேரணை ஒன்றின் மீதான வாக்கெடுப்பில் கடந்தவாரம் தோல்வியடைந்ததை அடுத்து அந்த அரசு பதவிவிலகியதைத் தொடர்ந்து புதிய அரசு நேற்றுப் பதவியேற்றது. (உ-3-4)

### புலிகளுடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்ப் பயங்கரவாதமே பிரச்சினையாக உள்ளது. தமிழர் மத்தியில் உள்ள ஒரு குழுவே பிரச்சினைக்குக் காரணமாக உள்ளது. சிங்கள மக்களோ அல்லது அரசோ அதற்குக் காரணம் அல்ல.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்திப் பயனில்லை. சகல வளங்களையும் பயன்படுத்தி அவர்களை பூண்டோடு ஒழிக்க வேண்டும்.

தமிழர் பயங்கரவாதத்தை அங்கீகரிக்கும் முதலாவது நாடான நோர்வேயைப் பேச்சுக்கு பயன்படுத்தும் முயற்சியை உடன் கைவிட வேண்டும். நோர்வேயின் உதவியுடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தினால் தெற்காசியாவில் பெரும் சக்திவாய்ந்த அமைப்பாக புலிகள் அமைப்பு வளர்ந்து விடும். அதற்கு இடமளிக்கக் கூடாது - இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதான முயற்சிகளுக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக பௌத்தபீடங்கள் ஒன்று திரள்வது பற்றிய தகவலை இரு வாரங்களுக்கு முன்னர் சஞ்சீவி தனது தலைப்புச்செய்தி மூலம் முதன்முதலில் அம்பலப்படுத்தியது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.(உ-3-4)

## மரண அறிவித்தல்கள்

### வேலன் செல்லமணி

அண்ணாவியாரும் பலாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலன் செல்லமணி நேற்று (17.03.2000) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சரசு நாகம்மா என்பவர்களின் அன்புக் கணவரும் தெய்வானை, சோதி, இராசதுரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆசையின் மருமகனும் வடிவேலு, முருகன், பவுண்மலர், நாகம்மா ஆகியோரின் மைத்துனரும் பத்மாவதி, உதயகுமார், ரவீந்திரன், ஜெயக்குமார், விஜய குமார், சைலா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் தவராசா, ஜீவமலர், மதிவதனி, இராசாத்தி, ரூபிஸ்தரன் ஆகியோரின் மாமனாரும் வெள்ளி மயில் , ரஞ்சினி, றமேஸ் ஆகியோரின் பெரிய தந்தையும் ராசேஸ்வரி, புவனேஸ்வரி, குணலிங்கம் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2000) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் அன்னாரது இல்லத்திலிருந்து மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்லமணி உதயகுமார்,
(மகன்)

தற்காலிக முகவரி:-
*மானிப்பாய் வீதி,*
*ஆலடி, உடுவில்.*

(74605)

### கந்தவனம் மார்க்கண்டு (ஓவசியர்)

நெல்லியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்சமயம் பேசாலையில் வசித்துவந்தவருமான கந்தவனம் மார்க்கண்டு (ஓவசியர்) கொழும்பில் காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (18.03.2000) சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு பொரளை கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.பாலேந்திரம்,
(மருமகன் - பொலீஸ் பாலு)

முருகன் கோவில் வீதி,
நெல்லியடி,
கரவெட்டி.

(C/11454)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18-03-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சஞ்சீவி சஞ்சிகை

சஞ்சீவி 18-03-2000


ஒளி சிந்திடும் கண்களில்
ஒளியில்லையா?
மறந்து விடுங்கள் உங்கள்
கவலையை.
உங்கள் கண்களைச்
சரியான முறையில்
பரிசோதித்து விழிகளிற்கும், ஒளிகளுக்கும்
ஏற்ற வகையில் தரமான கண்ணாடிகளை
வழங்கும் ஒரே இடம்.

றெனி மூக்குக் கண்ணாடி அகம்

(C/11220)
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பிரதேச செயலகம்
முன்பாக,
கண்டிவீதி, சாவகச்சேரி.

கருத்துக் கலசம் - மயூரா

## நேரத்தின் பெறுமதி

**இன்றே செய்யக்கூடியதை, நாளை வரை தள்ளிப் போடாதீர்கள். - செஸ்டர்பீல்ட் பிரபு**

நேரம் பொன்னானது. பருவத்தே பயிர்செய். சந்தர்ப்பத்தை நழுவ விடாதே. இந்த முதுமொழிகள் நேரத்தின - காலத்தின - அருமையை, பெறுமதியை மக்களுக்கு உணர்த்த எழுந்தவை. மனிதவாழ்க்கையோடு காலம் பின்னிப் பிணைந்தது. வாழ்க்கையே காலத்தால் வகுக்கப்பட்டுள்ளது என்றும் சொல்லலாம். மனிதனின் உடல், உள வளர்ச்சிகள் வருடங்களால் - வயதால் - அமைபவையே. உலகின் வாழ்வியக்கமும் காலத்தின் அடித்தளத்தில் அமைந்ததே. நேற்று. இன்று, நாளை என்ற பகுதிக்குள் அடங்குவதே உலகங்களின் தோற்றமும் இயக்கமும்.

இயற்கைக்குப் பருவகாலங்கள் உண்டு. அதே போன்று மனிதனுக்கும் பருவங்கள் உள்ளன. மனிதனுக்கு மட்டுமன்றி ஏனைய உயிரினங்களுக்கும் பருவங்கள் உள்ளன. அந்தந்தப் பருவத்தில் அதற்குரிய பணிகளையும் கடமைகளையும் செய்யாதுவிடின் அடுத்த பருவத்தில் அவற்றை நிறைவேற்ற முடியாது. பருவத்தை - காலத்தை - தப்பவிடுபவர்கள் வாழ்க்கையில் முன்னேற முடியாது; நிச்சயமாகப் பின்தள்ளப் படுவார்கள்.

காலத்தைத் தக்கவாறு பயன்படுத்தி நல்வினைகளை பெறாதவர்கள் பாதிப்புற்றுப் பின்னர் வருந்துவது உண்டு. உரியநேரத்தில் உரிய பணியைச் செய்யாமல் காலத்தை நழுவவிட்டால், அது திரும்பி வராது. பெறுமதிமிக்க நேரத்தை நழுவவிட்டால் அல்லது வீணடித்தால் விளைவு பாதகமாகிவிடும்.

எப்போது ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமோ அப்போதே ஆற்றவேண்டும். பின்னர் என்று தள்ளிப்போட்டால் அது நடைபெறாமலே போய்விடலாம். உங்களில் பலருக்கு அது அனுபவமாகியும் இருந்திருக்கலாம். அதனாலேயே இன்றே செய்யக்கூடியதை, நாளைவரை தள்ளிப் போடாதீர்கள் என்று அறிஞர்களும் அனுபவசாலிகளும் கூறிப்போந்தனர்.

ஆகையால் இன்றே செய்ய வேண்டியதை இன்றே செய்துவிட வேண்டும். அதனைப் பழக்கத்துக்குக் கொண்டு வருவது இன்றியமையாதது. இதுவும் இளமையில் பயில வேண்டிய, பயிற்சி செய்யவேண்டிய ஒன்றாகும். குறிப்பிட்ட ஒரு நிகழ்வுக்கு அல்லது வைபவத்துக்கு உரிய நேரத்துக்குப் போய்ச்சேரும் பழக்கம் அவசியம். நேரந்தவறாமை- நேரம்பிந்தாமை - இன்று செய்யத் தகுந்ததை நாளை செய்யலாம் என்று ஒத்திப்போடும் தன்மையைத் தடுக்கவல்லது.

எமது மக்கள் நேரம் பிந்துவதிலேயே பெயர்பெற்றவர்கள். விழாக்களும் நிகழ்வுகளும் கூடப் பிந்தியே ஆரம்பமாவது உண்டு. விழாக்களுக்கு வருகை தருபவர்கள் மட்டுமன்றி, அவற்றை ஏற்பாடு செய்பவர்களுமே பிந்தியே சென்றடைகின்றனர். இது எங்கள் மக்களின் மிகப் பெரிய குறைபாடு. அந்தப் பழக்கத்தை மாற்றிக்கொள்ள எங்களில் மிகப் பெரும்பாலானோர் பழகிக் கொள்ள வேண்டும்.

இன்று செய்ய 'வேண்டிய பணியைச்செய்தால் அது நன்றாக அமையும். இன்றே செய்க.அதனை நன்றே செய்க என்ற அறிவுரையை அடிமனதில் பதித்து. நேரத்தின் - காலத்தின் - பெறுமதியை உணர்ந்து முன்னேறுவோமாக.

# வள்ளுவர் தந்த திருக்குறளும் புத்தர் தந்த தம்மபதமும்!

**புவனா நடராஜன்**

பாரதத்தின் மும்மணி போன்றவை திருக்குறள், தம்மபதம், பகவத் கீதை ஆகிய மூன்றும்.

இந்த மூன்றில் தம்மபதத்திற்குத் தனிச்சிறப்பு உண்டு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தம்மபதம் ஒன்றுதான் சீனா, திபெத் முதலிய நாடுகளில் மொழிபெயர்க்கப்பட்டுப் போதனை செய்யப்பட்டுப் பௌத்த மதத்தினரிடையே வழக்கத்தில் இருந்தது. கீழை நாடுகள் எங்கும் பரவும் சிறப்பினைப் பெற்றது.

தம்மபதம் 26 இயல்களையும் 423 பாடல்



களையும் கொண்ட நூல். இது ஓர் அறநூல். திருக்குறள், முப்பாலாகி முழுக்க முழுக்க அறத்தையே போதிக்கும் சிறந்தநூல். தம்மபதம் திருவள்ளுவர் மனம் கவர்ந்த நூல் என்று சொல்வதில் தவறில்லை.

திருக்குறளில் காணப்படும் பல அறிவுரைகள் தம்மபதத்தில் காணப்படுகின்றன.

திருவள்ளுவர் பௌத்த மதத்தைச் சார்ந்தவராக இருக்கலாம் என்று சொல்பவர்கள் *'அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு'* என்ற குறளில் வரும் *'ஆதிபகவன்'* என்கிற சொல்லாட்சி புத்த பிரானைச் சுட்டுகிறது என்பர். *'மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார்'* என்னும் குறளில்வரும் *'மலர்மிசை ஏகினான்'* என்பது தாமரை மலர்களில் தன்பாதத்தை வைத்துப்போன புத்தரைக் குறிப்பதாகக் கொண்டு திருவள்ளுவரைப் பௌத்தர் என்று வலியுறுத்துவர்.

சங்க காலத்தில் புலால் உண்ணல், போர், பரத்தையரை நாடுதல், கள்ளுண்ணுதல் ஆகியன தீயபழக்கங்கள்எனக கண்டிக்கப்படவில்லை. அரசர்கள் தங்களுக்குள் அடிக்கடி போரிட்டு வந்தார்கள். காதல்வாழ்க்கையும், பெண்ணின்பமும் பெரிதாகப்பேசப்பட்டுவந்தது. களவு, காதல், திருமணம், பரத்தையர் நாடல் ஆகியன பற்றிப் பலபாடல்கள் இயற்றப்பட்டன. அவை இன்று சங்கத்தொகை நூல்கள் எனப் போற்றப்படுகின்றன. ஆனால், சில காலத்துக்குப்பின் வந்த திருக்குறளில் மேற்கூறப்பட்டவை தீயபழக்கங்கள் எனக் கண்டிக்கப்பட்டுள்ளதால், இம்மாற்றம் தம்மபதத்தின் செல்வாக்கின் விளைவு என்பர் சில ஆய்வாளர்கள்.

தம்மபதத்தைப் போலவே திருக்குறளும் 'உள்ளிருள் நீக்கும் விளக்காக' விளங்கி வருகிறது. திருக்குறளாகிய விளக்குக்கு அகல் - அறம்; திரி - பொருள்; நெய் - இன்பம்; செஞ்சொல் - தீ; தண்டு - குறட்பா என்று சொல்லும் பாடல் உண்டு.

தம்ம என்றசொல்லிற்கு ஒழுங்கு,விதி,அறம் எனப்பல்பொருள் உண்டு. ஆதலின், தம்மபதம் என்பது மக்கள் அன்றாட நடைமுறையில் கடைப்பிடித்தற்குரிய நெறிமுறைகளையும், நீதிகளையும் உணர்த்தும் நூல் என்று விளம்பப்படுகின்றது.

மனிதனின் இன்பத்துக்கும், துன்பத்துக்கும், வாழ்வுக்கும், தாழ்வுக்கும் காரணம் அவன் மனமும் எண்ணங்களும்தான்என்று புத்தபகவான் இன்றைய விஞ்ஞானி போல அலசி ஆராய்ந்து தெளிவாகப் போதனைகளைச் சொல்லியிருக்கிறார். மனத் தூய்மைதான் எல்லா நல்ல செயல்களுக்கும் அடிப்படை என்பதைத் தம்மபதம் தனது 'சித்தவக்கு', 'அப்பாமவக்கு' என்னும் பகுதிகளில் சொல்கிறது. இதையே திருக்குறள் *'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன் ஆகுல நீர பிற'* என்று இரண்டே வரிகளில் முடித்துவிடுகிறது.' தம்மபதம், திருக்குறள் இரண்டுமே மனக்கட்டுப்பாடு, தூய்மை, வாய்மை, பயனில் சொல்லாமை இவற்றைப் பற்றிப் பேசுகின்றன. பயனில் சொல்லாமை என்பது பௌத்தர்களைப் பொறுத்தவரை மிகமிக முக்கியமான ஒழுக்கம். தம்மபதத்தின் முதல் பாடலே மனதைப்பற்றித் தான் பேசுகிறது. மனம் என்னும் வயலில் எண்ணங்கள் என்னும் பயிர்கள் விளைகின்றன. நம் எண்ணங்களுக்கு மனமே பிறப்பிடம். எனவே, ஒருவன் தீய சிந்தனையுடன் பேசினாலும், செயல் புரிந்தாலும் அவற்றால் விளையும் துன்பங்கள் வண்டியை இழுத்துச் செல்லும் எருதுகளைப் பின்தொடரும் சக்கரத்தைப்போல அவன் பாதச்சுவடுகளைப் பற்றித் தொடரும் என்கிறது தம்மபதம்.

ஐந்து இந்திரியங்களையும், மனத்தையும் சேர்த்துப் புத்தர் ஷடாயதனம் என்றார். (ஆயதனம்-வாயில்கள்) கவனக்குறைவாக இருந்துவிட்டால், தீய பொருள்கள் கூடப் புகுந்து கொள்ளும். ஆதலின் எப்போதும் விழிப்புடனும், சிரத்தையுடனும் விளங்கவேண்டும் என்பது புத்தரின் கொள்கை. இதனைத் தம்மபதத்தின் 'அப்பாமவக்கு' - எச்சரிக்கை உணர்வு என்னும் இயலில் காணப்படும் ஒரு பாடல் கூறுகிறது.

அந்தப் பாடல் அறிவுடையோர், தவம், முயற்சி, நிர்வாணம் அடைய கடுமையான உழைப்பு இவற்றினால் மிக உயர்ந்த விடுதலையையும், மகிழ்ச்சியையும் எய்துவர் எனக் கூறுகிறது.

இதனையே வள்ளுவர்,

*'இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள் நீங்கி*
*மாசறு காட்சி யவர்க்கு'* என்றார்.

சிற்றினம் சேராமை, நல்லாரிணக்கமே நல்லது என்ற அறிவுரைகளை தம்மபதத்திலுள்ள பாலவக்கம், பண்டிதவக்கம் இயல்கள் பேசுகின்றன.

இவற்றையே திருவள்ளுவர் தமது சிற்றினம் சேராமை, பெரியாரைத் துணைக்கோடல் என்னும் அதிகாரங்களில் அறிவுறுத்துகிறார்.

திருக்குறளைப் போலவே தம்மபதமும் அறிவுரைகளை எடுத்துச் சொல்லும்போது பற்பல உதாரணங்களைச் சொல்லி உட்பொருளைத் தெளியவைக்கிறது.

பிராமணவக்கு இயலில் உண்மையான அந்தணன் என்பவன் யார் என்று விளக்கும்போது பண்பாட்டினாலும், ஒழுக்கத்தினாலும், கல்வியாலும் எல்லாருமே அந்தணராக உயர முடியும்; யார் புலன்களை வென்று, ஆசைகளை ஒழித்தாரோ அவரே அந்தணர் என்கிறது தம்மபதம்.

*'அந்தணர் என்போர் அறவோர் மற் றெவ்வு*
*யிர்க்கும்*
*செந்தண்மை பூண்டொழுகலான்'* - என்கிறது குறள்.

தலை முடியும், தாடியும் வளப்பதனாலோ, குடிப்பிறப்பினாலோ, கோத்திரத்தினாலோ ஒருவன் பிராமணன் ஆகமுடியாது. எவன் ஒருவனிடத்தில் தர்மமும், உண்மையும், மனத்தூய்மையும் உள்ளதோ அவன்தான் அந்தணன் என்கிறது தம்மபதம்.

இதனையே திருக்குறள்,

*'மழித்தலும், நீட்டலும் வேண்டா உலகம்*
*பழித்தது ஒழித்து விடின்'* என்று மொழிகிறது.

மேலும், வெகுளாமை என்னும் அதிகாரமே தம்மபதத்தில் 'கோதவக்கு' என்னும் இயல். இது கோபம் கூடாது என்று கடிந்துரைக்கிறது.

*'தன்னைத்தான் காக்கின் சினங்காக்க*
*காவாக்கால்*
*தன்னையே கொல்லுஞ் சினம்'* என வள்ளுவரும் வெகுளாமையை வற்புறுத்தியுள்ளார். திருவள்ளுவரின் அவாவறுத்தலே பாலி மொழியில் 'தண்ஹா' எனப்படும்.

சிலந்தி தான் நெய்த வலைக்குள்ளே தானே அகப்பட்டுக்கொள்வது போல ஆசையைக் கட்டுப்படுத்த முடியாதவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக்கொண்டு மூழ்கி விடுகின்றனர் என்கிறது தம்மபதம்.

யாகம் செய்வதால் மனிதன் மேன்மை அடையமுடியாது என்பது குறித்துத் தம்மபதமும், திருக்குறளும் தீர்மானமாக இருக்கின்றன.

*"அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின்"* என்று ஒரே வார்த்தையில் இந்த உலகத்தில் வேள்வியை விடப்பயனைத்தரும், மேன்மையைத் தரும் அறங்கள் பல உள்ளன என்கிற உண்மையைத் தெளிவாக்குகிறார் வள்ளுவர்.

யாகங்களில் அரசர்கள் ஆயிரக்கணக்கில்



உயிர்களைப் பலி கொடுப்பதை முதலில் எதிர்த்தவர் புத்தர்தான். இந்த இடத்தில்தான் பௌத்தம், இந்து மதத்திலிருந்து வேறுபடுகின்றது. அவ்வழியை வள்ளுவரும் மேற்கொண்டவராக உள்ளார் என்பதே இந்த இரண்டு நூல்களுக்குமிடையேயான சிறப்பான ஒற்றுமை.

இது போலச் சில அடிப்படையான கொள்கைகள் ஒரேமாதிரி இருப்பதால் வள்ளுவர் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர் என்று வாதம் செய்பவர்கள் உளர். வள்ளுவர் எந்தக் குறிப்பிட்ட மதத்தையும் சார்ந்தவரல்லர், மாறாக, உலகம் முழுவதும் மக்கள் மேன்மையான வாழ்க்கை வாழ உலகை உய்விக்க வந்த சிந்தனையாளர் என்று சொல்லலாம்.

## மலர் ஏன் அழுதது?

புலர் பொழுது
மலர் மயங்கி
இதழ் நனைந்ததோ?

பனி படர்ந்து
கனி கரைந்து
இதழ் நனைந்ததோ?

துளி இருந்து
'வளி அசைந்து
மலர் அழுததோ?

தனி மலர்ந்து
துணை இரந்து
மலர் கரைந்ததோ?

மதி மறைந்து
மனம் உருகி
மலர் நனைந்ததோ?

பனி பொழிந்து
இதழ் நனைந்து
மலர் அழுததோ?

- ஔவையரசன்

# காணாமற் போனோரின் உறவினர் என்ற "சமூகம்" யாழ்ப்பாணத்தில் புதிதாகத் தோன்ற வேண்டுமோ?



செம்மணிக் கொலைகள் தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் தமது முகத்தை மறைத்துக் கொள்கிறார்.

ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது எங்கள் தமிழ் முதுமொழி. உண்மையும் அதுவே. ஆனால் குடாநாட்டில் நான்கு வருடங்களுக்கு முன்னர் காணாமற் போன இளைஞர், யுவதிகளின் பெற்றோர்கள், உறவினர்களில் மிகப் பெரும்பாலானோர் முதுமொழி இது விடயத்தில் உண்மையாகி விடக் கூடாது என்று தமது மனங்களில் நேர்ந்து கொண்டிருக்கின்றனர்!

கிருஷாந்தி கொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட இராணுவக் கோப்ரல் ராஜபக்ஷவும் மற்றும் நால்வரும் படையினரால் கொல்லப்பட்ட பெரும் எண்ணிக்கையானோரின் சடலங்கள் செம்மணிப் பகுதியில் புதைக்கப்பட்டதாகத் திடுக்கிடும் தகவலை நீதிமன்றத்தில் வெளியிட்டபோது -

குடாநாட்டில், இலங்கையில் மட்டுமன்றி, சர்வதேச மட்டத்திலும் பெரும் பரபரப்பு உண்டாகியது.

1996 இல் காணாமற்போன நூற்றுக்கணக்கானோரின் சடலங்களும் செம்மணிப் பகுதியிலேயே கிடக்கும் என்று பலரும் ஊகித்தனர், சர்வதேச மனித உரிமை இயக்கங்கள் பலவும் செம்மணிப் புதைகுழிகள் தோண்டப்பட்டு உண்மை நிலை வெளிக்கொணரப்பட வேண்டும் என்று வலியுறுத்தத் தொடங்கின.



சந்தேகநபர்களை நீதிமன்றத்துக்கு வெளியே கூட்டிச்சென்றவேளை அன்னையர்கள் அவர்களை மண் அள்ளி வீசித் திட்டித் தீர்க்கும் காட்சி.

ஆனால் குடாநாட்டில் காணாமற் போனவர்களின் பெற்றோர்களும், உறவினர்களும் அவ்வாறு நடந்திருக்கும் என்று மனதில் ஒரு

## சந்திரிகாவின் விட்டுக் கொடுக்கும் போக்கும் குழப்பம் காய்ச்சும் கூற்றுக்களும்

பதிவைச் செய்து கொள்ள விரும்பவில்லை. தங்கள் பிள்ளைகளும், கணவன்மாரும், சகோதர சகோதரிகளும் இறக்கவில்லை; படையினரால் எங்கோ தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்; எப்போதோ ஒரு நாள் உயிரோடு திரும்பி வரக்கூடும் என்ற நம்பிக்கையே அவர்களின் மனங்களில் ஆழமாக வேரூன்றி இருந்தன.

அதனால், நீண்ட இடைவெளியின் பின்னர் செம்மணிப் புதைகுழிகள் தோண்டப்பட்ட வேளையிலும், மொத்தம் பதினைந்து எலும்புக்கூடுகளும் எச்சங்களும் கண்டு எடுக்கப்பட்ட வேளையிலும்கூட அவை தங்களின் உறவுகளின் எலும்புக்கூடுகளாக இருக்கக் கூடாது என்றே இவர்கள் தமக்குள் பிரார்த்தித்தனர்.

தோண்டி எடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளில் மூன்று இன்னாரினவை என்று அடையாளம் காணப்பட்ட பின்னர் அவற்றுக்குரியவர்களின் பெற்றோர், மனைவி மற்றும் உறவினர்களைச் செவ்வி காணச் சென்ற எமது செய்தியாளர்களிடம் அவர்கள் கூறிய தகவல்கள் -

தமது காணாமற்போன உறவுகள் எப்போதோ ஒருநாள் உயிருடன் திரும்பி வருவார்கள் என்ற பெரும் நம்பிக்கை உணர்வுடனேயே காலத்தைக் கழித்தனர் என்பதனை அறிய வைத்தனர்.

ஆனால், அந்த நம்பிக்கை இப்போது சிறிது சிறிதாக அவர்களிடம் கருகி வருகிறது. கடந்த செவ்வாய்க்கிழமையன்று யாழ்ப்பாண நீதிமன்றத்தில் கொலைச் சந்தேக நபர்களான நான்கு இராணுவத்தினரும், ஒருபொலீஸ்காரரும் ஆஜர் செய்யப்பட்டபோது, கைது செய்யப்பட்டுக் காணாமற்போனவர்களின் தாய்மார்களும், மனைவிமார்களும் சோக உணர்வு கோப உணர்ச்சியாக மாறி மண் அள்ளித் திட்டிய காட்சி எல்லோரின் கவனத்தையும் கருத்தையும் ஈர்த்தன. நெஞ்சங்களை நெகிழவைத்தன.

"இவன்கள் தான் எங்கள் பிள்ளைகளைப் பிடித்தவன்கள். எங்கள் பிள்ளைகளைக் கொன்ற இவன்கள் நாசமாகப்போக" என்று அழுதவாறு மண் அள்ளிக் கொட்டித் தாய்மார்கள் திட்டிய காட்சி பார்த்தவர்கள் மனதிலிருந்து பல வருடங்கள் கழிந்தாலும் கரையாது பதிந்திருக்கும்.

சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவதை அறிந்து காணாமற்போனோரின் உறவினர்கள் பெரும் எண்ணிக்கையில் வெளியே கூடினர். தம்மை உள்ளே செல்ல அனுமதிக்குமாறு காவலுக்கு நின்ற பொலீஸாரிடம் கேட்டனர். கண்ணீரும் கம்பலையுமாக நின்ற அன்னையர் பொலீஸாரையும் தாண்டிக் கொண்டு நீதிமன்ற வளவுக்குள் சென்றுவிடுவார்களோ என்று எண்ணத் தோன்றும் அளவுக்கு அடிக்கடி உணர்ச்சி வெடிக்கும் காட்சிகள் உருவாகின.

காணாமற்போனோரின் பெற்றோர்களும் உறவினர்களும் சோகத்தின் எல்லையில் இவ்வாறு உணர்ச்சி வசப்பட்டமை தங்கள் பிள்ளைகளும் உறவினர்களும் இராணுவத்தினரால் கொல்லப்பட்டிருப்பார்கள் என்ற பதிவை அவர்தம் மனதில் ஏற்படுத்தியதன் விளைவே என்று ஊகிக்கலாம்; கொள்ளலாம். எனினும் அவ்வாறு நடந்திருக்கக்கூடாது என்று அவர்களை அறியாமலே அவர்தம் மனங்களில் இறைவனைத் தொடர்ந்து பிரார்த்தித்துக் கொண்டிருப்பதும் ஓரளவில் புலனாகிறது.

யாழ். செயலகத்தின் புள்ளிவிவரங்களின் பிரகாரம் 1996 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் குடாநாட்டில் மொத்தம் 612 பேர் காணாமற் போயுள்ளனர். இவர்களில் 15 பேரின் எலும்புக் கூடுகளும் எச்சங்களுமே மீட்கப்பட்டன. அவற்றிலும் மூன்று பேரின் எலும்புக்கூடுகளே இனங் காணப்பட்டுள்ளன; அடையாளம் காணப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட 15 எலும்புக்கூடுகள் தொடர்பான மரண விசாரணைகளை நடத்திய யாழ். மேலதிக நீதிவான் எம். இளஞ்செழியன், எலும்புக்கூடுகளுக்கு உரியவர்கள் திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று தீர்ப்பளித்துள்ளார். எந்த எலும்புக்கூட்டிலும் சூட்டுக் காயமோ, குண்டு வெடித்தமைக்கான காயமோ இல்லை என்றும் நீதிவான் தெரிவித்தார்.

எலும்புக்கூடுகள் பெரும்பாலும் இளவயதான நபர்களுடையவை. ஒன்றில் மட்டுமே வெட்டுக்காயம் உள்ளது. ஏனையவர்கள் அனைவரும் பொல்லுகளால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளனர். பெரும்பாலும் மூளை, முகம், நெஞ்சுப் பகுதிகளே அடித்து எலும்புகள் உடைக்கப்பட்டுள்ளன. ஓர் எலும்புக்கூட்டுக்கு உரியவர் கண்கள் கட்டப்பட்ட பின்னர் அடித்துக் கொல்லப்பட்டுள்ளார். ஒருசடலத்துக்கு உரியவரின் கைகள் கட்டப்பட்டுள்ளன - என்பது நீதிவானின் தீர்ப்பின் ஒரு பகுதி.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் சித்திரவதை செய்யப்பட்டு, மிருகங்களை அடித்துக் கொல்வது போலக் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பது மிகத் தெளிவாகப் புலனாகிறது.

இதனை ஒருபதச் சோறாகக் கொண்டு நோக்கினால், கைது செய்யப்பட்டுக் காணாமற் போன மிகுதி சுமார் 600 பேருக்கும் இதே கதியே ஏற்பட்டிருக்கும் என்று இலகுவில் ஊகிக்கலாம்.

செம்மணிப் புதைகுழிகள் தோண்டப்பட்ட வேளை எதிர்பார்த்ததை விட மிகச் சொற்பமான எலும்புக்கூடுகளும் எச்சங்களுமே மீட்கப்பட்டன. அதனால் செம்மணி விவகாரத்தை சர்வதேச சமூகம் பெரிதாக எடுத்துக் கொள்ளாது என்று இங்குள்ள பலரும் கருதினர்.

ஆனால் புதைகுழிகள் தோண்டப்படுவதை நேரில் பார்க்க வந்திருந்த ராஜீக வட்டாரங்களைச் சேர்ந்த ஒருவர், ஓர் எலும்புக்கூடு மீட்கப்பட்டிருந்தால், இலங்கை அரச படைகளின் மனித உரிமை மீறலுக்கும், கொடுமைக்கும் சான்றாக அது வெளி உலகத்தினால் கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

அதே வகையில் காணாமற் போனதாகக் கருதப்படும் எஞ்சிய சுமார் 600 பேரும் படையினரால் சித்திரவதை செய்யப்பட்டு, கொல்லப்பட்டனர் என்ற முடிவுக்கே எவரும் வர வேண்டியுள்ளது.

கண்ணீரும் கம்பலையுமாக, தமது பிள்ளைகள் திரும்பிவருவார்கள் என்ற நம்பிக்கையைத் துறக்க முடியாத நிலையில், நாள்களை நகர்த்திக் கொண்டிருக்கும், வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்கும் காணாமற்போனோரின் உறவினர்களுக்கு அரசாங்கம் என்ன பதில் சொல்லப்போகிறது? குடாநாட்டின் தமிழர்கள் மத்தியில் காணாமற்போனோர்களின் உறவினர்கள் என்ற ஒரு பிரிவைத் தோற்றுவிக்கும் நோக்கமா?

குடாநாட்டில் காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதனைக் கடந்த நான்கு வருடங்களாகக் கூறமுடியாத அரசு, இது விடயத்தில் இனியாவது தனது மூடி மறைப்பைக்

## அரசாங்கம் இனியும் மௌனம் சாதித்தால் அந்நிலையே ஏற்படும்

கைவிட்டு உண்மையைச் சொல்ல முன்வர வேண்டும்.

அரசு தனது ஆயுதப் படைகள் செய்த கொடுமையை ஒப்புக் கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டது. தனது படைகள் தமிழர்களைக் கேவலம் மிருகங்களாகக் கருதியே செயற்படுகின்றன என்பதனை அரசாங்கம் இனியும் மறைக்கவும் இயலாது. பூசிமெழுகிச் சமாளிக்கவும் இயலாது. இது அரசியலுக்கும் அப்பாற்பட்ட மனித உரிமை மனிதாபிமான விடயம் என்பதனை மறந்துவிடலாகாது.

இதனைக் கருதியேனும் வடக்கு - கிழக்கில் நிலைகொண்டுள்ள படைகளை விலக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்வதற்கு அரசு பின்னடித்தால், தமிழர்களை இனஒழிப்புச் செய்வதே அதன் இலக்கும் இலட்சியமும் என்பது சான்றாகப்படும். இது விடயத்தில் தனது மௌனத்தைக் கலைத்தால் உலக அரங்கில் அபகீர்த்தி ஏற்பட்டுவிடும் என்று அஞ்சுகிறதா, என்ன?

★ ★ ★

## உள்ளும் புறமும் — குறுமுனி

வடக்கு - கிழக்கில் நிலைகொண்டுள்ள அரச படைகளை விலக்கும் விடயம் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா அன்றைய தினம் கொழும்பில் உள்ள வெளிநாட்டுப் பத்திரிகையாளரைச் சந்தித்துப் பேசினார். இரண்டாவது முறையாகவும் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் சந்திரிகா செவ்வாயன்றே முதற்தடவையாக வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் கொழும்பு மாநகரசபை வளாகத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பின் போது தமது வலது கண்ணில் காயமுற்ற பின்னரும் செவ்வாயன்றே ஜனாதிபதி முதல் தடவையாக வெளிநாட்டுச் செய்தியாளர்களைச் சந்தித்திருக்கிறார்.

அதுமட்டுமன்றி கொழும்பில், ராஜகிரியாவில் கடந்த வாரம் நடந்த - 27க்கும் அதிகமானோரைப் பலிகொண்ட - தற்கொலைக் குண்டுத்தாக்குதலின் பின்னரும் ஜனாதிபதி பத்திரிகையாளர்களைச் சந்தித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் தமக்குள்ள ஆர்வத்தை வெளியிட்டதாலும் இச்சந்திப்பு முக்கியமானது என்று வெளிநாட்டுப் பத்திரிகையாளர் ஒருவர் விசேடமாகக் குறிப்பிட்டார். இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பின் போது எப்போதும் இல்லாதவாறு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாகவும் அவர் சொன்னார்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறுவதற்கு, அதற்கான புறச்சூழ்நிலை அவசியம் என்று புலிகள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது. வடக்கு - கிழக்கில் 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் படைகள் இருந்த நிலைகளுக்கு முடக்கப்படவேண்டும் என்பது விடுதலைப் புலிகளின் நிலைப்பாடகச் சொல்லப்பட்டது. இதனை ஒரு வகையில் ஓரளவு போர் நிறுத்தம் என்றும் நோக்கலாம் என சில விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

இந்த விடயத்தை வெளிநாட்டுச் செய்தியாளர்கள், செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சந்திப்பின் போது பிரஸ்தாபித்தனர். அதற்குப் பதலளித்த ஜனாதிபதி, விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி ஒரு விரிவான ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதற்கு முன்னர் வடக்கு - கிழக்கில் இருந்து அரசபடைகள் எக்காரணம் கொண்டும் விலக்கப்படமாட்டாது என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறியிருக்கிறார்.

அத்தோடு பேச்சுக்கள் மூலமான தீர்வு ஒன்றை எட்டுவதன் மூலமே போரை முடிவுக்குக் கொண்டு வரமுடியும் என்ற பதிலும், இப்போதைக்குப் போரை நிறுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை என்பதனையே காட்டுகிறது.

இதேவேளை, நோர்வேயின் அனுசரணையுடன் விடுதலைப்புலிகளுடன் நடைபெறவுள்ள பேச்சுக்கள் குறித்துச் சந்திரிகா நம்பிக்கையுடன் காணப்பட்டார் என்று அதில் கலந்து கொண்ட வெளிநாட்டுச் செய்தியாளர்கள் பலர் மதிப்பீடு செய்கிறார்கள்.

விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கான சகல ஒழுங்குகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகக் கூறிய சந்திரிகா, பேச்சுக்கள் எப்போது ஆரம்பமாகும் என்பதனைத் திட்டவட்டமாகச் சொல்லவில்லை. அனுசரணையாளராகப் பணிபுரியும் நோர்வேயில் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டாலும் அரசு - புலிகள் பேச்சுவார்த்தைக்கு குந்தகம் உண்டாகாதவாறு அந்த நாட்டின் பணி தொடரும் என்று தமக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் சந்திரிகா கூறியுள்ளார்.

அதேபோல, கொழும்பில் கடந்த வாரத்தில் விடுதலைப் புலிகள் பெரும் தற்கொலைத் தாக்குதலை நடத்தியபோதிலும், பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்கான ஆயத்தப் பணிகளில் அவர்கள் மிகவும் அக்கறையுடனும் ஈடுபாட்டுடனும் இறங்கியிருப்பதாகத் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகக் கூறிய சந்திரிகா -

அவர்கள் இது விடயத்தில் இம்முறை விசுவாசமாக உள்ளனர் என்று அறியப்படுவதாகவும், அதன் காரணமாக விடுதலைப் புலிகளையும் ஏனைய கட்சிகளையும் திருப்தி செய்யும் ஒரு தீர்வைக் கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கை தமக்குப் பிறப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியை சந்திரிகா இரண்டாவது தடவையாக நேற்றுச் சந்தித்துப் பேசினார். இந்தப் பேச்சுக்கள் இன்னும் நான்கு வாரங்களில் முடிவுற்றுவிடும் என்று அரச தரப்பு மதிப்பிடுகிறது.

அதன் பின்னர் விடுதலைப்புலிகளுடன் பேசி தீர்வு ஒன்றை எட்ட வேண்டும். தீர்வு ஒன்று வகுக்கப்பட்டதும் அதனை ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற வேண்டும் - அந்த மாதத்தில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதே அரசாங்கத்தின் அட்டவணையாக உள்ளது.

இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை வகுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ விடுதலைப் புலிகளும் ஒத்துழைப்பு நல்கின், விடில் மாகாணங்களுக்கு பரந்த அளவில் சுயாட்சி அதிகாரங்களை வழங்கும் அரசின் அரசமைப்புச் சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதும் ஜனாதிபதி சந்திரிகாவின் மாற்றுத் திட்டமாக இருக்கிறது.

எவ்வாறெனினும் ஐக்கிய தேசியக் கட்சியுடனும், விடுதலைப் புலிகளுடனும் நடத்தும் பேச்சுகளில் நியாமான வகையில் விட்டுக் கொடுக்கும் நிலைக்கு அரசு தரப்பு வந்திருப்பதை ஓரளவு ஊகிக்கமுடிகின்றது என்று சந்திப்பில் பங்குபற்றிய வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

ஆனால் விடுதலைப் புலிகளின் தலைவர் பேச்சுவார்த்தைக்கு தலைமை வகித்து வந்தாலும் தமக்குப் பதிலாக அமைச்சர் ஒருவரையே அரசு தரப்புக்கு தலைமை வகிக்க நியமிக்க முடியும் என்று ஜனாதிபதி தெரிவித்திருப்பது

(XV ஆம் பக்கம் பார்க்க)

# சைவமும் தமிழும் வளர்த்த சதாவதானி கதிரைவேற்பிள்ளை

செந்தமிழின் சிறப்பினையும் மேன்மை கொள சைவத்தின் நுட்பத்தி னையும் எடுத்தாண்டு சைவத்தையும் தமிழையும் வளர்த்த பெரியார்கள் பலரை வரலாற்றில் காண்கிறோம். அந்த வரிசையில் ஈழத்தில் குறிப்பாக புலோலியம்பதியில் வாழ்ந்த அறிஞர் பெருமக்கள் பலரும் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்குவது அறிதற்குரியதாகும். யாழ்ப்பாணத்துச் சுவாமிகள் எனப் பாரதியால் போற்றப் பெற்ற சி.வே.அருளம்பலசுவாமிகள், நல்லைநாவலன் கோவையாத்த இலக்கணவித்தகர் கந்தமுருகேசனார், சிவசம்புப்புலவர், சின்னத்தம்பிப்புலவர், சிவபாதசுந்தரனார், கார்த்திகேயபிள்ளை போன்ற பல அறிஞர் குழாத்தினுட் சிறப்பிடம் பெறுபவராக மேலைப் புலோலி நா.கதிரவேற்பிள்ளை அவர்கள் விளங்கினார் என்றால் தவறாகாது.

தமிழையும் சைவத்ததையும் இரு கண்களாகப்போற்றி வளர்த்த நல்லை நகர் தந்த ஆறுமுகநாவலர் அடியொற்றி கதிரைவேற்பிள்ளையவர்களும் அரும்பெரும் பணியாற்றினார். 1871ஆம் ஆண்டு மேலைப் புலோலியில் பிறந்த பிள்ளையவர்கள் 1875ஆம் ஆண்டு நல்லை நாவலரால் அத்திவாரமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி கற்றுப் பிற்பட அக்கல்லூரியிலேயே சிலகாலம் ஆசிரியராகவும் பணியாற்றினார். தமது கல்விப்பணியின் செழுமையினைத் தொடர தமது இருபத்தோராவது வயதளவில் தமிழகம் சென்றார். ஞானப்பிரகாசசுவாமிகள், ஆறுமுகநாவலர், காசிவாசி செந்திநாதையர் போன்ற ஈழத்தறிஞர்கள் பலரினைப்போலக் கதிரைவேற்பிள்ளையவர்களும் தமிழகம் சென்று தம் கல்விப்புலமையின் வலிமையினையும் சிறப்பினையும் தெளிவுறுத்தும் வகையில் புகழ்பரப்பினார். தமிழ் நாட்டில் சைவத்தினையும் தமிழையும் வளர்த்துப் புகழீட்டிய வகையில் கதிரைவேற்பிள்ளையுடைய பணிகள் பல வகையில் பரந்து விரிந்து விளங்கின.

தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிப்பாண்டித்தியம் கொண்டிருந்த கதிரைவேற்பிள்ளையவர்கள் சிறந்த பேச்சாளராகவும் தாம்கொண்ட கருத்தை முறையாகத் தர்க்கிக்க வல்ல சிந்தனையாளராகவும் விளங்கியவராவார். பழம் பெரும் பொக்கிஷங்களாக விளங்கிய நல்ல பல தமிழ் நூல்களைக் காலத்தின் தொன்மையில் கரைந்திடா வண்ணம் காக்க வேண்டிய பொறுப்பினை உணர்ந்து செயற்பட்டவராகவும் விளங்கினார். அதேவேளை பேரிலக்கியங்கள் பலவற்றின் இறுக்கத்தன்மை உணர்ந்து அவற்றை தெளிவுற விளங்கிக்கொள்ளுதற்பொருட்டு விளக்கவுரையாத்து கற்றறிந்த மாந்தர்களின் பாராட்டுக்களையும் பெற்றவராவார். இவ்வகையில் உரையாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் தம்மைப் பல்வகைப் பணிகளில் ஈடுபடுத்தித தமிழுக்கு அழியாப் புகழினையும் எழுச்சிமிக்க உயர்வினையும் அவர் அளித்தமையினாலேயே இன்று அவரது தொண்ணூற்றி மூன்றாவது குருபூசை தினத்தினைக் கொண்டாடி அவர் ஆற்றியபணியை மனதார நினைந்து போற்றுவது குறிப்பிடத்தக்கதாகிறது.

கூர்மபுராண விரிவுரை, யாப்பருங்கலவிருத்தி, பழனித்தல புராணவுரை, திருவானனக்கலம்பகம், சிவராத்திரிப் புராணவுரை போன்றன அவரது உரைவன்மைக்குச் சான்று பகர்கின்றன. கதிரைவேற்பிள்ளையவர்களுடைய தமிழ்த் தொண்டில் அழியாப் புகழினை ஈட்டி கொடுத்து கலங்கரை விளக்காகத் திகழ்வது அவரது தமிழ்ப் பேரகராதி எனலாம். இதனை யாழ்ப்பாண அகராதி எனவும் அழைத்தனர். ஆயிரத்து அறுநூற்றி முப்பத்தாறு பக்கங்களைக் கொண்டமைந்த இந்த அகராதி தமிழில் எழுந்த பேரிலக்கிலக்கியங்கள், இலக்கணங்களைச் சாதாரண மக்களும் எளிதில் கற்றுணர்ந்து கொள்வதற்கு நல்லதொரு வழிகாட்டியாக அமைந்தது. இவ்வகராதியே தமிழ் மொழிக்கென எழுந்த அகராதிகளில் முதலாவதெனச் சுட்டப் பெறும் பெருமைக்குரியதாகும். இதன் சிறப்புக் கருதியே இந்த அகராதி பல பதிப்புக்களைக் கண்டது. இது யாழ்ப்பாணத்தவர்களாகிய எமக்குப்பெருமை சேர்ப்பதாகும்.



சிவசேத்திராலய மகோற்சவ விளக்கம், ஏகாதசி புராண அரும்பதவுரை, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வரலாறு முதலாய நூல்களும், கதிரவேற்பிள்ளையவர்களின் தமிழ்ப் பணியின் பரப்பினை விரித்து நிற்கின்றன.

உ.வே. சாமிநாதையரின் பதிப்பாசிரியப் பணியின் காத்திரத் தன்மையை உணர்த்துமாற்போல, கதிரவேற்பிள்ளையவர்களுக்கும் நைடத விருத்தியுரை, அகத்திய தேவாரத் திரட்டு, கதிர்காமக் கலம்பகம் முதலான நூல்கள் பலவற்றினைப் பதிப்பித்தவராவார். குறிப்பாக நைடதத்திற்கு அவர் எழுதிய ஆராய்ச்சியுரை அறிஞர்கள் பலரா்லும் பெருமதிப்புக்குரிய வகையில் சிறப்பித்துக் கூறப்பெற்றமை பிள்ளையவர்களின் நுட்ப அறிவிற்குச் சான்றுபகர்வதாகின்றது.

உரையாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும், நூலாசிரியராகவும் விளங்கியது மாத்திரமன்றி, சிலேடை நயம்மிக்க கவியாத்த பெருமை பிள்ளையிடம் மிஞ்சியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அவரது கருவூர் மான்மியம் அவரது பாடல் தரத்தின் சிறப்பிற்கும் நுட்பக் கருத்தமைப்புக்கும் தக்கதோர் உதாரணமாக விளங்கிற்று. சதாவதானி எனும் பட்டத்தைப் பெறுவதற்குரிய வகையில் அமைந்த அவதானப் பரீட்சையில் பிள்ளையவர்கள் பலதுறை சார்ந்த பேரறிஞர்களால் எழுப்பப் பெற்ற வினாக்களுக்கெல்லாம் பதிலளித்தபோது அவரது கவியாக்கும் புலமையும் தெளிவாகப் புலப்பட்டமை காணலாம். தொடக்கச் சொல்லும் முடிக்கும் சொல்லும் சுட்டிப்பாவில் உள்ளடங்க வேண்டிய கருப்பொருளும், பாவின் வகையும் கூறியதும் கவியாத்தளித்த பெருமை பிள்ளையவர்களின் ஆழ்ந்த புலமைக்குச் சான்றாயிற்று.

கதிரவேற்பிள்ளையவர்களுடைய காலத்தில் தமிழும் சைவமும் தளர்வுற்றுப் பிறமதத்தவர்களின் பிரசார மருட்சியினுள் மக்கள் மயங்கித் திரிந்த காலமெனலாம். மக்களைத் தம்நிலை உணர்த்தி, தம்மதச் சிறப்பை உணரவைக்கவேண்டிய பணியைக் கதிரைவேற்பிள்ளையவர்கள் தாமே மனமுவந்து ஏற்றுக் கொண்டமை சைவத்தின் வளர்ச்சிக்கு உதவுவதாயிற்று, மேலும் அவரது சொற் பெருக்காற்றும் திறமையும் வாதிட்டுரைக்கும் நுட்பமும் சைவத்தின் மறுமலர்ச்சிக்குக் கிடைத்த வரப்பிரசாதங்களாயின. கதிரைவேற்பிள்ளையவர்களின் சமயப்பிரசாரங்களை மக்கள் விருப்புடன் நாடிவரத் தொடங்கினர். அவரது சிந்தனைகளைச் செவிமடுத்த மக்கள் பலருக்கும் பிறமதப் பிரசாரங்கள் விளைத்த மயக்கங்களின்று விடுவதற்கு அது வாய்ப்பாயிற்று. தருக்கம், நகைச்சுவை, இலக்கிய நயம், ஆழ்ந்த பொருளமைதி ஆகியன கைவரப்பெற்று அவர் பேச்சுக்கள் விளங்கின. கற்றோரும், மற்றோரும் களிப்பெய்தி அவரின் பேச்சில் தம்மை உணர்ந்து, சமயத்தின் பெருமையில் இறுகத்திளைப்பவராயினர். அவரது கருத்தாழம்மிக்க பேச்சுக்கள் தம் மத உண்மைகளை உணர்ந்து கொள்வதற்கு மாத்திரமன்றிப் பிற சமயத்தவர்களின் போலி நிலைகளையும், பொய்த் தோற்றங்களையும் வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பாயிற்று. இதனாலேயே இவரது பேச்சுகள் சைவத்திற்குப் புத்துயிரும், புதுமெருகும், ஏன் புது வாழ்வே கொடுத்ததெனலாம். இவரது பேச்சுக்களின் நயங்கருதியே 'மாயாவாத தும்ச கோளரி' எனும் சிறப்பக்குரிய பட்டத்தினைக் காசிவாசி செந்தில்நாதையர் தலைமையில் அளிக்கப் பெற்றமை காண்கிறோம். அதேபோல ஆரணி சமஸ்தானத்தில் வித்வானாக இருந்த காலத்தில் "அத்துவித சிந்தாந்த மகோத்தாரணர்" எனும் சிறப்புப்பட்டத்தினையும் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ஆறுமுகநாவலருக்கும் இராமலிங்க சுவாமிகளுக்கும் இடையில் எழுந்த அருட்பா - மருட்பா மோதலின் தொடர்ச்சியைப் பிள்ளையவர்களும் எதிர்நோக்கவேண்டியதாயிற்று. கால் நூற்றாண்டுக்குப் பிற்படவும் அருட்பா - மருட்பா என்னும் சர்ச்சையின் காரணமாக கதிரைவேற்பிள்ளையவர்கள் நீதிமன்றம் ஏற வேண்டியதான சூழல் எழுந்தது. நீதிமன்றத்தில் தம் கருத்தினை ஆணித்தரமாக எடுத்துரைத்து நீதியைத் தன்பக்கம் நிலைநாட்டிக் கொண்டார். அவரது "போலியருட்பா மறுப்பு" எனும் கண்டன நூல் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்த நூலாக்கத்தின் வழி 'போலி யருட்பாப் பிரபந்த நிர்க்கந்த கிஞ்சக கண்டனப் பிரசண்ட மாருதம்' எனும் சிறப்புப் பட்டத்தினைப் பெற்றுக் கொண்டார். மேலும் 'சைவசிந்தாந்த மகாசரபம்' எனும் பட்டமும் இவருக்கு அளிக்கப்பெற்றுக் கௌரவிக்கப்பட்டார். இவரது சைவ பூஷண சந்திரிகை, சைவசிந்தாந்தச்சுருக்கம் ஆகியன சைவசமய உண்மைகளையும் சிறப்புக்களையும் விளக்கி நிற்கும் நூல்களாகும். மருட்பா மறுப்புப் போலப் புத்தமதக் கண்டனமும் பிள்ளையவர்களின் கண்டன மரபில் எழுந்த நூல்களில் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

கதிரைவேற்பிள்ளையவர்கள் கந்தனில் அளவுகடந்த பற்றுடையவராய் விளங்கியமை காண்கின்றோம். சுப்பிரமணிய பராக்கிரமம் எனும் நூல் முருகப்பெருமானிடத்தில் அவர் கொண்ட பக்தியினை எடுத்துரைக்கப்போதியதாகும். கவிதையும் உரைநடையும் கலந்த இந்நூல் அவரின் அறிவாழத்தை எடுத்து விளக்கும் ஓர் உயரிய படைப்பாக விளங்குகின்றது. இந்நூல் நூற்றைம்பதிற்கும் மேற்பட்ட தமிழ், வடமொழி நூல்களினைச் சான்றாதாரமாகக் கொண்டு ஆக்கப் பெற்றுள்ளமை மனங்கொளத்தக்கதாகும். இதனை விட, புதுச் சந்நிதிக் கந்தர் பிள்ளைத் தமிழ், கந்தர் நவமணிமாலை போன்ற நூல்களும் கந்தனில் அவர் கொண்டிருந்த காதலை எடுத்துரைக்க வல்லனவாகும். மேலும் ஸ்ரீசரஸ்வதிபீடம் கந்தப்ப சுவாமிகளால் பாடப்பெற்ற கதிர்காமக் கலம்பகம் எனும் நூலும் அழிந்துவிடாவண்ணம் பிள்ளையவர்களால் பதிப்பிக்கப்பட்டமையும் காணற்குரியதாகும்.

தமிழும் சைவமும் தளர்ந்து விடாது வளர்ந்து மேன்மையுறப் பிள்ளையவர்கள் வாழ்வு உரமாயிற்றென்றால் மிகையாகாது. சதாவதானி எனும் ஆற்றல் மிக்கவராய்த் தன் திறமையினைப் பலர் நிறைந்த பேரவையில் நிரூபித்துச் சிறப்புக்குரிய பட்டத்தினைப் பெற்றுக்கொண்டவராவார். நாவன்மைமிக்க பிள்ளையவர்களின் பிரசங்கங்களும் சொல்வன்மை கலந்த நூல்களும், தமிழுக்கும் சைவத்திற்கும் அளப்பரிய பணிகளாக அக்காலத்தில் அமைவுற்றன. அன்னாரின் பணிகள் இன்றும் தமிழின் இனிமையையும் சைவத்தின் பெருமையினையும் எமக்கு உணர்த்தி நிற்கும் சான்றுகளாய் மிளிரக் காண்கின்றோம். எம்மண்ணில் பிறந்து எம் சிந்தனைகளை வளம்படுத்திய இப்பெரியோர்களை மனங்கொள்வது எம் எல்லோருக்கும் நன்மை பயப்பதாகும். கதிரைவேற்பிள்ளையவர்களின் பார்பூத்த புகழை நாம் அறிவது மாத்திரமன்றி வருங்காலத்துச் சந்ததியினரும் அறிந்து கொள்ளவும் அவர் ஆற்றிய பணிகளை உள்ளத்திடை பதித்துக் கொள்ளவும் வேண்டி அவர்தம் பணிகள் அழிந்திடா வண்ணம் பேணிக் காப்பது எம் தலையாய கடனாகும். அவரது நினைவு தினமான இன்று அதற்கு உறுதி செய்து கொளவோம்.

பேராசிரியர் நா.ஞானகுமாரன்
(மெய்யியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

## காமம் கடந்த யோகம்

பெண்ணினைப் பார்க்கும் பொழுது
பேசத்தான் மனது ஏங்கும்
கண்ணினைக் கயலே என்றும்
கார்குழற் புயலே என்றும்
வண்ணத்தில் நிலவே என்றும்
வானவில் அழகே என்றும்
எண்ணங்கள் கூடி வந்து
ஏறிடும் கொம்பி லாடும்!

சிரிப்பிலே முத்து உதிரும்
சினக்கையில் குருதி கொதிக்கும்
அரிக்கும்நம் மனது அவளின்
அடியிலே விழுந்து கிடக்கும்
நெருப்பிலே பாய முடியும் - தாவி
நிலவிலே சாய முடியும்
இருப்பிலே இருந்து உயர
இமயத்தை தொடவும் முடியும்!

இத்தனை இருந்தும் காமம்
இம்மியும் சேரா நட்பை
மொத்தமாய்த் தருக - அன்பின்
மொழியிலே துவைத்து வைத்த
சித்தனாய் உலகில் வாழும்
சிந்தையை எனக்குத் தருக
அத்தனே, என்று இறைவன்
அடியினை இறைஞ்சிப் பணிந்தேன்!

- கி.வாயுபுத்திரன் -

## புதிர்கள்

கவிதா கவிதா என்றால்
கவியார் தருவார்? என்னைப்
பிரியாப் பிரியா என்றால்
பிரிந்தே போவாள் - நன்று!
சரி, தா சரிதா என்றால் - என்ன
தருவாள் என்று வெம்பி
இனியா இனியாய் என்றால்
இனியாள் என்ப துண்மை!

சுஜந்தா சுயம்தா என்றால்
சுயமே இல்லை என்ற
பயந்தான் மனதில் நல்ல
பலனே இல்லை, வாழ்வின்
அஜந்தா அசந்தால் என்னை
அடியில் வீழ்த்தும் தன்மை
நிசந்தான் என்று கண்டன்!
நிறைவு எதுவோ?! பெண்ணே!

ஜனனி சனனி என்றால்
சயனப் பொழுதில் எந்தன்
கனவில் கலக்க வந்து
கடுமை அகற்றும் நல்ல
மனம்நீ மனுநீ அந்த
மகிழ்வி லமிழந்து நின்ற
நினைவில் புசத்தும் எந்தன்
நிலைமை கண்டூர் சிரிக்க

திரிந்தேன் திரிந்தேன் தெருவில்
தினமும் அதனின் விளைவால்
எரிந்த இதயம் விழுந்து
இளகி உருகி நெய்யாய்
பொரிய, வளரும் ஒளியும்
பொசுங்கு மனமும் எழுந்தும் -
அவளை
புரிந்து கொள்ள முயன்றும்
புரியவில்லை எதுவும்!

- குருபரன் -

# புன்னகைக்கும் பெண்ணைப் பார்த்து சந்தோசப்படவா? சந்தேகப்படவா?

**நாவாந்துறை. பிரபா.**
நீங்கள் நரகத்தை நம்புகின்றீர்களா?
☺**திருமணத்துக்கு முன் நம்பவில்லை.**

❀ ❀ ❀


**கந்தர்மடம். பன்னீர்.**
எல்லா சிநேகிதர்களையும் நம்பலாமா?
☺**சிலர் 'Snake'கிதர்களாயும் இருக்கின்றார்களே!**

❀ ❀ ❀

**ஐந்துசந்தி. வேணு.**
பெண்களின் அழகு பிரகாசிக்க வேண்டுமா?
☺**அணைந்த விளக்கை நாடி விட்டில் பூச்சிகள் வரமாட்டாவே!**

❀ ❀ ❀

**கொட்டைக்காடு. நவநீதா.**
இரக்க குணம் யாருக்கு அதிகம்? பெண்களுக்கா?




☺**இல்லை. பேய்களுக்கு. அவை தானே பெண் என்றதும் இ(ர/ற)ங்குகின்றன!**

❀ ❀ ❀

**ஊரெழு. மரகதம்.**
திருத்த முடியாத தவறு எது?
☺**திருமணம். ஒரு தடவை தவறு விட்டால் பிறகு பிழைக்கவே முடியாது.**

❀ ❀ ❀

**மானிப்பாய். விஜய்.**
எனது மனைவி காரில் செல்லும்போது பின் 'சீற்'றில்தான் இருக்கின்றாள். அவள் பணிவு குறித்து என்ன நினைக்கின்றீர்?



☺**அது பணிவு அல்ல; உம்மை சாரதியாகவும் தன்னை முதலாளியாகவும் கருதும் துணிவு.**

❀ ❀ ❀

**கொட்டடி. ராஜகாரியர்.**
ஒரு பெண் என்னைப் பார்த்து புன்னகைக்கின்றாள். சந்தோசப்படவா? சந்தேகப்படவா?
☺**சஞ்சலப்படாதீர்; பின் சபலப்படுவீர்; அதனால் பின்னர் அவலப்படுவீர்.**

❀ ❀ ❀

**கைதடி. முருகேசு.**
துண்டு வெட்டிய பின்னரும் சில நோயாளிகள் வார்ட்டை விட்டுப் போக விரும்புகின்றார்கள் இல்லையே?
☺**வீட்டில் காணாததை வார்ட்டில் கண்டிருப்பார்கள்.**

❀ ❀ ❀

**கரவெட்டி. சிவா.**
ஒருவனுக்கு மனைவி முக்கியமா? உடுப்பு முக்கியமா?
☺**மனைவி இல்லாமலும் வெளியே போகலாமே!**

❀ ❀ ❀

**திருநெல்வேலி. விமல்.**
எனது வாழ்வில் பயங்கரசம்பவம் நடந்த திகதியை சோதிடர் சரியாகச் சொல்லுகின்றாரே?
☺**சில சோதிடர்கள் திருமணத் திகதியைக் கண்டுபிடித்துச் சொல்வதில் சூரர்கள்.**

❀ ❀ ❀

**சுழிபுரம். ப.விபுல்.**
என் நண்பனுக்குத் தண்ணியால் கண்டம் என்றார் சோதிடர். ஆனால் அவன் மோட்டார் சைக்கிள் விபத்தில் இறந்து விட்டானே...?
☺**தண்ணி அடித்துவிட்டு மோட்டார் சைக்கிள் ஓட்டினாரா என்பதை விசாரித்துப் பாரும்.**

❀ ❀ ❀

**யாழ். மகேந்திரன்.**
ஒரு மிஸ் என்னை ஏமாற்றிவிட்டாளே?
☺**மிஸ்ஸை Miss பண்ண விட்ட ஏமாளியய்யா நீர்!**

❀ ❀ ❀

**சரசாலை. தணி.**
சில வீடுகளில் நெல்லுக்குத்த ஆள் பிடிக்கின்றார்களே?
☺**யார் குத்தியாவது அரிசியாகட்டுமே!**

❀ ❀ ❀

**ஆனைக்கோட்டை. சங்கர்.**
தரகர் கொண்டுவந்த மாத்துச் சம்பந்தத்தைச் செய்யலாமா?
☺**அது மாத்துச் சம்பந்தமா, சுத்து மாத்துச் சம்பந்தமா என்பதை ஒரு தடவை விசாரித்துப் பார்த்தால் நல்லது.**

❀ ❀ ❀

**அச்செழு. திரு.**
மனைவிமாரின் வாய் நீளுவதேன்?
☺**உழுகிறவன் இளைத்தால் மாடு மச்சான் முறை கொண்டாடுமாம்!**

❀ ❀ ❀

**சங்கரத்தை. ப.வரதன்.**
பெண்களின் மேனியில் அழகுக்கு அழகூட்டும் அங்கம் எது?
☺**மல்லிகை மலரில் மணக்கும் இதழ் எது?**

❀ ❀ ❀

**புத்தூர். பிரசன்னா.**
அழகு கண்டு களிக்கவா? உண்டு களிக்கவா?
☺**வீட்டுத் தோட்டத்தில் உண்டு களியும். மாற்றான் தோட்டத்தில் கண்டு களியும்.**

❀ ❀ ❀

**அச்செழு. வேலவன்.**
அடக்கமான பெண் தேவை. எங்கே தேடலாம்?
☺**அடக்கமானவர்கள் கல்லறையில் தான் இருப்பார்கள்.**

❀ ❀ ❀

**அளவெட்டி. குமார்.**
சிலர் திருமணம் முடித்து ஒரு வராத்துக்குள்ளேயே விவாகரத்து எடுக்கின்றார்களே?
☺**காரைப்போல ஓட்டிப் பார்த்து முடிவு செய்யும் பண்பில்லாதவர்கள்.**

❀ ❀ ❀


**நல்லூர். பரமேஸ்.**
நல்ல பொன்மொழி ஒன்று கூறுங்களேன்?
☺**பொன்னை நம்பாதே; உன்னை நம்பு!**

❀ ❀ ❀

**யாழ். நிருபா.**
கடவுளைக் காண என்ன வழி?
☺**'திருவிளையாடல்' படம் பாரும் என்கின்றான் மூத்த மாணவன் ஒருவன்.**

❀ ❀ ❀

**நாச்சிமார்கோவிலடி. அழகர்.**
உயர்ந்த மனிதன் குள்ளமான பெண்ணை மணம் முடித்தால்....?



☺**வாழ்க்கையில் வளைந்து கொடுக்க வேண்டியிருக்கும்.**

❀ ❀ ❀

**நீர்வேலி. குணம்.**
திறமை, வாய்ப்பு - இதில் வெற்றிக்கு எது அவசியம்?
**வாய்ப்பைப் பயன்படுத்தும் திறமை!**

❀ ❀ ❀

**மாண்டான். விஜயன்.**
என் காதலிக்கு சமைக்கத் தெரியாதாம். என்ன செய்ய?
☺**தெரியாதது எல்லாம் சொல்லிக் கொடும்.**

## ஆழம் தெரியாமல் காலை விடாமல்?

❀ ❀ ❀

**ஆனைக்கோட்டை. சேகரன்.**
விவாகரத்துப் பெற்றுவிட்டேன். மறுமணம் செய்யலாமா?



☺**சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது; நல்ல மாட்டுக்கு ஒரு சூடு!**

❀ ❀ ❀

**நயினை. ஈசன்.**
ஆணா, பெண்ணா என்று கண்டுபிடிக்க முடியாத மாதிரி எமது இளவட்டுகள் உடை உடுப்பதற்குக் காரணம் கலிகாலமா?
☺**இல்லை. ஆணா, பெண்ணா என்று தெரியாததால் இது அலி காலம்.**

❀ ❀ ❀

**நாவற்குழி. ராஜு.**
பலகாரக் கடகத்தையும் திருடுகின்றார்களாமே?
☺**விவகாரம் தெரிந்த திருடர்கள் போலும்.**

❀ ❀ ❀

**சுழிபுரம். சங்கர்.**
திருமண வீட்டில் 'பவர்கட்' ஆனதும் உடனே "ஐயோ! பலகாரத்தைக் கிள்ளுகிறான்" என்று ஒரு குரல் வந்ததே. என்ன காரணமாக இருக்கலாம்?
☺**அங்கும் விவகாரம் புரிந்த ப(ே)ல(காரத) திருடர்கள்தான் இருந்திருப்பார்கள்!**

❀ ❀ ❀

**யாழ். பொன்னு.**
எனக்கு வயது sweet sixty. என் கணவர் forest க்குப் போகப்போகிறேன் என்று அடம் பிடிக்கின்றார். என்ன காரணமாக இருக்கும்?
☺**For Rest ஆக இருக்கும். இனியாவது அவரை ஆறுதலாக இருக்க விடுங்களேன் அம்மணி.**

❀ ❀ ❀

# வித்துவான் பதில்கள்

**வடலியடைப்பு. சுந்தரேசன்.**
ஆழம் தெரியாமல் காலை விடலாமா?
☺**அப்படியெல்லாம் பார்த்தால் திருமணம் செய்யமுடியாதே.**

❀ ❀ ❀

**கொக்குவில். பரா.**
என் மனைவி ஒரே பிடிவாதக்காரி. திருத்த என்ன வழி?
☺**முதலில் (தப்பிப்) பிழைக்கும் வழியைப் பாரும்; பின்னர் திருத்தும் வழியைப் பார்க்கலாம்.**

❀ ❀ ❀

**அல்வாய். வாசுகி.**

## அழகு கண்டு களிக்கவா? அல்லது உண்டு களிக்கவா?

எனது கணவர் குறட்டை விட்டுத் தூக்கத்தைக் கெடுக்கின்றாரே?



☺**சில கணவர்கள் குறட்டை விடாமலேயே தூக்கத்தைக் கெடுக்கின்றார்களே?**

❀ ❀ ❀

**கரவெட்டி. புண்ணியன்.**
Recording Bar இல் இருப்பவர் பக்தி பாடல்களைக் கேட்க, ஆபாசப் பாடல்களைத் அடித்துத் தந்துவிட்டாரே?
☺**வேறு Barக்குப் போய் அடித்து வந்த கையுடன் இந்த கசெட்டை அடித்திருப்பார்...!**

❀ ❀ ❀

**கல்வியங்காடு. வேணி.**
டாக்டரின் திறமை எதில் உள்ளது?
☺**ஊசி முனையில் உள்ளது.**

❀ ❀ ❀

**ஆவரங்கால். லட்சுமி.**
இரண்டு பெண்டாட்டிக்காரனுக்கு என்ன தண்டனை கொடுக்கலாம்?
☺**தண்டனை கொடுக்க இரண்டு பெண்டாட்டிகளே போதும். அதுக்கு மேலதிகமாகவும் ஒரு தண்டனை வேண்டுமா?**

❀ ❀ ❀

**தாவடி. மதனா.**
பணம் கூரையைப் பிய்த்துக் கொண்டு வரும் என்கின்றாரே சோதிடர்?
☺**கூரை திருத்துவதற்கு வேறு ஓடுகள் வாங்கி வைத்திரும்.**

❀ ❀ ❀

**சுதுமலை. செல்வம்.**
"பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட"ப் பாலுக்குள் தண்ணீர் கலக்கும் பால் வியாபாரிகளை என்ன செய்யலாம்?
☺**'பாலித்து நட்டம் பயில வல்லார்க்கு பல்லாண்டு சிறை கூறுதுமே!'**

❀ ❀ ❀

**ஆவரங்கால். சசி.**
கணவன் சிரித்த முகத்துடன் இருப்பதற்கு மனைவி என்ன செய்யவேண்டும்?



☺**வாயே திறக்கக் கூடாது.**

❀ ❀ ❀

**பளை. ஆர்.சூடாமணி.**
காதலர்கள் மோசமாக நடிப்பது எப்போது தெரியவரும்?
☺**மாசமாகத் தெரியும்!**

❀ ❀ ❀

**கட்டுடை. பிரவீண்.**
காதலியின் தொல்லைக்கும் மனைவியின் தொல்லைக்கும் என்ன வித்தியாசம்?
☺**ஒன்று குறும்புத் தொல்லை; மற்றையது குடும்பத் தொல்லை.**

❀ ❀ ❀

**வரணி. கிருஷ்ணன்.**
வித்து மாமாவே! அறுபது வயது மாமியின் தலையில் அரை டசின் 'பின்' இருக்கின்றதே! இது யாரைக் கவர?
☺**மருமகன் கிருஷ்ணா! எழுபது வயது மாமாவின் தலையில் அரைக்கிலோ 'டை' பூசப்பட்டிருக்கிறதே! அதை யாரைக் கவர?**

❀ ❀ ❀

**சங்கானை. என.எம்.லிங்கம்.**
வித்து! நேற்று பிள்ளைகள் பெற்றோருக்குப் பயந்தார்கள். இப்போது....!
☺**பெற்றோரோடு சேர்ந்து ஆசிரியர்களும் பிள்ளைகளுக்குப் பயப்படுகிறார்கள்**

❀ ❀ ❀

### இவ்வார ஜோக்

**புதிதாகத் திருமணமான தம்பதிகள் படம் பார்க்கப் போனார்கள். மனைவி படத்தை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். கணவன் சீண்ட ஆரம்பித்தான்...**

**முதலில் கன்னத்தைக் கிள்ளினான். அவள் கையைத் தட்டிவிட்டாள். பின்னர் இடுப்பில் கிள்ளினான். அப்போதும் மனைவி கையைத் தட்டிவிட்டுவிட்டு தன்னை மறந்து படத்திலேயே மூழ்கிப் போனாள்.**

**மீண்டும் மெதுவாகக் காலில் கை வைத்தான் கணவன். படத்திலேயே ரசனையாக இருந்த மனைவி, அதே சிந்தனையுடன் கையைத் தட்டிவிட்டபடி சொன்னாள், 'ஏய் இனிமேலும் அப்படியெல்லாம் செய்யாதே. எனக்கு இப்போது கல்யாணமாகிவிட்டது...!'**

# என் பிரிய பூமிக்காக....

**17**

சியாராவின் கூற்று அவர்கள் எல்லோரையும் ஒருகணம் மௌனமாக்கிற்று. ஆழ்ந்து சிந்திக்க அச்சொற்களின் கனம் புரிந்தது. ஆம்! கையிலுள்ள கடமைகளை நிறைவேற்றிவிடவேண்டும். முதலில் நாசகாரிகளுடனான சந்திப்பின்பின்னர் அவர்கள் திரும்பி வராமலே கூடப் போகலாம்.

இதுவரை கிடைத்த தகவல்களை இணைத்துப் பார்க்கும்போது நாசகாரிகளின் பூமிக்கான வருகை பற்றிய காரணமும் அதை அவர்கள் செயற்படுத்தும் விதமும் தெளிவாக இருக்கிறது. அதியுயர் சக்தியை வெளியிடத்தக்க, நைதரசன் மூலகத்தை அடிப்படையாகக் கொண்ட இரசாயனச் சேர்வையை உற்பத்தி செய்தலே அவர்களுடைய நோக்கம் என்பது தெளிவாகிவிட்டது.

அதன் பொருட்டு அவர்கள் வில்லை வடிவிலான நுண்ணிய உயிரினப், பூமியின் தாவர வகையொன்றைத் தேர்ந்தெடுத்து, அத்தாவரங்களின் அடியில் புதைக்கிறார்கள். அவ்வ ஆறுமாத கால இடைவெளியில் முற்றாக வளர்ச்சியுற்றுக் குறிப்பிட்ட நைதரசன் சேர்வையைத் தமது உடலின் மிக முக்கியமான சேமிப்புப் பதார்த்தமாகக் கொண்டு இருக்கின்றன.

ஆக, அவர்களின் இச் சக்தி வெளியிடும் பதார்த்தத்தை உற்பத்தி செய்யும் முயற்சியின் பிரதி விளைவாகத் தாவரங்கள் இறந்துவிடுகின்றன. தவிரவும் அச்சக்திச் சேர்வையை நாசகாரிகள் பூமியிலேயே பிரயோகித்தும் பார்க்கமுயன்றால் பழைய உலகக் கட்டமைப்புச் சந்தித்தது போன்ற கற்பனைசெய்ய முடியாத அழிவுகளையும் அனர்த்தங்களையும் பூமி மீண்டுமொருமுறை சந்திக்க நேரிடும்!

அவர்கள் பல கோணங்களிலிருந்தும் தாம் இதுவரை பெற்ற தகவல்கள், இதன் முன்னர் மற்றைய விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியில் இருந்து கிடைத்த முடிவுகள் என்பனவற்றை விவாதித்தனர். தமக்குள்ளேயே வினாக்களைத் தொடுத்தனர். நீண்ட சர்ச்சை மிகுந்த விவாதத்தின் இறுதியில் மேற்கண்ட முடிவுகள் உறுதியாயின.

## விஞ்ஞான ரீதியான கற்பனைத் தொடர்

மறுநாள், சியாரா தங்கள் ஆராய்ச்சி, தாங்கள் இதுவரை கண்டறிந்த நிகழ்வுகள், தங்களின் ஊகங்கள், இனித் தாங்கள் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் பற்றிய எல்லாத் தகவல்களையும் தகவற் கணிப்பொறியில் பதிந்து கொண்டிருந்தான்.

ஒருவேளை அவர்கள் மீண்டுவர முடியாமற் போனாற் கூட அக்கணிப்பொறி அவர்களின் முயற்சிகள் பற்றித் தலைமையகத்துக்குச் செய்தி சொல்லும்.

சிசிலியா தடித்த கனமான புத்தகங்களின் எழுத்துக்களுள் தன்னைப் புதைத்தபடி புறவுலகச் சிந்தனையற்று அமர்ந்திருந்தாள். சின்னச் சின்ன எழுத்துக்களில் தெரிகின்ற செய்தி அவிழ்க்கப்படாத மர்மத்தின் நுனியை எங்கேனும் தொட்டுக் கொண்டிருக்கிறதோ என்ற ஆர்வம் பசியையும் களைப்பையும் விரட்டியடித்துவிட்டது.

"எதற்காக அவர்கள் 'பப்பிலி போனைப்டியே' உபகுடும்பத் தாவரங்களை மட்டும் தேர்ந்தெடுக்கிறார்கள்...?"

கேள்வி மனக்குரலில் திரும்பத் திரும்ப எதிரொலித்துக் கொண்டிருந்தது.

இவான் தன்னைச் சுற்றிலும் பரப்பப்பட்டிருந்த மண்மாதிரிகள், வில்லை அமைப்புகள், உருப்பெருக்கிகளின் நடுவே ஓய்வு ஒழிச்சலின்றிக் கரைசல்களைத் தயாரித்தும் அவற்றைத் தரம்பிரித்தும் கொண்டிருந்தான்.

முதல்நாள் சேகரித்த வில்லை அமைப்பு மாதிரிகளில் எல்லாவற்றையும் கொண்டு வந்துவிட முடியவில்லை. சிசிலியாவின் தோள்பையை அவர்கள் ஓடும்போது விட்டுவிட வேண்டியதாயிற்று. மயக்கம் தெளிந்து வந்து பார்த்த போது தோள்பை சிறுதுணுக்குகளாய்ச் சிதறியிருந்தது.

நாசகாரிகளின் நீலக்கதிர்கள் தோள்பையினுள்ளிருந்த வில்லை அமைப்புகளை வெப்பமேற்றியிருக்க வேண்டும். அதனால் தான் அப்படி வெடித்துச் சிதறியிருக்க வேண்டும். நல்லவேளை! தீ ஏனோ பரவாமல் அடங்கிவிட்டிருந்தது.

இவான் சேகரித்த வில்லை அமைப்புகள் எஞ்சியிருந்தன. பல்வேறு பருமன்களில் அவை தமது வளர்ச்சிப் படிநிலைகளை விளக்கிக் கொண்டிருந்தன. அவற்றில் தான் இப்போது இவானின் கவனம் திரும்பியிருந்தது.

நிக்கலசிற்கு இன்று உணவு தயாரிக்க வேண்டியமுறை. இரசாயனக் கலவைகளைக் கலப்பது போல எளிதாக உணவுப் பதார்த்தங்களை ஆக்க முடியாது என்பது அவனுடைய எண்ணம். ஏற்கனவே சில தடவைகள் வெந்நீரைக் கொட்டி, சுவாலை விளிம்பில் கைவிரல் பட்டு... ஆயினும் தவிர்க்க முடியாது. சமைத்துத்தான் ஆக வேண்டும். இவான் வேறு சொல்லிவிட்டுப் போயிருக்கிறான். 'இரண்டு நாள்ப் பசியை இன்று உன் கைவண்ணம் தான் தீர்க்க வேண்டும்' என்று. நிக்கலஸ் உணவுப் பதார்த்தங்களோடு போராடிக் கொண்டிருந்தான்.

சியாராவுக்குத் தலைமையகத்திடமிருந்து செய்தி வந்திருந்தது. 'நிஷாரா', 'மிங்-சான்', 'கரீதியா' காட்டுப் பிரதேசங்களிலிருந்து மற்றைய விஞ்ஞானிகள் அனுப்பிய செய்திகளும் சியாராவுக்குத் தெரிவிக்கப்பட்டன. அநேகமாய்த் தங்கள் முடிவுகளும் ஊகங்களும் அவர்களுடன் ஒத்துப் போவதாகச் சியாரா செய்தி சொன்னான்.

மதியம் உணவுண்ட வேளையில் அவர்கள் மீண்டும் தங்கள் ஆய்வுகளைப் பற்றி உரையாடினார்கள்.

"அவர்கள் ஏன் குறிப்பிட்ட வகைத் தாவரங்களைத் தேர்ந்தெடுகிறார்கள் என்பதற்கு அநேகமாய் நான் சாயங்காலம் பதில் சொல்ல முடியும் என நம்புகிறேன்....." சிசிலியா யோசனையில் ஆழ்ந்தவாறே சொன்னாள்.

"பல்வேறு அளவிலான வளர்ச்சிப் படிநிலைகளில் உள்ள வில்லை அமைப்பு உயிரிகளை ஒழுங்குபடுத்தியிருக்கிறேன்......"

இவான் அவர்களைக் கூட்டிச் சென்று அவற்றைக் காட்டினான்.

"அத்துடன் இன்னொரு அதிசயிக்கத் தக்க முடிவும் கிடைத்திருக்கிறது எனக்கு......" அவன் குரலில் மகிழ்ச்சி தெரிந்தது.

"என்ன அது?"

"இவ் வில்லை அமைப்பு உயிரிகள் காற்றின்றி வாழ் உயிரிகள். இவற்றின் உடலியல் தொழிற்பாடுகளுக்கு சாதாரணமான மற்ற அங்கிகளைப் போல ஒட்சிசன் பயன்படுத்தப்படுவதில்லை..."

"இதை எப்படி நிரூபித்தாய்....?"

"ஒட்சிசன் பயன்படுத்தப்படும் போது ஓர் அங்கியில் உருவாக்கப்படுகின்ற அனுசேப விளைபொருள்கள் சில ஒட்சிசன் பயன்படுத்தப்படாத போது உருவாகும் அனுசேப விளைபொருள்களிலிருந்து முற்றாக வேறுபட்டவை.... இங்கு இவ்வில்லை அமைப்புகளில் ஒட்சிசன் பயன்படுத்தப்படவில்லை என்பதை அவற்றின் அனுசேப விளைபொருள்களை இரசாயனப் பகுப்பிற்குட்படுத்திக் கண்டறிந்தேன். மேலும், இவ்வங்கிகள் தமது ஆயுட்காலத்தின் அதிஉச்ச வளர்ச்சியை அடையும்போது ஏறத்தாழ ஆறாம்மாதம் அளவில் அவை நிலத்தின் 'மேற்பகுதியை நோக்கி, அதாவது காற்றுள்ள பகுதி நோக்கி நகர்கின்றன.

"அவ்வாறெனின் அவை தமது வாழ்நாளின் இறுதியை அண்மித்ததும் நிலத்தின் மேற்பகுதிக்கு வருகின்றன. அப்படித்தானே?"

"ஆம்! மேற்பகுதியில் அவை உயிரற்ற திண்ம அமைப்புகளாக உள்ளபோதே நாசகாரிகள் அவற்றைச் சேகரிக்கின்றார்கள்."

"அவை எண்ணிக்கையில் பெருகுவது அவதானிக்கப்பட்டுள்ளதா? தம் இனத்தை நிலைநிறுத்தும் செயற்பாடு அந்த அங்கிகளால் நிகழ்த்தப்படுவதாய் தோன்றுகிறதா?"

"இல்லை. எனது சிந்தனையின்படி அநேகமாய் அவர்கள் இந்த அங்கிகளை இனப்பெருக்கும் செயற்பாட்டினை தங்கள் கிரகத்திலேயே மேற்கொள்ளுகிறார்கள் எனத் தோன்றுகிறது"

"வளர்ச்சியடைந்து குறிப்பிட்ட நைதரசன் சேர்வையைத் தொகுத்து மரணமடைவது மட்டும் தான் இவ் அங்கிகளின் பூமியிலான வாழ்க்கைச் செயற்பாடுகள் என்றல்லவா ஆகிறது!"

"ஆம்! அப்படித்தான்... அப்படித்தான் இருக்கவேண்டும்!"

இவான் சொன்ன தகவல்களில் விவாதம் வளர்ந்தது. எல்லா ஆதாரங்களையும் இணைத்துப் பார்க்கும் போது அத்தகவல் உண்மை எனத் தோன்றிற்று. இவான் அதற்குரிய ஆதாரங்களை தன் பரிசோதனைகளாலும் நிறுவிக் காட்டினான்.

பிறகு அவர்கள் தங்கள் தங்கள் ஆய்வுகளில் மூழ்கிப் போனார்கள். நேரம் இரவுப் பொழுதை அண்மித்துக் கொண்டிருந்தது.

அமைதி தவழ்ந்து கொண்டிருந்த அந்தக் கூடாரத்தின் நிசப்தத்தைக் கலைத்துச் சூழலை உயிர்ப்பூட்டிற்று சிசிலியாவின் மகிழ்ச்சி நிறைந்த குரல்... அவளின் குரல் கேட்ட அவர்கள் ஓடி வந்தார்கள். "நான் கண்டுபிடித்துவிட்டேன் அதற்கான காரணத்தை!" அவளின் விழிகளில் சந்தோஷம் சுடராகத் தெரிந்தது. சிசிலியா இங்கு வந்த பிறகு இத்தனை மகிழ்ச்சியுடனிருந்ததை அவர்கள் இதற்கு முன் எப்போதும் கண்டிருக்கவில்லை.

"என்ன சிசிலியா...... மிகுந்த பயன்மிக்க ஒரு தகவலைக் கண்டறிந்து இருக்கிறாய் போலத் தோன்றுகிறதே?"

"ஆம் இவான்!" சிசிலியாவின் மகிழ்ச்சி அவர்களது ஆவலை இன்னமும் அதிகரித்தது."

* * *

சீலியாவின் கண்களில் நீர் நிறைந்து கன்னம் வழியே கோடிட்டுக் கொண்டிருந்தது.

ஜோர்ஜ் குவளை நிறைந்திருந்த பானத்தில் கண்களைப் பதித்திருந்தார். மௌனத்தில் உறைந்திருப்பதாய்த் தோன்றிற்று அவர் பாவனை. நெடிய உயரம் குறுகிவிட்டது போலத் தலைகுனிந்து அவளருகே அமர்ந்திருந்தார்.

"சொல்லுங்கள்..... என் யூலியன் எங்கே.....? அவனை என்ன செய்தீர்கள்....? சொல்லுங்கள் ஜோர்ஜ்...... தயவு செய்து...."

சீலியாவின் கண்ணீரோடு அவளது வார்த்தைகளும் நலிந்து போய் அவரில் பட்டுத் தெறித்தன.

"............................."

"எதற்காக இந்த மௌனம் ஜோர்ஜ்? என்னைக் கொல்லாமல் கொன்றுதின்கின்ற இந்த வேதனையைக் கண்ட பிறகுமா உங்கள் மனம் இளகவில்லை....? தயவு செய்து சொல்லுங்கள் ஜோர்ஜ்....? அவன் எங்கே? என் அன்புக்குரிய செல்வன் எங்கே....? அவன் யாரிடமிருக்கிறான்....?"

"......................................"

சீலியாவின் கண்களில் இயலாமையும் வெறுப்பும் துல்லியமாய்த் தெரிந்தன. ஜோர்ஜ் அவள் உதட்டருகே குவளையைக் கொண்டு செல்ல அவள் கைகள் அதைத் தடுத்தன. நலிந்து வெளிறிய பூந்தண்டாயிருந்த அந்தக் கைகளில் எப்படித்தான் அந்த வலிமை வந்ததோ?

"சொல்லுங்கள் ஜோர்ஜ். என்றோ ஒரு நாளில் உங்கள் பிரியத்துக்குரியவளாயிருந்த சீலியாவின் வேதனையைப் புரிந்து கொண்டதற்கு அடையாளமாகவாவது என் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள் ஜோர்ஜ்....." சீலியாவின் குரல் இறைஞ்சிற்று. கண்கள் ஏக்கமாய் அவரை நோக்கின.

"வேண்டாம் சீலியா... எதுவும் என்னைக் கேட்காதே...... என்னால் எதுவும் சொல்லமுடியாது...."

"............................"

சீலியா சில கணங்கள் மௌனமாயிருந்தாள். விழிகள் ஜோர்ஜை அனலாய் வெறித்தன. சிலகணங்கள்தான். மீண்டும் முழங்கால்களுள் முகம்புதைத்துத் தீனமான அழுகை.

"எதற்காக என்னை இப்படித் துன்பங்கொள்ளச் செய்கிறீர்கள்?" அவள் வார்த்தைகளின் அர்த்தம் தாங்க முடியாமல் ஜோர்ஜ் எங்கோ பார்வையைத் திருப்பினார்."

சீலியாவின் சிறுமிப்பருவம் அவர் நினைவுகளில் எட்டிப் பார்த்தது. அண்ணன் நிழலில் துன்பங்களின் வாடை தெரியாது வளர்ந்த பூப் போல இருந்தாள் அவள். தெரிந்துமே அவர் இப்படிச் செய்கிறார்!

"எனக்காக இல்லாவிடினும் என் சகோதரனின் கடைசி வேண்டுகோளுக்காகவாவது என் துயரம் குறைப்பதாய் யூலியனைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லமாட்டீர்களா?"

**ச.குமுதினி**
(சங்கத்தானை)

ஜோர்ஜின் விழிகளில் ஒரு திடீர் மாற்றம் தெரிந்தது. அவருள்ளத்தின் சலனம் அது! இந்தக் கேள்விக்கு... இந்தக் கேள்விக்கு அவரால் எப்படிப் பதிலளிக்காமல் இருக்க முடியும்?

ஜோர்ஜ் விழிகளை எதிர்ப்பக்கச் சுவரில் பதித்தார். விழிகளில் நீர்ப்படலமே? மௌனமாய் இறுகிப் போன அவரிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை.

சீலியாவுள் துன்பத்தின் தழல் கொழுந்து விட்டெரிந்தது. முடியாது.... இனியும் தாங்க முடியாது. இந்தத் துன்பத் தழலிலிருந்து மீள வேண்டுமாயின்.... அவள் விழிகளின் கட்டிலிலிருந்து நான்கோ ஐந்தோ அடிகள் தள்ளியிருந்த அந்தப் பிரதான மின்னிணைப்பை வெறித்தன. உயர் அழுத்தத்தில், தொட்ட கணத்தில் உயிர்குடிக்கவல்லதாய் அந்தப் பிரதான மின்னிணைப்பு. ஜோர்ஜ் இன்னமும் தலைகுனிந்தபடியிருந்தார். 'இந்த மீளாத்துயரிலிருந்து விடுபட இது ஒன்றுதான் வழி...? அவள் போர்வையை மெல்ல விலக்கினாள். எங்கிருந்துதான் இத்துணை விரைவாய்ச் செயற்படுவதற்கு அவள் உடலில் சக்தி வந்ததோ!

(தொடரும்)




## சத்தியம் நல்வழி காட்டும்!

பதவிக்காய் தலையாட்டும் ஒரு கூட்டம்
உதவிக்கு அடிவருடி உயிர்சுமப்பு அதன் நாட்டம்
நிதமிங்கு விடிவுக்காய் உயிர்பொசுக்கும் ஒரு கூட்டம்
வதைபட்டு விதைபடினும் கொள்கைபிடி யதன் நாட்டம்

வீடுதேடி வருகுதையா ஜே.பி. பட்டம்
நாடு பற்றி நினையா நம்மவர் அதில் நாட்டம்
பாடுபட்டும் திருந்தாத படுபாவிக்கூட்டம்
காடுறையும் எங்கள் தம்பி வகுத்திடுவார் திட்டம்

கூடுவிட்டுப்பறந்ததையா புலம்பெயர்ந்தோர் கூட்டம்
நாடுநாடாய் அலைந்தபோதும் தாயகத்திலேயதற்கு நாட்டம்
ஏடுகளில் வானலையில் நம்மவலம் சுட்டியது காட்டும் - இன்னும்
கேடுகெட்ட நம்சிலர்க்கோ பதவியில்த்தான் நாட்டம்

ரத்தவெறி கொண்டலையும் நித்தமொரு கூட்டம்
புத்தமண்ணில் சத்தமொடு யுத்தமது காட்டும்
நத்தவந்த நம் நரிகள் அதன்பின்னேயாட்டம்
சத்தியம் அவர்க்கு நல்லவழி காட்டும்

- பண்ணாக நாரதன் -

## குறள்வெள்ளம்

செல்வச் செருக்கு இருக்கும். அடிதடிக்கு ஆள்பலம் மிகுதியாக இருக்கும். நினைத்ததைக் கச்சிதமாகச் செய்விக்கும் வலிமை இருக்கும். இவற்றின் மிகுதியால் மயங்கி தலைகால் புரியாது மதங்கொண்டு மோத வருபவரோடு மிகுதியான மிக்கவை செய்வார் மல்லுக் கட்டுதல் அறியாமையே.

அத்தகையோரை எதிர்த்து, வென்று பாடம் புகட்டினாலும் அவரின் வன்மமும் பழிவாங்கும் குணமும் வளருமே தவிர மயக்கம் தெளியாது. இதனால் எதற்கும் முற்றுப்புள்ளி வைக்க இயலாது. குடும்ப வாழ்வில் இது நிம்மதியைக் கெடுக்கும். சங்கிலித் தொடராகப் பகை வளரும்.

பொறுமையெனும் தகுதியால் நீ விட்டுக்கொடுத்தால், அவர் செய்யும் கொடுமையை ஒரு பொருட்டாக எடுக்காவிட்டால் ஆரம்பமே வெற்றி உனதாகிவிடும்.

*மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்*
*தகுதியான் வென்று விடல்.* - 0158 - *அம்பிகைபாகன்*

# வெள்ளை ரோஜா முள்

மு.சிவநேசன்

17

உறக்கம் வராததால் ஜோன் இரவு 2.00 மணிக்கே டானியலிடம் வந்தான். அவனை விடுவித்து விடுவதாகவும் அகப்பட்டதும் கரோலையும் கொண்டு வந்து ஒப்படைப்பதாகவும் உறுதி கூறினான்.

இருந்த இடம் சம்பந்தமான விவரங்களை பொலீஸாரிடம் கூறவேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டான். விடுதலைக்கு டானியல் சம்மதம் தெரிவித்ததும் அவனைக் கண்ணைக் கட்டி வாகனத்தில் ஏற்றி நகர்ப்புறத்துக்கு அனுப்பி வைத்தான் ஜோன்.

பொழுது விடியும் நேரம் சாலையோரச் சிறுநகர மொன்றின் ஓரமாக இறங்கிய டானியல் சற்றுத் தள்ளாடினான். கண்களைக் கட்டியிருந்த கறுப்புத் துணியைத் தானே அவிழ்த்து தூர வீசினான்.

கரோலின் நினைவு நெஞ்சில் பெருஞ்சுமையாக வெடித்தது. அவளைத் தேடுவதே தன் முதல் முயற்சி எனக் கங்கணங் கட்டிக் கொண்டான்.

முதலில் எமிலியுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டான். டானியலைக் கண்ட எமிலிக்கு இன்ப அதிர்ச்சி. அவள் அதிலிருந்து விடுபடச் சில கணங்கள் பிடித்தன.

எமிலி கேட்கத் துடித்த ஆயிரம் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் தெம்பு டானியலிடம் இருக்கவில்லை. சற்றுக் காலஅவகாசம் கொடுக்க வேண்டும் எனத் தீர்மானித்தாள் அவள்.

யாரோ கண்ணைக்கட்டி றோட்டோரம் விட்டுவிட்டதாகவும் சென்றிருந்தவிடத்து விவரங்

போகிறதோ என்று தான் அவன் தவித்தான்.

மேவின் கைது செய்யப்பட்ட சேதியுடன் வெளியாகி இருந்த அவனது படம் டானியலை உறுத்தியது. அவனை எங்கேயோ பார்த்த ஞாபகம். நினைவுகளை மீட்டு மீட்டுப் பார்த்தான்.

தன்னைக் கடத்திய நாடகத்தில் இவனுக்குச் சம்பந்தம் இருக்கலாம் என ஊகித்தான். அரைகுறை மயக்கத்தில் மேவினைக் கண்டஞாபகம் நிழலாடியது.

இவன்தான் கரோலையும் கடத்தினானா? இவன் மைக்கின் ஆளா? பல கேள்விகள் குடைந்தன. அவன் விடுதலையானதாகத் தொடர்ந்து வரும் பத்திரிகைச் செய்திகள் கூறவில்லை.

எமிலியிடம் டானியல் மேவினைப்பற்றி விசாரித்த போது அவளின் புருவங்கள் நிமிர்ந்தன. மேவினைப் பற்றி அவளது சந்தேகம் மேலும் வலுத்தது.

நாளாகி டானியல் தேறியும்

என்பது அவனது முடிவு. மீண்டும் சிறைக்கு வர அவன் விரும்பவேயில்லை.

பெருமெடுப்பில் சேமிப்பு ஏதும் கையில் இல்லாததால் தொலை தூரம் போவதானாலும் ஏதாவது திருகுதாளம் பண்ணித்தானே ஆக வேண்டும். அதுவே மீண்டும் சிறைக்கு இட்டு வந்து விடாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

மேவின் மீதான சந்தேகம் தீர விசாரிக்கப்பட்டுத் தெளிவானதும் அவனது விடுதலைக்கான நாள் குறிக்கப்பட்டுவிட்டது. இந்தச் செய்தி மேனின் நெஞ்சிலும் பால்வார்த்தது.

மேவின் வெளிப்பட்டதும் அவனைத் தொலைத்துவிடுவது என்று கங்கணங் கட்டிக்கொண்டான் மேன். டானியல் பற்றி பேரம் பேசிய சங்கதிகளை மேவின் அவிட்டுவிட்டால் ஜோன் பிடிபடப்போய் எல்லாக் குட்டும் வெளிப்பட்டுவிடும் என்பது மேனின் ஏக்கம்.



கசியப் பொலீஸ் படை ஒன்றை தயாராக்கினான் மோலர்.

மேனினதும் டானியலினதும் சந்திப்புக்குப் பின்னர் மேவின்

தேடின. மைக்? கரோல்? எவராவது யோனிடமிருந்த விவரங்கள் இவனுக்குத் தெரியுமா என்பதே அவனது கேள்வியாக இருக்கக் கூடும்.

அவதானிகளாகக் காத்திருந்தவர்களால் சந்திப்பின்போது எந்த வித்தியாசத்தையும் உணரமுடியவில்லை. எமிலிக்கும் ஏமாற்றமாகவே இருந்தது.

பேச்சு வங்கியில் கொள்ளை போனது பற்றியும் பிராங்லின் கொள்ளை போன வங்கியில் தொழில் நுட்பத்தைச் சீரமைக்க தன்னை அழைத்தமை பற்றியும் மேனின் விளங்கங்களில் இழுபட்டது.

கொள்ளை பற்றி டானியல் சுவாரசியம் இல்லாமல் கேட்டாலும் தொழில் நுட்பச் சிக்கல்கள் பற்றி ஆர்வமுடன் கேட்டுக் கொண்டான். எப்படிக் கொள்ளையர்கள் செயற்பட்டிருக்க முடியும் என மேனை அவன் கேட்ட கேள்விக்குப் பதில் அளிப்பது கடினமாகவும் மர்மமாகவும் உள்ளதாக மேன் தெரிவித்தது வேடிக்கையானதுதான்.

கொள்ளையடித்த தன்னிடமே இக்கேள்வி கேட்கும் அப்பாவி டானியலை நினைத்து மேன் உள்ளூர நகைத்துக் கொண்டான்.

அப்போது வந்த தொலைபேசிச் செய்தியால் எமிலி உறைந்துபோனாள். மேவின் விடுதலையாகியது மட்டுமல்ல கொலை செய்யப்பட்டும் விட்டான் என்பதே தகவல்.

(தொடரும்)

இருந்ததால் எமில் அவனைத் துளைக்கத் தொடங்கினாள். கரோல் கிடைக்க வேண்டும். மைக்கும் கொள்ளையர்களும் பிடிபடல்வேண்டும். அக்கிரமம் அழிய வேண்டும் என்றெல்லாம் எமிலி வாதிட்டாள்.

டானியலுக்கோ தான்

ஆனால் ஜோனோ எதையும் சமாளிக்க வல்ல படுகில்லாடி என்பதையும் மேன் அறிந்திருந்தான்.


டானியல் வெளிப்பட்டுவிட்ட செய்தி மேனை மீண்டும் பீதியில் ஆழ்த்தியது! அதையே கேள்விப்பட்டு மேவினும்

பற்றிய சந்தேகத்தை மோலரிடம் வெளியிடுவதாக இருந்தாள் எமிலி. சந்திப்பு ஏற்பாடுகள் தொடர்பான அமளிக்குள் எமிலி திளைக்கையில் மேவின் விடுதலை பெற்றுக்கொண்டான். மேவினின் விடுதலை மேனுக்கு நிம்மதியைத் தந்தது. அவன்ஏறுமாறாக ஏதும் சொல்லியிருக்கவில்லை என்பது உறுதியாயிற்று.

மேன் டானியலைச் சந்தித்தபோது பங்களாவின் பல பகுதிகளிலும் பொலீஸார் சிவிலுடையில் பணியாள்கள் போல பராமரிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

எமிலி கூடவே இருந்தாள். மோலர் விலகிக்கொண்டான். மேன் அனுதாப அறிமுகத்துடன் பேசத் தொடங்கினான். மேன் பேசுவதை விட அதிகம் ஆழமாகப் பார்வையிலேயே பொழுதைக் கழித்தான்.

அவனது விழிகள் டானியலின் இதயத்தில் எதையோ




கள் ஏதும் தெளிவில்லை எனவும் பொலீஸாருக்கு வாக்குமூலம் கொடுக்கும்படி எமிலி ஆலோசனை கூறினாள்.

மீண்டும் பத்திரிகையில் விளம்பரம் வெளிவந்தது. கரோலைக் கண்டுபிடித்துத் தருவோர்களுக்குச் சன்மானம் அறிவிக்கப்பட்டது. அறிவிப்பை டானியல் எமிலியின் ஆலோசனையுடன் விடுத்து இருந்தான். கரோலின் படங்களும் பல்வேறு கோணங்களிலும் வெளியாகி இருந்தன.

வங்கியில் கொள்ளை போனது பற்றியெல்லாம் எமிலி சொன்னதை ஒரு பொருட்டாகவே டானியல் கருதவில்லை. இவ்வளவு பெரும் சொத்து நிம்மதியாக வாழவிடாது என்றே அவனும் ஏங்கியது உண்மையாயிற்று.

இப்போது அவனுக்கு வேண்டியதெல்லாம் கரோல்மட்டும் தான். அவளைத் தேடுவதையே தனது பிரதான இலக்காகக் கொண்டு செயற்படலானான் டானியல்.

தான் வெளிப்பட்டமை பற்றி வங்கிக்கு அறிவித்துத் தனது கணக்கைச் செயற்படுத்துவதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டான். அடிக்கடி விசாரிக்கவும் துப்புத் துலக்கவும் வட்டமிடும் பொலீஸாரின் தொல்லைகள்தான் எல்லைமீறி நின்றன.

பழைய பத்திரிகைகளைப் புரட்டிக்கொண்டிருந்தான் டானியல். அவ்வப்போது வந்த செய்திகளும் படங்களும் மனதைத் தொடுவனவாக இருந்தன. மீண்டும் ஒரு சோகவரலாறு மர்மமாகவும் சூடாகவும் வடிக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

எமிலியின் விமர்சனங்கள் வேறு நெஞ்சை நெருடின. கதையின் முடிவு என்னவாக அமையப்

இருந்த இடம், ஆள்கள் பற்றிய விவரங்கள் சரிவரக் கூற முடியவில்லை. ஆனால் அங்குதான் கரோல் இருந்து தப்பியிருக்கிறாள் என்ற தகவல்தான் எமிலிக்கும் ஏமாற்றமாக இருந்தது.

உண்மையில் கரோல் அங்கே இருந்து தப்பியும் இருந்தால் மேவின் பெரிய கில்லாடிதான். வங்கிக் கொள்ளையையும் அவனே செய்திருப்பான் என்ற முடிவுக்கு வந்தாள் எமிலி.

ஆனால் தப்பிவிட்ட கரோலைப் பிடிக்க இனி மேவினால் என்ன தகவலைத் தர இயலும்? கொள்ளைபோன பொருள்களை விட கரோலை மீட்பதில்தானே டானியலுக்கு அக்கறை அதிகம்.

என்றாலும் இவ்வளவு அலைத்த மேவினைச் சும்மா விடக் கூடாது என நினைத்தாள் எமிலி. மேவினுக்கு மைக் இருக்கும் இடமும் நிச்சயமாகத் தெரிந்திருக்கும் என்பது அவளின் எண்ணம்.

சிறையில் சுருண்டுபோயிருக்கும் மேவின் எப்போது விடுதலை கிடைக்கும் என ஏங்கிக் கொண்டிருந்தான். மோரீஸ் கபேயில் எத்தனை திருகுதாளங்கள் நடக்கும். அதற்கெல்லாம் தன்னைச் சந்தேகிப்பது நியாயமற்றது என அவன் கருதினான்.

தான் தலையிட்ட விடயத்தில் தன் மீது சந்தேகம் இல்லாமல் பொலீஸ் நடந்து கொண்டது அவனுக்கு ஆறுதலாகவே இருந்தது. வங்கிக் கொள்ளை பற்றியோ மோரீஸ் கபேக்கு பெட்டிகள் வந்து போனது பற்றியோ அவனுக்கு ஏதும் தெரியாததைப் பொலீஸார் உறுதிப்படுத்திக் கொண்டுவிட்டனர்.

விடுதலையானதும் இவர்கள் கண்ணில் படாமல் எங்காவது தொலைந்துவிடல் வேண்டும்

உறைந்து போயிருந்தான். டானியலுக்கு என்ன என்ன விவரங்கள் தெரியும் என்பதை இவர்களால் ஊகிக்க முடியவில்லை.

கொள்ளைபோன வங்கியில் மீட்பு, மறுசீரமைப்பு வேலைகளில் ஈடுபட்ட சந்தர்ப்பத்தைச் சாக்காகவைத்து டானியலுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் அவனைச் சந்திக்க நினைத்தான் மேன்.

தனது எண்ணத்தை எமிலி, மோலர் ஆகியோரிடமும் தெரிவித்தான். அவர்களின் உதவியோடு சந்தித்தால் சந்தேகம் எழ வாய்ப்பிராது என்பது இவன் எண்ணம்.

சந்திப்பின்போது டானியலின் மனதை ஸ்கான் (Scan) செய்யும் விழிகளுடன் தான் செயற்பட வேண்டியது பற்றியும் கேட்கக் கூடிய குறுக்குக் கேள்விகள் பற்றியும் எல்லாம் நிறையவே திட்டமிட்டான் மேன்.

மேவினைச் சந்திப்பதும் நடைபெற்ற விசாரணைகள் பற்றி விசாரிப்பதும் சாத்தியம் ஆகாது என்பதும் மேனின் எண்ணம். எனவே அதையிட்டு மண்டையைக் குழப்புவதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

பொலீஸ் அதிகாரி மோலரும் எமிலியும் இணைந்து செயற்படச் சிந்தித்த கணத்தில் டானியலைச் சந்திக்க மேன் விடுத்த அழைப்பு இருவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. தமது திகைப்பை வெளிக்காட்டாமல் ஏதாவது பிடுங்கினால் இலாபம் என்ற அளவில் சந்திப்பை ஏற்பாடு செய்யும்படி எமிலியிடம் மோலர் கேட்டுக்கொண்டான்.

சந்திப்பின் போது பரிமாறப்படும் விடயங்களைப் பதிந்து கொள்ளவும் டானியலுக்கு ஏதும் ஆபத்து வராமல் காக்கவும் இர

## "தார்மீக வெற்றி தானே வரும்"

ஏரோடி புலம் விதைத்து ஏற்றம் கண்டவர்
பாரோடி பலதனம் தேடி பாங்கினைப் பெற்றவர்
தேரோடி தெய்வ தரிசனம் பார்த்த இனம்
ஊரோடி உலகோடி கீழாய் வாழ்வதும் தகுமோ?

தெய்வமிட்ட சாபமோ தேசபக்தி மருவி
தேய்ந்தழிவதால் தேடி வந்த வினையோ
பொய் பேசி அரசு ஆசனம் தேடுவோர் குறையோ
உய்யும் வழியறியோம் உதவிடுவீர் உலகீரே!

ஆதிக்குடி யாரை அந்நியன் அழித்துப் போக
போதி மாதவனின் பொன் மொழியைப் போற்றுவோர்
பாதியில் வந்தாரென்றே படைத்துணை கொண்டு
ஏதிலியாக்கும் கொடுமையை ஏனென்று கேளீரோ!

பாசாங்கு காட்டி மாநாடுகள் பல கூட்டி
நேசக்கரம் நீட்டி நெருஞ்சி முள்ளாக்கி
மோசம் செய்ததல்லால் மேம்பாடு எட்டவில்லை
நீசர் கையோங்குவதால் நிம்மதி யுமிங்கில்லை!

தேசம் சுற்றி தெளிவில்லா கருத்துரைக்கும்
ஈசன் மகனார் நாசமாகும் ஈனத்தை அறியாரோ
பாசமில்லா பாதகன் தமிழறியா தரகனுக்கு
வேசம் கலைந்தால் வேற்று நாடே தஞ்சமாகும்!

இடையறா இடுக்கண் பட்டுழல அரசே
கடையரோ அன்றி கரைகாணாக் கலமோ
படையும் கொற்றக் குடையும் பாறி, பதிலாய்
விடைபெறும் நாளும் விரைவினில் வருமே!

ஆளும் அரசும் ஆளம்பு சேனையும் அழியும்
மாளும் உடம்பும் தேட்டமும் மறையும். செகத்தில்
நாளும் கோளும் நாடியும் பார்த்துப் பயனில்லை
வாழும் வகை வையத்தில் அறமொடு அன்பேயாம்.

பொருது படையும் போர்க் குணமும் பொருந்தாது
இருநீதி கொண்டு சமநீதி காணல் கூடாது
உருவான சிக்கலுக்கு புரிந்துணர்வோடு அணுகில்
தருமொரு கீர்த்தி தர்மமும் ஜெயித்து விடும்.

சூல் உற்ற மேகமாய் சூழும் பகை விலக்கி
கோல் முறை நின்று கோதில்லா தீர்வு காணில்
பொல்லாப் பெல்லாம் போக சமரசம் தோன்றின்
நில்லாதோடும் துயரங்கள் நாடும் செழிக்கும்.

போர் தான் சமாதானத்துக்கான பொது உத்தியெனில்
ஈர் இருபதாண்டுகள் படும் இன்னல் தாங்காது
தர்மம் விழித்தால் தடுமாறும் நாடும் அரசும்
தார்மீக வெற்றிதானே வந்து வரவேற்கும்!

- கந்த தியாகராசா.

# பரிகசிப்பு

எனக்கெண்டால் காத்தில பறக்கிற சந்தோசம். முழுவியளம் திறமா அமைஞ்சிருக்குப் போல... எத்தின பேர் 'ஹோல்ஸேலு'க்கு வாங்கிறத்துக்கு காவலநிக்கேக்கையும் தறுமு என்னைக் கைவிடேல்ல. ஒரு மாதிரி ஒளிச்சு, மறைச்சு மற்றவை கண்டு விடாமக் கொண்டுவந்து தந்திட்டான். நிண்ட சனத்தைப் பார்த்தவுடன் எனக்கு 'டவுட்'டாத்தான் கிடந்தது. எண்டாலும் என்னைக் கண்டவுடன் அவன் விடேல்ல. அதுவும் அஞ்சு போத்தில். சினேகிதமெண்டால் அப்பிடியெல்லோ இருக்கு கோணும். துரியோதனனும் கர்ணனுமே உதாரணம்? இஞ்சபார் நானும் தறுமுவு மெல்லோ நல்ல உதாரணம். சும்மா கதைக்குக் கண்டபடி எழுதலாம். ஆனா நாட்டு நடப்பிலயெல்லோ பாக்கோணும்.

தறுமு என்ர மனசில நல்லா உயர்ந்து போனான். 'கடவுளே! இண்டைக்குக் கிடைச்சிருக்காட்டி எவ்வளவு கரைச்சல் பட்டிருப்பன்.'

மனதில் நினைத்துக் கொண்டு சைக்கிளைஎடுத்தேன்.குச்சொழுங்கை மணல் சைக்கிளை உருட்டத்தான் செய்தது. உருட்டிக்கொண்டு வந்து றோட்டில ஏறினன். மனமெல்லாம் சந்தோசம் பீறிட்டது. சைக்கிளில் தொற்றி ஏறினேன்.

எண்ணை தண்ணி காணாத என்ர சைக்கிள் உருளத் தொடங்கியது. நான் இந்தக் கொஞ்சக் காலத்துக்குள்ள உழைச்ச உழைப்பில ஒரு 'கீறோ கொண்டாவே' எடுத்துப் போடுவன். ஆனால் என்ர உழைப்பு முன்னேற்றத்தைப் பாத்து மற்றவனும் தொழில் போட்டிக்கு வந்திடுவன். ஒருமாதிரிச் சமாளிச்சு நடிக்க வேண்டியதுதான். உழைக்கிற காலத்திலதானே உழைக்கலாம். இந்த நிலைமை எப்பவும் இருக்குமெண்டால் நானும் ஓர் 'உபாலி'யா மாறிடுவன். அந்த நம்பிக்கை எனக்கு இருக்கு.

மனம் எங்கெங்கோ அலைபாய பெடலைக் கஷ்டப்பட்டு மிதித்தேன்.

"என்ன கனகு... சமான் போகுது போல..."

"ஓமோம்... கனக்க இல்லை..."

நான் சுருக்கமாகக் கூறிக் கொண்டு நகர்ந்தேன். கதைகேட்ட வரை எனக்கு நல்லாத் தெரியும். ஒரு நோமல் கவுண்மென்ற் உத்தியோகம் பார்க்கிறார். குடிக்கும்மட்டும் கடன் சொல்லிக் குடிப்பர். சம்பளமெடுத்தவுடன கொண்டோடிப் போய் மனிசின்ர கையில குடுத்திட்டு தன்ர செலவுக்குக் கையைப் பிசைவர். உவர் தரவழிக்கு இது வேணுமே. போனமாதம் வேண்டிக் குடிச்ச 'சமான்' காசே இன்னும் தரேல்ல. வரட்டும். வராமல் போகமாட்டார். வந்தால் பழைய காசை 'செட்டில்' பண்ணாமல் குடுக்கக் கூடாது. எளியதுகள்... வேண்டுற சம்பளத்தில 'இதுக்கும்' ஒருபங்கை ஒதுக்கலாம் தானே...!

சைக்கிள் 'மெயின்றோட்'டை அண்மிக்கத் தொடங்கியதும், எனக்குப் பயம் தொற்றிக்கொண்டது.

'முந்தியெண்டால் துப்பரவா இந்த வேலை செய்யேலாது... இப்ப செய்யலாம். கண்டாத்தான் விசாரணை, அது, இதுவெண்டு கஷ்டப் படுத்துவங்கள். காணுறது எண்டதும் கனவிலதான் நடக்கவேணும். இருந்தாலும் கொஞ்சம் அவதானமாகத் தானே இருக்கவேணும்.'

மனம் தனக்குத்தானே குழப்பங்களை ஏற்படுத்தியும், சிக்கல்களைத் தீர்த்தும் கொண்டது. சைக்கிள் மெயின்றோட்டைக் கடந்தது.

இனிமேல் நான் றோட்டால போறது என்ர வாடிக்கையாளருக்கெல்லாம் தெரியும். ஏனெண்டால் அவனவன் ஹாண்டில்ல மட்டும்தான் பெல் பூட்டுவான். என்ர சைக்கிள் பெல் இல்லையெண்டாலும் சீற்றில் இருந்து செயின்கவர் மட்டும் எல்லா இடமும் சத்தம் போட்டு ஆளைக் காட்டிக் குடுத்திடும்.... இஞ்சை பார் கடைக்கார கந்தசாமி வாறார். கண்டால் போச்சு. வேலையளையும் விட்டுவிட்டு இப்பவே வந்து நிக்கப் போறான் பாவி. ஒருமாதிரிச் சமாளிக்க வேணும். போய் தண்ணீர் கலக்கக்கு முந்தி வந்து சேர்ந்திடுவான்.

மனதினுள்நினைத்துக் கொண்டு கண்டும் காணாமல் போறதுக்காக 'பெடலை' அழுத்தி மிதித்தேன். அந்த அழுத்தத்தால் நடுஅச்சுக்குள் கேட்ட 'டக்' என்ற சத்தம் கந்தசாமியை நிமிரச் செய்தது.

"கனகு... 'வெட்டிரும்பு' போகுது போல. எங்கடபாடு பிழையில்லை... கொண்டுபோ வாறன்"

நேற்றும் முந்தநாளும் சின்னப் பிரச்சினையொண்டால என்னட்டையும் தட்டுப்பாடாப்போனது எல்லாருக்கும் பெரிய தவணமாப் போச்சு. வாருங்கோ. இண்டைக்கு உங்களுக்கெல்லாம் வேலை காட்டுறன். தறுமு தரேக்க ஒரு போத்திலுக்கு அரைப் போத்தில் தண்ணி கலக்கச் சொல்லித்தான் தாறவன். நான் முக்காப் போத்தில் கலக்கிறனான். இண்டைக்கு ஒரு போத்திலுக்கு ஒரு போத்தல் தண்ணி கலக்கவேணும். வேணுமெண்டால் குடிக்கட்டும். இல்லையெண்டால் போகட்டன். இப்ப



வெல்லாம் தோட்டக்காரன் 'வாட்டர் பம்ப்' பாவிக்கிறானோ இல்லையோ தெரியாது. ஆனா எங்களைப் போல ஆக்களும் பால் விக்கிறவையும் எப்படியும் 'வாட்டர்பம்ப்' பாவிக்கோணும். எங்கடை கையுக்குள்ளால போற தண்ணியும் காசு உழைக்கும்.

மனம் அசைபோடப் பொழுதைப் பார்த்து நேரத்தைக் கணித்தபடி நகர்ந்து கொண்டிருந்தேன்.

இப்ப நாலு மணியிருக்கும். ஆறரைக்கு வீட்டை போய்ச் சேர்ந்திடலாம்.

மனதினுள் எண்ணியபடி திரும்பியபோது றோட்டுக்கரை தோட்டத்துக்குள் கீரை பிடுங்கிக் கொண்டு தியாகுவின் மனைவி நின்றாள்.

"மெய்யே... தியாகண்ணையை காணேல்ல. என்ன இந்த நேரம் கீரை புடுங்கிறியள்"

நான் சைக்கிளை நிறுத்திக் கேட்டேன். நான் நிறுத்திக் கேட்டதற்கு இன்னொரு காரணமும் இருந்தது.

"அவர் உப்பிடித்தான் எங்கையோ போட்டார்... இரவைக்கு கீரைப்புட்டு அவிப்பமெண்டுதான் கீரை புடுங்கிறன்... துலையாலையே?"

தன் கஷ்டத்தைச் சொல்ல வெட்கப்பட்டுச் சமாளித்தது எனக்குப் புரிந்தது. 'துலையாலையே' என்று கேட்டது என் மனதை 'திக்'கெனச் செய்தது. உண்மையைச் சொன்னாத் திட்டிப்போடுவா என்பதும் தெரிந்ததே.

"மருந்தெடுத்துக் கொண்டு வாறன். மனிசருக்கு எத்தின பிரச்சினையள்..."

கதையை மாற்றி என்கதைக்கு ஆயத்தமானேன்.

"மெய்யே... நீங்கள் சங்கிலியொண்டு விக்கிறத்துக்கெல்லே திரிஞ்சனியள். வித்துப் போட்டியளே"

"இல்லை...இன்னும்விக்கேல்லை. அது ரட்டை வடம். நியாயமான பெறுமதி. ஆரும் வெளிநாட்டுக்காரர் வாங்கினால் சரி. இல்லையெண்டால் கஷ்டம்தான். அறா விலை, பெறா விலை கேட்டால் குடுக்கேலுமே?"

"அது சரிதான். அதை ஒருக்கா கொண்டாங்கோவன் பார்த்து எடுப்பம்"

"உனக்கென்ன வெளிநாட்டு வருமானமே? சும்மா கொஞ்சக் காசெண்டு நினைக்கிறாய் போல..."

தியாகுவின்ர மனிசி கூறியதைக் கேட்க எனக்குப் பொல்லாத கோபம் வந்தது.

"உங்களுக்கென்ன...கொண்டாங்கோ என்ன விலையெண்டாலும் நான் எடுக்கிறன்"

வீம்பாகப் பேசிவிட்டு நகர்தேன். மீண்டும் சைக்கிள் சக்கரங்கள் வீதியைத் தழுவ ஆரம்பித்தன.

என்ர மனிசி கனநாளா கேட்டவள் ஒரு பெரிய சங்கிலி எடுத்துத் தரச் சொல்லி. என்னட்டை இருக்கிற காசுக்கு நாய்ச்சங்கிலி மாதிரி ஒண்டையே பவுணில செய்து குடுப்பன். தியாகுவின்ர மனிசி ஒண்டும் தெரியாமல் கதைக்குது. கொண்டு வரட்டும். தியாகரும் குடிச்சுப்போட்டு கடன் சொன்னவர்தானே. இப்பவும் தருமதி இருக்கு. இவரையும் கொஞ்சம் இழுத்தடிக்க வேணும். என்ர பொருளுக்கு அவர் கடன் சொல்லலாம் அவற்ற பொருளுக்கு நான் கடன் சொன்னா என்ன? கடனையும் கழிச்சுப் போட்டுத்தான் குடுக்கோணும். மேன் பொடியன்ரை வருத்தத்துக்குக் குளிசை வேண்டக் குடுத்த காசைக் கொண்டுவந்து குடிச்சுப் போட்டு போய்க் காசு துலைஞ்சு போச்செண்டு சொன்னவர்தானே தியாகர். உவரிட்டை சங்கிலியை வேண்டிப்போட்டு குடிக்கக் குடுத்தே கழிக்கலாம் பார்ப்பம்....

மனதினுள் எண்ணிக்கொண்டே மிதித்தேன்.

"என்ன கனகு இண்டைக்கு 'கிபீர்' கிடைக்குமோ?"

திடீரென்று கேட்ட சத்தத்தால் திரும்பினேன். ஒரு கடைக்குள் இருந்து ஆறுமுகம் வெளிக்கிட்டார்.

"இரவு வீட்டுப் பக்கம் வாங்கோவன். கொண்டு போறன்..."

கூறிக்கொண்டு பொக்கற்றினுள் இருந்த புகையிலையை வாய்க்குள் திணித்துக் கொண்டேன்.

இவர் ஆறுமுகத்தார் பெரிய உத்தியோகத்தராம்! அவர் வீட்டை வந்தா இருந்து குடிக்கக் கதிரை வேணுமாம்... வாறது கசிப்படிக்க. பிறகு அவருக்கொரு மரியாதை. இவற்ற சம்பள நாள் இவருக்கு மறந்தாலும் எனக்கு வலு ஞாபகம். குடிக்க வந்தா வலு கெப்பரா பேசுவர். கதைப்பர். பிரசங்கம் பண்ண விட்டால் கைதட்டப் பேசுவர்.இவர் சொல்லுறதைக் கேக்கிறத்துக் கெண்டே கன சனம் நிக்கும். இவரின்ர வேலைத்தலத்திலயும் தனக்குக் கீழ் வேலை செய்யிறவைக்கு அதிகாரம் போடுவர். ஆனா இஞ்ச நான் போடுறதுதான் சட்டம். என்ரை கையிலதான் அதிகாரம். 'இண்டைக்குத் தரேலாது' எண்டால் மதிப்பு மரியாதை பார்க்காமல் கெஞ்சுவர். அப்படி நான் ஒரு நாளும் செய்யேல்லை. ஆனால் அதை என்னால செய்ய ஏலும். என்ன செய்யிறது. நாலெழுத்துக் கூடப் படிச்சிட்டார் எண்டதுக்காக மரியாதை குடுக்க வேண்டிக் கிடக்கு. இவரைப்போல ஆக்கள் குடிக்கக் காசில்லாட்டி மனிசிமாற்றை தாலியைக்கூடக் கொண்டு வந்து தந்திட்டுக் குடிப்பினம். உவர் தரவழியால நான் நகைக்கடையும் போடவேண்டி வரும்... உவரைப் போல ஆக்கள் தானே எனக்கு முக்கியம்.

எண்ண அலைகள் மனதை ஆக்கிரமிக்க இழைப்புத் தெரியாமல் ஓடிக்கொண்டிருந்தேன்.

இந்தச் சைக்கிளுக்கு கிறீசாவது வைக்கோணும். மனிசற்ற உடம்பை வருத்துது.

நடைமுறைச் சிக்கலில் எனக்கு புதிய ஞானங்கள் பிறந்தன. சைக்கிள் ஓடிய வேர்வையால் சேட் உடம்போடு ஒட்டியது.

சீ... இந்தச் சேட்டு சரியில்ல. ஒருக்கா கட்டாடியட்ட குடுத்திட்டு வைக்கவேணும். நைலோன் சேட்டுப் போல அவியுது... சொன்னாப் போல கட்டாடியார் அண்டைக்கு அரைப் போத்தில் வாங்கினத்துக்குக் காசும் தரேல்ல. உடுப்பும் எடுக்கேல்ல. கொஞ்சம் கொஞ்சமா உடம்பை முறிச்சு உழைக்கிறதையெல்லாம் கொண்டுவந்து ரொக்கமாத் தாரவர். இப்ப கொஞ்ச நாள் பிசகுறார். வரவரக் கடனும் ஏறுது. ஈரத்துக்க தண்ணிக்க நிக்கிறதெண்டு பாவம் பார்த்துக் குடுத்தா பிறகு அவற்றை மனிசி பொடியள் மாதிரி நானும் காத்துக்குத்தான் வாய்திறக்கோணும். ஆளின்ர முகம் கறுத்துக் கொண்டு வந்திட்டுது. இருந்தாப் போல 'பொட்'டெண்டு போயிட்டா என்ர கடன் கோயில் கணக்கா போகும். இனி கட்டாடியாரை 'கட்' பண்ண வேண்டியதுதான்.

கட்டாடியாரை மனதினுள் விலக்கிக் கொண்டபோது, அவர் கசிப்புக்காக கெஞ்சி மண்டாடுவது மனக்கண்ணில் தெரிந்தது. பாதையின் ஏற்ற இறக்கங்கள் கூடத் தெரியாமல் மனதை அலைபாயவிட்டு வந்து கொண்டிருந்தேன்.

"கனகண்ணை... கனகண்ணை... இஞ்சை ஒருக்கா நில்லுங்கோ. ஒரு கதை"

"இதாரப்பா... இண்டைக்கு நாய் முகத்திலதானே முழிச்சிருக்கிறன். வீட்டைபோக இருளப்போகுது..."

சற்றுப் பலமாகவே கூறிக் கொண்டு திரும்பினேன்.

"எட... எங்கட வேலண்ணை பெண்சாதியே... உங்கட சரக்குத் தான் கொண்டுபோறன்"

"என்னசெய்யிறது கனகண்ணை.. உடம்பு குத்துளைவு எண்டு பழகிட்டன். விடேலாமல் கிடக்கு. உங்கட வீட்டை வந்து பார்த்தன். நேற்றும் முந்தநாளும் கிடைக்கேல்ல. உங்களையும் காணேல்ல. உதில்லாமல் நித்திரையும் வருகுதில்லை"

கூறிக்கொண்டு நகர்ந்தாள். எனக்குச் சிரிப்புத்தான் வந்தது.

பொடியள் வெளியில இருந்து காசனுப்புதுகள். புருசனும் பெண்சாதியும் குடி. வேலண்ணை கால் அடிச்சா மயங்கிப்போடுவர். மனிசி அரை அடிச்சாலும் அசையாமல் நிற்கும். காலைக் குடுத்திட்டு காதானைக் கேட்டாலும் கழத்தித் தரக் கூடிய பெருங் குடிமகள். ம்... கடைசி மட்டும் கடவுள் உதுகளைத் திருந்த வைக்கக்கூடாது. உதுகள் திருந்தினா நான் துலைஞ்சன்.

நினைத்துக்கொண்டே சைக்கிலில் ஏறினேன், சைக்கிள் என்னைச் சுமந்து போராடத் தொடங்கியது.

அட... இப்ப உந்த மதவிலஇருக்கிற பொடியள் கண்டால் கூடவே வரப்போறாங்கள். அதுகளுக்கு என்ன வேலை. வீட்டில தேப்பன், தாய் உழைச்சு சமைச்சுப்போட மதவிலயும் சந்தியிலயும் நிண்டு கலர் பாக்கிறன், பிகர் பாக்கிறன் எண்டு காலத்தைக் கடத்துதுகள். ஆனா ஒண்டு. குடிக்க வந்தால் ஒளிச்சு நிண்டு குடிச்சிட்டு விலை கூடச் சொன்னாலும் சத்தம் போடாமல் தந்திட்டுப் போடுங்கள். இதுகளில தானே நானும் மடங்கட்ட இடம் கண்டுகொண்டன்... எட மதவில நிக்கிறதெல்லாம் கண்டுட்டுதள்.

மனதினுள் அடக்கிக் கொண்டு கடந்தேன்.

"கனகண்ணை.... 'சொல்லாத' இருக்கே"

"ஓம்... அந்த ஒழுங்கோடதான் வாறன்"

பொடியள் என்ர சரக்குக்கு வைச்ச பேர் 'சொல்லாதை'. தாங்கள் குடிச்சதெண்டு 'ஒருத்தருக்கும் சொல்லாதை', 'சொல்லாதை' எண்டு சொல்லிச் சொல்லி இப்ப அதுக்குப் பேரே 'செல்லாதை'யா போச்சு.

மதவைத் தாண்டி இரண்டு முடக்குக் கடந்திருப்பேன்...

"டேய்... இஞ்சை நில்"

யாரோ உரப்பிய உரப்பலுக்கு அதிர்ந்துபோய் நின்றேன். என்ர இளையமேனின்ர வயதிருக்கும். இல்லாட்டி ஒண்டுரண்டு கூட இருக்கும். எப்பிடியும் இருபது வயதுக்குள்ள ஒரு பொடிப்பயல். 'டேய்' எண்டு கூப்பிட்டால் எப்பிடி இருக்கும். நானும் சைக்கிளால் இறங்கினன்.

"டோய்... உன்னட்டை இல்லாட்டி நாங்கள் வேற இடத்தில எடுக்கமாட்டமே... என்ன சேட்டையே விடுறாய்? நானென்ன சும்மாவே! குடிக்கிறன்... மற்றவைக்கு காலுக்கு இருபத்தைஞ்சு சொல்லுறாய். எனக்கு நாப்பது சொல்லுறாய். அப்பர் அரசாங்க வேலையெண்டால் நானும் அதே...:"

வயதில் சிறியவன் உளறத் தொடங்கினான். அவன் பேசவில்லை. அவன் அடித்திருந்த கசிப்புத்தான் பேசியது. விலகுவதா, விரட்டுவதா என மனம் தடம்புரண்டு விலகு என்பதை உணர்த்திய போதும் கறுவிக் கொண்டது.

வடுவா... மரியாதையில்லாமல் கதைக்கிறாய். இனி குடிக்க வா. நல்லா தண்ணி கலந்து தாறன். உன்னைக் காட்டிக்குடுத்து வருமானத்தையும் இழக்கமாட்டன். உனக்குத் தராமல் விட்டு நட்டப்படவும் மாட்டன். உனக்கு தண்ணி தந்தே காசுழைக்கிறன். கொப்பரென்ன பெரிய அரசாங்க வேலையே பார்க்கிறார். என்ர உழைப்பில் கால்பங்கு உழைப்பரே? தண்ணி கலக்காமல் தனி வடிதான் போத்தில் அறுவத்தைஞ்சுக்கு வாங்கிறன். அதுக்கு முக்காப்போத்தில் தண்ணி கலந்து போத்தில் நூறுக்கு விக்கிறன். அறுவத்தைஞ்சுக்கு வேண்டி நூற்றி எழுவத்தைஞ்சுக்கு வித்தா லாபம் எவ்வளவு தெரியுமே? ஒரு நாளைக்கு எத்தின போத்தல் விப்பன் தெரியுமே? க்கும்... என்னோட எந்த உத்தியோகத்தனும் போட்டிபோட்டு உழைக்கட்டும் பாப்பம்.

உணர்ச்சிவசப்பட்டு, என்னை மறந்த நிலையில் பற்களை நொறுமி, நாக்கைக் கடித்தபடி சைக்கிளைத் திருப்பியபோது 'படார்' என்று சத்தம் கேட்டது.

ஈ. தயாரூபன்

ஒரு கணத்தில் சுதாகரித்து தெளிவுக்கு வந்தபோது....

"என்ன ஐயா, உங்களுக்கு சைக்கிளோடத் தெரியாட்டி நடந்து திரியுங்கோ. றோங் சைட்டில வந்து அடிபட்டு, என்னை விழுத்தி..."

அந்த அடிபட்ட இளைஞன் கதைத்ததொன்றும் என் காதில் விழவில்லை. மோதிய மோதலில் பையினுள் இருந்த 'கான்' பிரிந்து சரக்கெல்லாம் ஓடி வழிந்து, முன் சில்லையும் நனைத்து நாறியது. என் உடல் ஆத்திரத்தில் நடுங்கியது.

"சரி... என்னிலதான் பிழை. எண்டாலும் நீ 'பெல்' அடிச்சிருக்கலாம் தானே. என்ர முதல் அநியாயமா போச்சு...."

நான் கூறியதைக்கேட்டு அவன் என்னை முறைத்தான். என்கோபம் தலைக்கு ஏறியது.

"உதென்ன சமானெண்டு எனக்குத் தெரியும். இப்ப உந்தக் 'கான்' பிரிஞ்சதால எத்தினை உயிர் பிரியாமல் இருக்கும் தெரியுமே...?"

அவன் பேசியதொன்றும் எனக்குத் தேவையில்லாதது. எனக்கு மற்றவன்ர உயிரே முக்கியம்? மற்றவன் கறுத்தாலென்ன? கருவாடானாலென்ன? குடலறுந்து செத்தால் என்ன? எனக்கு முக்கியம் காசு...!

"சும்மாவிசரக் கிளப்பாமல் போ..."

என் ஆத்திரம் என்னைத் தூஷணம் வரை கொண்டுபோனது. இன்று போன முதலைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் என்ர வாடிக்கையாளருக்கு நான் என்ன சொல்லுறதெண்ட கவலைதான் என்னைப் பிழிந்தது. இப்படியே போனால் விரைவில் என்னை விட்டுப் பிரிந்து விடுவார்கள் எண்டு எனக்குத் தெரியும். ஆனால் அவர்கள் உயிரோடு இருக்கும்போது பிரியவிட நான் மொக்கனா?

பொழுதைப் பார்த்துவிட்டு சைக்கிளைத் திருப்பினேன்.

கெஞ்சி மண்டாடியெண்டாலும் தறுமுவிட்டை ஒரு போத்திலாவது வாங்கிக் கொண்டு வரவேணும்.

(யாவும் கற்பனையே)

## உயிர்ப்பூட்டும் துடுப்பாட்டம்

ஒருபந்து மூன்றிலக்கு
ஓர்பதினோர் அணிவீரர்.
கருஇந்தத் துடுப்பாட்டக்
களந்தனிலே களைகட்டும்.
இவ்வாட்டம் வாழ்க்கையதன்
இயல்பூக்கம் எடுத்தியம்பும்.
மூவ்வான முப்பொருளை
மூன்றிலக்கும் சுட்டிநிற்கும்.
துடுப்பென்ற மனம்கடவி(த்)
துணிவாக(ச்) செயற்பட்டால்
விடுப்பெதுவும் இல்லாமல்
வீழாமல் நிலைத்திடலாம்.
விதியென்ற பந்ததுவோ
விதம்விதமாய்(ச்) சுழன்றுவரும்.
கதியதனை நிர்ணயிக்கும்
கடன்ஆட்ட நாயகனின்
மதியென்ற மனத்திட்ப
மாட்சியிலே தங்கிநிற்கும்.
ஆளுதிறன், துணிவுறுதி,
அர்ப்பணிப்பு, விசுவாசம்,
சூடுநெறி; சூழல்நலம்;
தொடர்கருமம் துலக்கல்பலம்
அணத்தலைவர் கீழடங்கி
அணியுள்ளோர் அனைவருமே
பணியதனைப் பயன்பாடாய்(ப்)
பகிர்ந்திட்டால் நயம்பிறக்கும்
கூட்டான முயற்சியதும்
குன்றாத குழுஉணர்வும்
நாட்டாதார் வெற்றியதன்
நலமிழந்து பலமிழப்பர்
வாழ்க்கையெனும் ஓட்டத்தில்
வகைவகையாய் எமைவீழ்த்த(ச்)
சூழ்ச்சிபல சூக்குமமாய்(த்)
தொடராக வந்துவிழும்
துடுப்பாட்டம் இத்தனையும்
துல்லியமாய்(த்) துலக்கிநிற்கும்
எடுப்பான விளையாட்டென
ஏற்றிப்புவி இயம்பிநிற்கு
வளமாகப் பயிற்சிபெற்று
வகைதெரிந்து வலுப்பெற்று,
உளமார ஆடிவந்தால்
உயிர்ப்பூட்டும் துடுப்பாட்டம்

- தீவகன் -

## பாதாதி கேசப் படைப்பு

மையிருட்டு ராப்பொழுதை வார்க்கவெனப் பூமியது
கையிரக்கும் தாரிகையுன் கார்குழலோ! - தையிருக்க
மார்கழியை என்றன் மனதில் நினைவூட்டும்
பார்வைகளால் உள்ளம் பதைத்து.

வெண்தேமாப் பூவில் விழுந்துமது உண்டவண்டு
எம்பிப் பறக்கப்பின் எத்தனித்து - தன்முயற்சி
கைகூடாப் போதைக் கலைமயக்கம் தோய்ந்ததடி
மைகூடும் உன்றன் விழி.

மூன்றாம் பிறையென்ற முன்னோர் பிழைசெய்தார்
ஞானஒளி வீசாதவ் வான்பிறையே - வானடியில்
பாதி கரைந்த பருதிச்செங் கோலத்தின்
சாதியுன்றன் நெற்றிச்சா யல்.

சின்னஇளம் பொன்சங்கைச் சிற்பியுளி கொண்டழகாய்க்
கன்னத்திடை வைத்த கலைநேர்த்தி - கொண்டதுன்றன்
நாசியோ அங்கே நலுங்கிவரும் ஸ்வாசத்தால்
பாசி துளிர்க்கும்கற் பார்.

போர்செய்த பின்னேதான் பூக்கும் அமைதியென்ற
தேற்றத்தைக் காட்டும் திருவாயோ - ஊற்றான
செங்குருதித் திட்டுக்களி னுள்ளே சிரிக்கிறதே
வெண்முல்லை பூத்த வெளி.

உன்மனதைக் கொள்ளையிட ஓடிவரும் ஆண்குலத்தைத்
திண்மையுடன் தாக்கவெனத் திட்டமிட்டு - அன்றிறைவன்
கட்டிவைத்த பொன்கலசக் கொத்தளங்கள் தானிரண்டும்
புத்தியறச் செய்யும் பூரித்து.

ஏனில்லை இந்த இடுப்பென்ற கேள்வியினைத்
தான்கேட்டுக் கேள்விக் குறியிரண்டு - மேனியிலே
ஓடிச் செழித்து உறுத்துவதைப் பார்த்திங்கே
நாடித் தவிப்பெகிறி நான்.

வெண்பாவில் உன்னை விளம்பில் வலிக்குமென்று
என்மனது சொல்கிறது என்றாலும் - தென்பொதிகைத்
தென்றலிலே ஊஞ்சலிடும் தேன்மலரின் கொத்துப்போல்
உன்னடையில் ஊஞ்சலிடும் ஊர்.

- ச. முகுந்தன்

# 'பல்லிகள் படிப்படியாகப் பாம்புகளா

## அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

லசெற்றீலியா (LACERTILIA) கூட்டத்திற்குரிய விலங்குகளில், பல்லிகளும் ஓணான்களும் கூடுதலாக மரவாழ்க்கைக் குரியவை. அறணைகள் (SKINKS) தரை வாழ்க்கைக்குரியவை. அறணைகள் எதிரிகளிலிருந்து தப்புவதற்கு இடுக்குகளில் ஓடி மறையும். இவ்வியல்பே பாம்புகளின் தோற்றத்திற்கு வழிவகுத்தது. தலைச் செதில்கள் படிப்படியாக கவசங்களாக (SHIELDS) மாறின. [இந்த மாறல்களின் போது சில செதில்கள் (ஓடுகள்) செவித் துவாரங்களை மூடியதால் பாம்புகள் செவிடாகப் போய்விட்டன. அறணைகளுக்குச் செவித்துவாரங்கள் உண்டு.]

உடல் அமைப்பிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. அறணைகளின் உடல் முதுகு வயிற்றுப் புறமாக நசுக்கப்பட்டு. பின் தலையிலிருந்து வால் முனைவரை பருமன் சிறிதே படிப்படியாக அதிகரித்துப் பின் குறைந்து கொண்டுபோக, வடிவமும் கூடுதலாக உருளை வடிவத்தைப் பெற்றது. கண்மடல்கள் மறைய கண் ஒளிபுகவிடும் இயல்புள்ள ஓட்டினால் மூடப்பட்டது. அதனால் கண்களை மூடக்கூடிய இயல்பு அற்றுப் போனது. உடல் நீளமும் படிப்படியாக அதிகரித்தது.

உடலில் இத்தகைய மாறல்கள் ஏற்பட்டாலும், இடுக்குகளில் நுழைய கால்கள் தடையாகவிருக்கும். அதனால் அவயவங்களிலும் படிப்படியாக மாறல்கள் ஏற்பட்டன. அவயவங்கள் (கால்கள்) படிப்படியாகச் சிறுக்க முன் பின் அவயவங்களுக்கு இடைப்பட்ட தூரம் படிப்படியாக அதிகரித்தது. தொடர்ந்து விரல்கள் 'தேய்ந்து' மறைய; அவயவங்களும் குறுகி, சில இனங்களில் நாலு முளைகளாகவும் சில இனங்களில் இரண்டு முளைகளாகவும் நிலைத்தன. இவை இடப்பெயர்ச்சிக்கு உதவா. மேலும், அவயவமுளைகளைப் பொறுத்தவரை, பலதரப்பட்ட குறுகிய அளவு நீளங்களை உடைய முளைகளை உடைய இனங்களுண்டு (மலைப் பாம்புகளில் இன்றும் பின்னவயவங்கள் சிறிய முளைகளாக நிலைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.) அவயவங்கள் இடப்பெயர்ச்சிக்கு உதவாமற் போக, இவ்விலங்குகள் இடப்பெயர்ச்சிக்கு வேறு நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இவை வயிற்றில் ஊர்ந்தும், உடலை வளைத்தும் இடப்பெயர்ச்சி செய்ய ஆரம்பித்தன. இதன் பயன்ாக, வேகமாக இடப்பெயர்ச்சிசெய்ய உதவுவதற்கும், சிலவற்றில் மரங்களில் ஏற உதவும் வகையிலும், வயிற்றுப்புறச் செதில்களில் படிப்படியாக மாறல்கள் ஏற்பட்டன; அகலமான பெரிய செதில்கள் தோன்றின.

அவயவங்கள் படிப்படியாக மறைய, இவற்றைத் தாங்கும் வளையங்களும் (தோட்பட்டைவளையமும், இடுப்பு வளையமும்) படிப்படியாகத் தேய்ந்து மறைய ஆரம்பித்தன. (பாம்புகளில் வளையங்கள் முழுமையாக மறைந்துவிட்டன; ஆயினும் மலைப்பாம்புகளில் வெகுவாக ஒடுக்கப்பட்ட நிலையில் இடுப்பு வளையம் நிலைத்துள்ளது. அதற்கு செய்தொழில் எதுவுமில்லை).


இன்னோரன்ன மாற்றங்களின் பயனாக பாம்புகளின் வடிவமைப்பு ஆக்கம் பெற்றது. பாம்புகளின் மூதாதை ஓர் அறணையாகத்தான் இருக்கவேண்டும்.

இத்தகைய மாறல்களுக்கு இலங்கையிலுள்ள அங்கிகளிலேயே பல உதாரணங்களைக் காட்டலாம். முழுமையான உதாரண விளக்கத்திற்கு ஆதாரங்கள் உண்டு. சில உதாரணங்கள் மாத்திரம் விளக்கத்திற்காக இங்கு கையாளப்படுகின்றன. முழுமையான, தொடரான, விளக்கத்திற்கு இவையே போதும். (கூர்ப்பிற்கு இலக்கணமாயுள்ள இந்த அங்கிகள் பாதுகாக்கப்படவேண்டியவை அல்லவா?)

சாதாரண அறணைக்கு உதாரணமாகப் புள்ளி அறணை (SPOTTED SKINK)யைக் கொள்ளலாம். இது அறணையின் அடிப்படை வடிவமைப்பைக் கொண்டது. அவயவங்கள் சாதாரணமானவை; உறுதியானவை; உடல் அமைப்பையும் தலையின் செதிற் (கவசங்கள்) போர்வையையும் கவனிக்கத்தக்கவை. புள்ளி அறணையின் விஞ்ஞானப் பெயர் MABUYA MACULARIA.

## (குகல...


றியோப்பா பங்ரேற்றா (R...
CTATA) என்ற அறணையில் ...
அதிகரித்துள்ளது. கழுத்து ...
டது. (இது சாதாரண அறணை...
பொருந்தும்). (முன் - பின் ...
ளுக்கு இடைப்பட்ட தூர...
துள்ளது. அவயவங்களின் வ...
மாற்றமில்லை; அளவில் சி...
உடலின் வடிவமைப்பு மேலு...
வடிவமைப்பை ஒத்ததாகவி...
இரண்டு விரல் பாம்பு அற...
TOED SNAKE SKINK)யி...
வடிவம் மேலும் உறுதியாகி...
றம் நெடியது; முன் பின் ...
ளுக்கு இடைப்பட்ட தூரம் ...
கரித்துள்ளது; அவயவங்கள் ...
கள் போல ஒடுக்கப்பட்டுவி...
வொன்றிலும் இரண்டு விரல்க...
உண்டு. இரண்டு விரல் பாம்...
யின் விஞ்ஞானப்பெயர் ...
DIDACTYLA. இலங்கை...
பொல்காவலைப் பகுதியில் ...
சிமித்தின் பாம்பு அறணை...
SNAKE SKINK)யில், அ...
மேலும் ஒடுக்கப்பட்டு, பின் அ...
மாத்திரம் இரண்டு முளைகள...



I

புள்ளி அறணை (SPOTTED SKINK). அறணையின் அடிப்படை வடிவமைப்பை இது காட்டுகின்றது.

RIO...
அவயவா...




III

இரண்டு விரல் பாம்பு அறணை (TWO TOED SNAKE SKINK) - பாம்பின் வடிவம் உறுதியாகின்றது. அவயவங்கள் ஒடுக்கப்பட்டதுடன், ஒவ்வொன்றிலும் இரண்டு விரல்கள் மாத்திரம் உண்டு.



சி...
- அவ...
மாத்த...



V

விரலற்ற பாம்பு அறணை(TOELESS SNAKE SKING) முன்-பின் அவயவங்கள் சிறிய முளைகளாக நிலைத்துள்ளன. விரல்கள் மறைந்துவிட்டன.



சுறாத்தலை ப...
அவயவங்கள் முழு...
(LIVING FOSSI...

# ...ம்புகளாக மாறிய கதை"

## குகன்

...றியோப்பா பங்ரேற்றா (RIOPA PUN-...TATA) என்ற அறணையில் உடல் நீளம் ...திகரித்துள்ளது. சூழத்து மறைந்து விட்...து. (இது சாதாரண அறணைகளுக்கும் ...பொருந்தும்). முன் - பின் அவயவங்க...ளுக்கு இடைப்பட்ட தூரம் அதிகரித்...துள்ளது. அவயவங்களின் வடிவமைப்பில் ...மாற்றமில்லை; அளவில் சிறுத்துள்ளன. ...உடலின் வடிவமைப்பு மேலும் பாம்பின் ...வடிவமைப்பை ஒத்ததாகவிருக்கின்றது.


இரண்டு விரல் பாம்பு அறணை (TWO ...OED SNAKE SKINK)யில் பாம்பின் ...வடிவம் மேலும் உறுதியாகின்றது; தோற்...ம் நெடியது; முன் பின் அவயவங்க...ளுக்கு இடைப்பட்ட தூரம் மேலும் அதி...கரித்துள்ளது; அவயவங்கள் சிறுமுளை...கள் போல ஒடுக்கப்பட்டுவிட்டன; ஒவ்...வொன்றிலும் இரண்டு விரல்கள் மாத்திரம் ...உண்டு. இரண்டு விரல் பாம்பு அறணை...யின் விஞ்ஞானப்பெயர் NESSIA ...IDACTYLA. இலங்கைக்குரியது. ...பால்காவளைப் பகுதியில் காணப்படும்.

சிமித்தின் பாம்பு அறணை (SMITH'S ...NAKE SKINK)யில், அவயவங்கள் ...மேலும் ஒடுக்கப்பட்டு, பின் அவயவங்கள் ...மாத்திரம் இரண்டு முளைகளாகக் காணப்படும். (முதலிலிருந்து, சகலதிலும், தலைச் செதில்களில் ஏற்படும் மாற்றங்களையும் ஒப்பிட்டுப்பார்க்கவும்). இதுவும் இலங்கைக்குரியது. கம்மடுவ பகுதியில் மாத்திரம் காணப்படும். இதன் விஞ்ஞானப் பெயர் BIPEDOS SMITHI.

விரலற்ற பாம்பு அறணை (TOELESS SNAKE SKINK)யில், முன்பின் அவயவங்கள் சிறிய முளைகளாகக் காணப்படும். விரல்கள் மறைந்துவிட்டன. இதுவும் இலங்கைக்குரியது; ஊவா, சப்பரகமுவ மாகாணங்களுக்குரியது; கண்டி, நாவலப்பிட்டி பகுதிகளிலும் உண்டு. இதன் விஞ்ஞானப் பெயர் EVESIA MONODACTYLA. (இனப்பெயரின் கருத்து:- MOMO - ஒற்றை; DACTYLE - விரல்; ஒற்றை விரலன்.)


சுறாத்தலை பாம்பு அறணை (SHARK HEADED SNAKESINK)யில் அவயவங்கள் முழுமையாக மறைந்துவிட்டன. இலங்கைக்குரியது; வடமேற்குப் பிரதேசத்திற்குரியது. இது ஒரு வாழும் உயிர்ச் சுவடி (LIVING FOSSIL)யாகக் கருதப்படுகின்றது. விஞ்ஞானப் பெயர் ANGUINICEPHALUS HICKANALA.

இலங்கையிலுள்ள அங்கிகளின் வளம் மாத்திரமல்லாமல், கூர்ப்பு அடிப்படையில் இவற்றின் முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்ளக் கூடியதாயிருக்கின்றது. இவை அனைத்தும் உயிரியல் கற்பதற்கு மிகவும் அவசியமானவை.



II

RIOPA PUNCTATA - உடல் நீளம் அதிகரித்துள்ளது. அவயவங்களுக்கு இடைப்பட்ட தூரம் அதிகரித்துள்ளது.



IV

சிமித்தின் பாம்பு அறணை (SMITH'S SNAKE SKINK) - அவயங்கள் மேலும் ஒடுக்கப்பட்டுள்ளன. பின்னவயவங்கள் மாத்திரம் சிறிய முளைகளாகக் காணபடுகின்றன.



VI

சுறாத்தலை பாம்பு அறனை (SHARK HEADED SNAKE SKINK). அவயவங்கள் முழுமையாக மறைந்துவிட்டன. இதுவொரு உயிருள்ள சுவடி (LIVING FOSSIL)யாகக் கருதப்படும்.

# "செலவு ஒழிந்தனன் செறிக நின்வளையே"

இம்மகுட வாசகம், எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாய கலித்தொகைப் பாடல் ஒன்றில் வந்துள்ளது. 'காட்டைக் கடந்து பொருள் ஈட்டத் துணிந்த நம் தலைவர், தங்கருத்தைக் கைவிட்டுவிட்டார்; கவலை இனியில்லை; உடல் மெலிவால் கழன்ற கைவளைகள், இறுகச் செறியும் வண்ணம் உடல்பருக்க மகிழ்ச்சியில் திளைப்பாயாக' என்னும் பொருளது அது.

எட்டுத்தொகை நுல்களுள் ஒன்றாக விளங்குவது கலித்தொகை. தமிழில் வழங்கும் வெண்பா முதலிய நால்வகைப்பாக்களுள் ஒன்றாய கலிப்பாவினால் இயன்றது. அதனால், இப்பெயரை அது பெற்றுள்ளது. இது 'கற்றறிந்தார் ஏத்தும் கலி' என்று சான்றோரால் புகழப்படுகின்றது.

கடவுள் வாழ்த்து உட்பட நூற்று ஐம்பது பாடல்களைக் கொண்டது. பாலை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் முதலிய பிரிவுகளை அடக்கியது. பாலை பாடிய பெருங்கடுங்கோ முதலியவர்களால் பாடப் பெற்றது. பல்வகை நயங்களும் நிறைந்தது! சொல்லோவியங்கள் செறிந்தது.

தேன்கூடு

தமிழ் மாந்தராயினார், காதலித்தாரை மணந்து, புதல்வரை ஈன்று, நேரிய வழியில் பொருளீட்டி, அறநெறியில் செலவுசெய்து, இன்ப நலம் துய்த்த வாழ்வியல் வண்ணம் இங்கு இனிது செப்பப்படுகின்றது. ஆங்காங்கே குட்டி நாடகங்களாக அமைந்த கவிதைகளும் உண்டு.

முதலில், செய்யுளின் பொருட்சுருக்கத்தைக் காண்போம். ''அன்னையே! யான் தலைவரைக் கண்டேன். கூறினேன். 'ஐயனே! உலர்ந்த கிளைகளை உடையவாகி, தேடி வந்தடைவார்க்கு, நிழல் தராமல், மரங்கள் வேருடன் அழிந்துபோகுமாறு கதிரவன் காய்கின்றான். அதனால் பட்ட மரங்கள் நிறைந்த பாலை வழிகளைக் கடந்து பொருள்தேடக் கருதுகின்றீர்களே! சற்றுக் கேளுங்கள். நம் தலைவி, மெல்லிய படுக்கையில், நின்னொடு துயில் செய்வாள் அன்றோ! அது போது நீவிர் சற்று நீங்கின், தனிமை உணர்வு தலைக்கொண்டு வருந்துவாள். அத்தகைய மெல்லியல்பு உடையாள், நின் பிரிவுக்கு ஆற்றாள் அன்றோ! பாவம்! உள்ளம் உடைவாள். உறுப்புக்கள் ஒளியிழந்து விடுவாள். இறந்து போவாளும்கூட. என்செய்வேன்?' என்று இயம்பினேன். அவர் போக்கொழிந்தார். இனி உன் உடல் பருக்கும். நெகிழ்ந்த வளைகள் இறுகும்...''

இனி இங்கு குறித்த பாடலின் சில வரிகளைக் காண்போம்.

'வறியவன் இளமைபோல் வாடிய சினையவாய்ச்,
சிறியவன் செல்வம்போல் சேர்ந்தார்க்கு நிழல் இன்றி,
யார் கண்ணும் இகழ்ந்து செய்த இசைகெட்டான் இறுதிபோல்
வேரொடு மரம்வெம்ப, விரிகதிர் தெறுதலின்
அலவுற்றுக் குடி கூவ, ஆறின்றிப் பொருள் வெஃகி
கொலை அஞ்சா வினைவரால் கோல் கோடியவன் நிழல்
உலகுபோல் உலறிய உயர்மர வெஞ்சுரம்.......
.........................................
நிலவுவேல் நெடுந்தகை, நீளிடைச்
செலவொழிந்தனனால் செறிகநின் வளையே.

பாலைக்கலி - 9

(சினை-கிளை, இகழ்ந்து-வரம்புமீறி, இசை-புகழ், தெறுதல்-காய்தல், அலவுற்று-வருந்தி, வினைவர்-அரசியல் அலுவலர், கோல் கோடியவன்-கொடுங்கோலன், உலறிய-காய்ந்த, நெடுத்தகை-மாண்புமிக்க தலைவன், செறிக-இறுகுக.)

மேலே தரப்பட்ட வரிகளில் புலவர் கொடிய பாலைவன வழியின் இயல் கூறுகின்றார். மரங்கள் வாடிய கொம்பர்களுடன் நிற்றலையும், நிழல் இன்மையையும், வேரும் தூரும் மற்றும் எல்லாம் வெப்பத்தால் வெந்திருத்தலையும் பிறவற்றையும் கூறவிழைகின்றார். அவற்றை உவமைகள் மூலம் புகட்ட விரும்புகின்றார். அவற்றின் மூலம் வாழ்வியல் நெறிக்கு இன்றியமையாதவற்றையும் கூறுகின்றார்.

பாருங்கள்! திருவள்ளுவர் திருக்குறளில் இருந்து ஒரு செய்தி. அருள் செய்தல் புலால் உண்பவர்களுக்கு இல்லை என்பது அது. அதனை ஓர் உவமை மூலம் விளக்கினார். பொருளை ஆளுதல் அதனைப் போற்றாதவர்க்கு - பேணாதவர்களுக்கு - இல்லை. அது போன்றது என்கிறார். எங்கள் பாலைக்கலி ஆசிரியர் கூறும் உவமைகளும் அத்தகையனவே! அவை வாழ்வியல் நெறியான வளஞ் செய்யும் தகையன.

சிந்திப்போம் செயற்படுவோம்

முதற்கண் வறியவன் இளமையை எடுத்துக் கொள்வோம். கையில் பணம் இல்லாதவன் வறியவன்; அவன் சிறப்பாக இளமைக் காலத்து இன்பம் எதனையும் அறியமாட்டான்; அவன் வாழ்நாள் கொன்னே கழியும் அன்றோ! பாவம் உண்பன உண்டு, உடுப்பன உடுத்து, கற்பனை கற்று, மகிழ்ந்தறியமாட்டான். எனவே இளமையில் வறுமை இன்னாது! இன்னாது!!

அடுத்து சிறியவன் செல்வத்தை எடுத்துக்கொள்ளுவோம். சிறியவன் வயதினாலோ, உருவத்தினாலோ சிறியவன் அல்லன்; குணத்தினாலே சிறியவன். விதிவசத்தால் அவன் செல்வத்தைப் பெற்றிருக்கலாம். அவன் அதனைப் பயன்படுத்தி உண்டும், மதிப்பை உயர்த்தியும், புகழை நிறுவியும், உறவினரை ஓம்பியும் வாழவேண்டும். அங்ஙனம் செய்யாதிருப்பின் அவனைப் பொருள் - செல்வத்தை - இழந்தான் என்றே கருதுதல் வேண்டும். செல்வத்தை ஈத்து உவக்கும் திண்ணிலை பெருமாதவத்தினாலேதான் ஆகுமெனவும் கூறுவர். 'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்' அன்றோ?

இனி யார் கண்ணும் இகந்து செய்து இசைகெட்டான் என்பது குறித்துச் சிறிது சிந்திப்போம். சிலர் இருக்கின்றார்கள். அவர்களுக்கு உற்றார், அயலார், பகைவர் என்று பலர் இருப்பரன்றோ! அவர்கள்தான் யார் கண்ணும் என்று குறிப்பிடப்பட்டவர்கள். இப்படி யாவரிடத்தும் உலக ஒழுக்கத்தைக் கடந்து தீது புரிவர். அங்ஙனம் தீது புரிவார்க்குப் புகழ் இல்லை. அம்மட்டோ! முடிவு காலத்து அவர்கள் அன்றி அவர்களது கிளையும் கூட அழிந்து போகும். ஆகவே நாம் என்றும் அத்துமீறி நடத்தல் ஆகாது; இயல்பலான செய்தல் ஆகாது.

மேலும், மன்னவன் ஒருவன், கொலைத் தொழிலுக்கு அஞ்சாத அமைச்சர் முதலியவர்களின் தொடர்பினாலே கோல் கோடி ஆட்சி புரிவானாகில் குடிசார் அவனைப் பழிதூற்றும் என்பதனையும் கூறத்தயங்கவில்லை.

எனவே, ஒவ்வொருவரும் இளமை நலம்பேணி எவரிடத்தும் அத்து மீறாமல் நடந்து, புகழ் பெருக்கி, நீதிவழி வாழ்ந்து, இன்பங் காண்போமாக!

(தொடரும்)

*சிகண்டியார்.*



# பக்திவேடம்

## பழையூர் கு.சி.சுந்தரம்பிள்ளை

"கூற்றாயினவாறு விலக்ககலீர். கொடுமை பல செய்தன நானறியேன்...."

பஞ்சபுராணத்தின் முதற்படியாகத் தேவாரம் ஓதிக்கொண்டிருந்தார் ஒரு அடியவர்.

அது ஓர் அம்மன் ஆலயம்.

அன்று வெள்ளிக்கிழமை.

சைவமக்களுக்கு முக்கியமான தினம். பெரும் திரளான அடியார்கள் ஆலயத்தின் மண்டபத்தில் வழிபாடு செலுத்திக் கொண்டிருந்தனர்.

பூசை முடிந்து பஞ்சாலாத்தி காட்டப்பட்ட பின்பு பஞ்சபுராணம் ஓதுதல் இடம்பெற்றது.

"ஐயா! நீர் செய்தது எல்லாம் பிழை"

ஆதிமூலத்தில் நின்றிருந்த பூசகர் திடுக்கிட்டுத் திரும்பி பார்த்தார். பஞ்சபுராணம் ஓதியவரின் குரலையும் விட ஓங்கி ஒலித்தது அக்குரல்.

திகைத்துப் போன அடியவர், தேவாரத்தின் அடுத்த அடியைப் படிப்பதை நிறுத்திவிட்டு, குரல் வந்த திசையை நோக்கினார். மண்டபத்தில் குழுமியிருந்து, தியானத்தில் லயித்திருந்த அடியவர்களும் தமது அமைதியைக் கெடுத்த குரலுக்குரிய வரை நோக்கினர்.

குரலுக்குரியவர் மாதவன். ஆதி மூலவாயிலில் நின்று பூசகரைப் பார்த்து எழுப்பிய கண்டன வார்த்தையே அது.

பூசகருக்குத் திகைப்பு மாறவில்லை.

"என்ன?" என்பது போல அமைதியுடன் அவரைப் பார்த்தார்.

ஏனைய அடியவர்களும் விவரம் அறியும் அவலுடன் மாதவன் நின்ற திசையை நோக்கினர்.

"நீர் தீபம் காட்டியது எல்லாம் பிழை. நான் எல்லாம் பார்த்துக் கொண்டுதான் நிண்டனான்." மாதவனின் குரல் தொடர்ந்து ஓங்கி ஒலித்தது.

"நான் சரியாய்த்தான் காட்டினனெண்டு நினைக்கிறன்." தயக்கத்துடன் பதிலளித்தார் பூசகர்.

"இல்லையில்லை. முந்திய பூசகர் தீபம் காட்டுறதுக்கும், நீர் காட்டுறதுக்கும் கனக்க வித்தியாசம் இருக்கு" தொடர்ந்து கடும் தொனியில் உரைத்தார் மாதவன்.

இந்தச் சலசலப்பில், தேவாரம் பாடிய அடியவர், அடுத்த அடி என்ன என்று மறந்து விட்டிருந்தார். அதனை நினைவுக்கும் கொண்டு வரப் பகீரதப் பிரயத்தனம் செய்தார்.

"கூற்றாயினவாறு விலக்கலீர். கொடுமை பல செய்தன நானறியேன்...."

திரும்பத் திரும்ப இந்த அடிகளை அவரது வாய் முணுமுணுத்தது. திடீர் தாக்கத்தினால் ஏற்பட்ட மனக்குழப்பம் காரணமாக அடுத்த அடி நினைவுக்கு வர மறுத்தது.

சிறிது தூரத்தில் நின்று இச்சம்பவங்களை அவதானித்த ஒருவர் அங்கே விரைந்து வந்தார்.

"பூசை எல்லாம் முடிஞ்சாப் பிறகு கதைக்கலாம். இப்பிடி வாருங்கோ" என மாதவனின் கையைப் பிடித்து அழைத்துச் சென்றார் அவர். ஆலயத்தின் உப தலைவர்களுள் ஒருவரான சாம்பசிவம்தான் அப்புதியவர்.

"ஏற்றாயடிக்கே இரவும் பகலும், பிரியாது வணங்குவன் எப்பொழுதும்..."

அடுத்த அடி என்ன என்று தடுமாறிக் கொண்டிருந்த, தேவாரம் ஓதிய அடியவர்க்கு அடுத்த அடிகளை நினைவூட்டி, நிலைமையைச் சமாளித்தார் அருகிலிருந்த மற்றொருவர்.

பஞ்சபுராணம் தொடர்ந்தது.

பூசகர் பூசைகளை நிறைவு செய்த பின்பு எல்லோருக்கும் விபூதி வழங்கிக் கொண்டு வந்தார்.

மண்டப வாயிலில் சாம்பசிவம், மாதவனுடன் உரையாடிக் கொண்டிருந்தார். அவர்களுக்கு விபூதி கொடுப்பதற்காக அவ்விடத்தை அணுகினார் பூசகர்.

"ஐயா, தீர்த்தமும் நீர்தான் குடுக்க வேணும்" என்றார் மாதவன் விபூதியை வாங்கிக் கொண்டே.

"ஓமோம், தெரியும், விபூதி கொடுத்து முடியக் கொடுக்கிறேன்." பதிலுக்குக் கூறிக் கொண்டே பூசகர் நகர்ந்தார்.

"அவருக்கு எல்லாம் தெரியும் தானே? ஏன் சத்தம் போடுறியள்?" என்றார் சாம்பசிவம்.

மாதவனைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் இவ்வாறு கூறினார் போலும்.

"உவர் புது ஆள். ஒண்டும் தெரியாது போல இருக்கு எல்லாம் சொல்லித்தான்செய்விக்க வேணும்.." இது மாதவனின் பதில்.

"அப்பிடிச் சொல்லப்படாது. அவர் பல 'வருஷம் அனுபவமுள்ளவர். இந்த ஆலயத்துக்குத்தான் இண்டைக்குப் புதிசா வந்திருக்கிறாரேயல்லாமல் ஒண்டும் தெரியாதவரல்ல" என விளக்கிச் கூறினார் சாம்பசிவம்.

ஆனால் அவருடைய கூற்றை ஏற்கும் நிலையில் மாதவன் இல்லை. தொடர்ந்து குறைகள் பல கூறிய படியே இருந்தார். பூசகர் தமது அலுவல்களைச் செவ்வனே முடித்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறினார்.

* * *

மாதவன் ஆலயத்தின் பரிபாலன சபை உறுப்பினர்களுள் ஒருவர். ஆனால் அந்த ஆலயத்தின் தர்மகர்த்தா போலவே அவருடைய செயற்பாடுகள் இருக்கும். தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற மமதையும் அவரிடம் மிகுந்து காணப்பட்டது.

இத்தனைக்கும் மாதவன் கல்வியறிவு மிகவும் குறைந்த ஒருவர். அன்றாடம் ஏதாவது ஈசெட்டு வியாபாரம் செய்து பிழைப்பவர். சமூகப் பண்பாடுகளில் தேர்ச்சியற்றவர்.

பலர் கூடியிருக்கும் இடங்களில் பலத்த சப்தத்துடன் ஏனையோருடன் உரையாடித்தான் அவ்விடத்தில் சமூகமளித்திருப்பதை எல்லோருக்கும் உணர்த்த முயல்வார். இதில் அவருக்கு ஓர் ஆத்மதிருப்தி.

தன்னை எல்லோரும் அவதானிக்க வேண்டும் என்பது அவருடைய விருப்பம். அதற்காக அவ்வப்போது குள்ளத்தனங்களும் செய்வார்.

பல பெரியவர்கள் இருந்து கலந்துரையாடும் இடத்திலே ஒரு சிறு பிள்ளை இருந்தால், அதனைச் சில வேளைகளில் அவர்கள் கவனிப்பதில்லை. தமது பேச்சுச் சுவாரசியத்தில் மூழ்கியிருப்பர்.

இந்தச் செயற்பாட்டினால், அப்பிள்ளை மிகுந்த பாதிப்பிற்குள்ளாகும். தன்னை ஒருவரும் கவனிக்கவில்லையே என்ற விரக்தி அதற்கு ஏற்படும். இப்படியான தருணத்தில் அது கடுமையான சிந்தனை வசப்படும். என்ன செய்து அப்பெரியவர்களின் கவனத்தைத் தன்பால் ஈர்க்கலாம் எனத் தீவிரமாக ஆலோசிக்கும்.

முடிவில் ஏதாவது குறும்புகள் செய்வதில் ஈடுபடும். தகரப் பேணிகளை தடியினால் அடித்துச் சப்தமெழுப்பும்; நாற்காலியைப் புரட்டிவிடும்; கீழே இருக்கும் பொருள்களைத் தூக்கி முற்றத்தில் வீசும்.

பிள்ளை இப்படி ஏதாவது செய்தவுடன் எல்லோரும் தமது செயற்பாடுகளைக் கைவிட்டு, அதன் குறும்புத்தனங்களை நிறுத்த முயல்வர். இப்படியான சந்தர்ப்பத்தில் மற்றவர்கள் எல்லோரினதும் கவனம் ஒரே நேரத்தில் பிள்ளையின் பக்கம் திசை திரும்பும்.

இப்போது பிள்ளைக்குப் பரம திருப்தி ஏற்படும். அதன் மனதில் ஒருவித வெற்றிப் பெருமிதம் உண்டாகும்.

இது போன்ற மனப்பான்மை வளர்ந்தவர்களிடமும் இருப்பதுண்டு. இதனை அவதானிப்பவர்கள், குழந்தைப் புத்தி என வர்ணிப்பர்.

இங்கே மாதவனின் குணாதியமும் இந்த வகையைச் சேர்ந்தது தான். அவ்வப்போது மிகவும் சிறுபிள்ளைத் தனமான செயல்களைச் செய்வார்.

இதுதவிர, ஒருவித முரட்டுத்தனமுடையவராகவும் இவர் இருந்தார். தான் நினைத்ததைச் செய்து முடிக்க வேண்டும் என்ற ஓர்மம் உள்ளவர். இதனால்அவ்வப்போது பிரச்சினைகளுக்கு உட்பட்ட சம்பவங்களும் உண்டு. ஆனால் அவற்றின் மூலம் தமது தவறுகளை உணர்ந்து திருந்தி நடக்க அவர் முற்பட்டது கிடையாது. போதிய கல்வியறிவு இல்லாமையே அதற்குக் காரணம்.

இவருடைய முரட்டுக் குணங்களை உணர்ந்தவர்கள் இவருடன் மோதிக் கொள்வதைத் தவிர்த்துக் கொள்வதில் தமது கவனத்தைச் செலுத்துவர். இவருக்குப் புத்திமதி கூறித்திருத்த முற்படுவதில்லை. தமது புத்திமதிகள் இவர்களின் மூளையில் நுழையா என்பது ஒருபுறம். ஏன் வீணாகப் பகையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற மனப்பான்மை மறுபுறம்.

இப்படியான நிலைப்பாடுகள் மாதவன் போன்றவர்களுக்கு பக்கபலமாக அமைந்து அவர்களின் குணாதிசயங்கள்தீவிரப்பட வழிவகுக்கின்றன. 'தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டம்' என்ற நிலையில் இவர்கள் செயற்படுவதைக் காணலாம்.

மாதவனின் நிலையும் இப்படிப்பட்டதுதான். ஆலயத்தில் தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர் போன்ற பல உத்தியோகத்தர்கள் இருக்கின்ற போதிலும், அவர்களுக்கெல்லாம் மேலாளர் போல இவர் நடந்து கொள்வதுண்டு. சில வேளைகளில் அந்த உத்தியோகத்தர்களையும் வாய்க்கு வந்தபடி ஏசிவிடுவார். முரடரான இவரிடம் ஏன் மோதித் தமது கௌரவத்தை இழக்கவேண்டும் என்று கருதி இப்படியான சந்தர்ப்பங்களில் இவ்வுத்தியோகத்தர்கள் ஒதுங்கி விடுவர். இது இவருக்கு மேலும் ஊக்கமளிப்பதாகவே அமைந்து வந்தது.

தலைவரைப் போலவும் செயலாளரைப் போலவும் இவர் நடந்து கொள்வார்.

பூசகரைக் கண்டிக்க இவர் முற்பட்டதும் இப்படியான மனப்பக்குவம் காரணமாகத்தான். உண்மையில் பூசகர் தவறு செய்தால் அதனை அவதானித்து, ஆவனசெய்ய வேண்டியது உத்தியோகத்தர்களிற்கு மட்டும் உள்ள பொறுப்பாகும். அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்காகத்தான் அடியவர்களினால் அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆலயத்தில் முன்பு கடமையாற்றி வந்த பூசகர் விலகி சென்றுவிட்டார். ஆகவே புதியவர் நியமிக்கப்பட்டார். அவர் அன்றுதான் தமது கடமையை ஆரம்பித்தார். அவரின் பூசை முறைகளை நோட்டமிட்டு விட்டுத்தான் மாதவன் அவர்மீது குற்றம் சாட்டினார்.

முந்திய பூசகர் விலகிச் செல்லவும் காரணமாக இருந்தது பெரும்பாலும் மாதவனின் நடவடிக்கைகள் தான்.

முன்பு விவரிக்கப்பட்ட காரணங்களை விட வேறு காரணங்களும் இருந்தன.

மாதவனிடம் மாடு ஒன்றும் ஆடுகள் சிலவும் இருந்தன. அவற்றை அவர் பகல் நேரத்தில் கட்டி வைப்பதில்லை. அவிழ்த்து விட்டு விடுவார்.

அடிக்கடி இவைகள் ஆலய மண்டபத்தினுள்ளே புகுந்து விடுவதுண்டு. மழை பொழிந்தால் அவற்றின் தங்குமிடம் ஆலய மண்டபம் தான். பூசகர் பூசை செய்ய வரும் போது அனேகமாக மண்டபத்தில் துர்நாற்றம் வீசும். மாடு, ஆடுகளின் மலம் சலங்களினால் மண்டபம் அபிஷேகம் செய்யப்பட்டமையே அதற்குக் காரணம்.

பூசகர் மண்டபத்தைக் கழுவித் துப்புரவு செய்த பின்புதான் சுவாமிக்கு அபிஷேகம் செய்து பூசை வழிபாடுகளை இயற்ற வேண்டிய நிர்ப்பந்தம் அடிக்கடி ஏற்பட்டது.

பூசகர் இதுபற்றி பரிபாலனச் சபை உத்தியோகத்தர்களுக்குப் பலமுறை முறைப்பாடு செய்தும் பயன்கிடைக்கவில்லை. ஆகவே அவர் விலகிச் சென்று விட்டார்.

புதியவரை நியமிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

தன்னால்தான் பூசகர் விலக நேரிட்டது என்பது மாதவனுக்குத் தெரியும். புதியவரால் தமக்கு இடையூறு, முறைப்பாடு, வராமல் தடுக்கும் ஒரு யுக்தியாக அவர் கையாண்ட தந்திரம்தான் பூசகர் மீது குற்றம் சுமத்தியமையாகும். ஆரம்பத்திலேயே மிரட்டி வைத்ததால் தமக்கு வசதி என நினைத்தார். இதுதான் அவரது தெய்வ பக்தி.

* * *

அன்று நல்ல மழை. பூசகர் வந்த போது மண்டபத்தினுள் மாடு.: ஆடுகள் நின்றதை அவதானித்தார். நிலத்தில் ஆங்காங்கே மாட்டின் சாணியும், ஆட்டுப் புழுக்கைகளும், சலமும் பரந்திருக்கக் கண்டார். மாடு, ஆடுகளை அங்கிருந்து துரத்தி விட்டு மண்டபத்தைக் கழுவிச் சுத்தம் செய்து பின்பு தமது அன்றாடக் கடமைகளை மேற்கொண்டார்.

அடுத்தநாளும் இதே கதை. பூசகருக்கு எரிச்சலாக இருந்தது. மாடு, ஆடுகளைப் பிடித்து மரங்களில் கட்டலாம் என்றால் அவற்றின் கழுத்துகளில் கயிறு இல்லை. உடனே திரும்பிச் சென்று தனது செலவில் கயிறு வாங்கி வந்து, அவற்றைப் பிடித்து மரங்களில் கட்டி விட்டுத் தமது அலுவல்களைக் கவனித்தார்.

பூசை முடிந்து பூசகர் புறப்படும் போது மாதவன் அங்கே தோன்றினார். மாடும், ஆடுகளும் பிடித்துக் கட்டப்பட்டிருந்ததைக் கண்டதும் அவரது கோபம் எல்லை கடந்தது.

"ஆர் இதுகளைப் பிடித்துக் கட்டினது?" என ஆத்திரத்துடன் பூசகரைப் பார்த்துக் கேட்டார்.

"நான்தான் கட்டினேன். ஏன்?" என்றார் பூசகர்.

"அதுகள் மேயட்டும் எண்டு தானே அவிழ்த்து விட்டனான். கட்டி வைச்சிட்டு நீரே சாப்பாடு போடப் போறீர்?"

"கோயில் மண்டபத்துக்குள்ளே வந்து நிண்டு எல்லாத்தையும் அசுத்தமாக்குதுகள். அதுதான் பிடிச்சுக் கட்டினன்."

"அப்படி வந்தால் கலைச்சு விடுகிறதுதானே?"

"கலைச்சுப்பாத்திட்டன். பிரயோசனமில்லை. ஒவ்வொரு நாளும் மண்டபத்தைக் கழுவ வேண்டியிருக்கு"

"அதுக்கென்ன கழுவுமன். உமக்கு சம்பளம் தாறம்தானே?"

"எனக்குச் சம்பளம் தாறது அம்மனுக்கு அபிஷேகம் செய்து பூசை செய்யத்தான். மண்டபம் கழுவுறதுக்கல்ல" பூசகரின் பதில் உறைப்பாக வந்தது.

மாதவனுக்கு ஆத்திரம் எல்லை கடந்து விட்டது.

"ஓகோ...அப்படியோ? அப்பநீர் விட்டுட்டுப் போம். நாங்கள் வேறை பூசகரைப் பார்ப்போம்" என்றார் மாதவன் முன்யோசனை இன்றி.

பூசகர் ஒரு புன்முறுவலை உதித்து விட்டு கூறினார்.

"நான் இங்கு நிரந்தரம் என்று நம்பிவரவில்லை. விலகிச் செல்ல அஞ்சவுமில்லை. உண்மையாகச் சொல்லப்போனால் உங்களைப் போன்றவர்கள் இருக்கும் இடத்தில் கடமை செய்யிறது எனக்குக் கஷ்டமான காரியம். தெய்வத்துக்குரியவைகளை முறைப்படி செய்ய முடியாது. அண்டைக்குப் பஞ்சபுராணம் படிக்கேக்கை இடைமறிச்சியள். அம்மனைக் கும்பிடுறதை விட்டுட்டு என்னிலை குற்றம் கண்டுபிடிக்கிறதிலை நேரத்தைச் செலவழிக்கிறீர்களே தவிர வழிபாடுகளிலேயே ஈடுபாடு செலுத்தவில்லை. நீங்கள் இங்கே வாறதும், பரிபாலனசபையில் அங்கம் வகிக்கிறதும் உங்களின்ரை சுயதேவைகளைப் பூர்த்தி செய்யிறதுக்காகத்தான். சேவை நோக்கமோ, பக்தியோ கிடையாது. நீங்கள் ஒரு போலி பக்தி வேடம் போட்டுக் கொண்டு உலாவுகிறீர்கள். நான் வந்த முதல் நாளிலேயே உங்களின்ரை சுபாவத்தைப் புரிந்து கொண்டன். பழைய பூசகர் விட்டுட்டுப் போனதும் உங்களாலேதான் எண்டதும் தெரியவந்தது. "உங்களுக்குச் சிரமம் தர நான் விரும்பேல்லை. எல்லாம் தெரிந்த நீங்களே பூசையையும் செய்யலாம்தானே? நாங்கள் எதுக்கு? அதையும் செய்து பாவமூட்டையைச் சுமந்து கொண்டு போங்கோ. இந்தாருங்கோ திறப்பு"

பூசகர் திறப்பை மாதவனின் கைகளுக்குள் திணித்து விட்டு அங்கிருந்து வெளியேறினார்.

அதிர்ச்சியுற்றமாதவன் திகைத்து நின்றார்.

(யாவும் கற்பனை)

# உங்கள் கவிதைகள்

ஏய் வாலிபனே!
கல்விச் சுமையும்
வறுமைச் சுமையும்
உன் வாழ்வை முடித்த
கதையாயிற்றோ?

- பிரசன்னா -
கந்தர்மடம்.

சகோதரனே!
வறுமையின் பிடியிலும்
வசந்தத்தைத் தேடி நீ
வளாகம் சென்றிருந்தாய்...
பகிடிவதை முகாமிலே
பழுதடைந்ததா உன்னுடல்?
சுதந்திரமாய் வாழவிட்டு
நீ சுருக்கிட்டுக் கொள்வதா?

- ந. நிஷா -
நிலாவில்

தற்கொலை என்பதோர்
தீர்வா தம்பி...?
சுற்றமும் சூழலும் இங்கு
உன்னையே நம்பி...
பெற்றவர் துடிக்கின்றார்
வெம்பி வெதும்பி...
கோழையாய் நீ ஒரு
கயிற்றிலே தொங்கி...
வறுமை என்பது
சிறுமையில்லையே!
வாழத் துடித்திருந்தால்
வழி இன்றிப் போகவில்லையே...!

- த. சாம்பவன் -

*மகனே!*
*பகிடிவதை என்று கூறி*
*படித்தவர்கள் செய்கின்ற*
*பாவச்செயல் பார்த்தாயா. ஓவியத்தில்?*
*வேண்டாம்*
*நீ பாமரனாகவே இருந்து விடு!*

- நிலவன் -

காலமெல்லாம்
கல்வியைச் சுமந்து
தேய்ந்து போனது
கால்கள் மட்டுமல்ல
செருப்புகளும்தான்.

மனம்விரும்பிக் கற்று -
மருத்துவ பீடம் சென்று -
கற்றலின் சுமையில்
எனக்குக் கிடைத்தது
தற்கொலைத் தீர்ப்பு.

மரணம் வாழ்வின் முடிவல்ல!
தற்கொலை ஒரு தீர்வும் அல்ல!

- புன்னையூர் தயாபரன் -

கல்வியே எதிர்காலத்தை
நிர்ணயிக்கும் என்றார்கள்!
ஆனால்....உனக்கு...
கல்வியே எதிர்காலத்தை
நிர்மூலம் ஆக்கியதோ?

- வே. மயூரன் -
மருதங்கேணி.

ஆதியிலே சென்றுவிட்ட உறவுகள்
பாதியிலே நின்றுவிட்ட படிப்புகள்
வீதியிலே அறுந்துவிட்ட செருப்புகளாய்
நாதியின்றித் தூக்கிலே தொங்குகின்றோம்

- குமார் -

மகனே உன்கதி இதுதானா?
உன் அறிவே உனக்கு எமன்தானா?
உலகே உனக்குப் பகைதானா? - உன்
உயிரே உனக்குச் சுமைதானா?!!!...

- யாழ். வதிரிவாசன் -

என்ன என்ன
கனவு கண்டோம் சோதரா...
ஸ்தெடஸ்கோப் மாட்டி
மூச்சினை பலருக்குப் பாதுகாத்து...
பூட்ஸ் காலொலிக்க...
நாலுபேர் பாராட்ட
இறுதியாய்க் கண்டதென்ன?

கயிறு மாட்டி -
மூச்சிறுக்கி -
பலர் அழ பறையொலிக்க -
நாலு பேர் தூக்க...
வேண்டாம் உன் நினைவு
கதைகேட்டு
கண்ணீரும்
கண்ணீர் விடும்!

- பண்ணாகை நாரதன் -

நண்பா;
உன் பிய்ந்த செருப்புக்களை
உதறி எறிந்துவிட்டு
கற்களும் முட்களும் நிறைந்த
உன் வாழ்க்கைப் பாதையில்
நீயெடுத்த ஏட்டுச் சுமையோடு
இரத்தம் சொட்டச் சொட்ட
இன்னும் கொஞ்சம் நடந்திருந்தால்
காலம் உனக்கொரு
கம்பளம் விரித்திருக்காதா?

- த. கிருபாகரன் -
அல்வாய்

முழுநிலவாய்
ஒளிதருவாய்
என்றிருந்தோம்!
வாழ்வில்
வெள்ளிவிழாக்கூட
காணாத வளர்பிறையே!
அமாவாசை -
அவசரமாய் ஏன்?
கல்வி கனத்ததா?
கனவு கசந்ததா?
நினைவு சுட்டதா?
நிஜமே வெறுத்ததா?

- செய்யுங்கோ -
நீர்வேலி

எம் மண்ணில்....
நிகழ்கின்ற கொலைகள்
போதாது என்று
தற்கொலைகளுமா?
தாங்காது பூமி!

- முத்துமாரி -

கற்ற கல்வி - நீ
கயிற்றில் தொங்கவா?
பெற்றவரும் சுற்றமும்
பேதலித்து ஏங்கவா?
உன் மூச்சை அடக்கிய
உறுத்திய சுமை எது?
உன் அறிவுக் கண்களால்
இறக்க முடியாததா அது?


- த. தர்மதா -

வறுமை,
என்னை வதைத்த போது
இலட்சியம்
என்னை வளர்த்தது - அந்த
இலட்சியமே சுமையான போது...
தூக்கு எனக்கு
சுகமாகிப் போனது!
வீழும் வரை தான்
பனைகளுக்குப் பயம்,
புயலினால்....

- த. சிவா -
அல்வை

ஏட்டுச் சுரைக்காய்
குசினி வந்து சேர்ந்திடாது
செயலாற்றல் அற்ற கல்வி
செம்மை வாழ்வைச் சேர்ந்திடாது!
அறுந்து போன பாதணியும்
அழகிய பாதம் சேர்ந்திடாது!
அர்த்தமற்ற இனவாதம்
அமைதியை இங்கு தந்திடாது!

- அகியோபி -
வதிரி



என் சுமை தாங்காது செருப்புத் தேய்ந்து அறுந்தது..!
புத்தகச் சுமை தாங்காது,
என் மனம் தேய்கிறது...

- எஸ். எஸ். கௌரி -
புத்தூர்

பள்ளிப்பருவம் கொண்டு
பாடசாலை சென்று வந்தோம்
கொண்டு வந்த இதயமதில்
கொள்ளை அன்பை சேர்த்துக் கொண்டோம்
பாதணியின் சுவடாவது
பதியப்படட்டும்

- சண் விநோ -
கல்வியங்காடு

மானிடமே....
கொடிது கொடிது
வறுமை கொடிது
அதனிலும் கொடிது
இளமையில் வறுமை - இது
'வாழ்வை, கல்வியை முடித்திட்ட வறுமை!

- நிசங்கன் -
சுண்டுக்குளி

சாவுகள் மலிந்துள்ள
சதிகாரர் ஆட்சியில் - நீ
சாதித்தது போதுமென்றோ
சாவையே தழுவிக் கொண்டாய்?

- எ. சுந்தரா -
யாழ்ப்பாணம்.

வழிகாட்ட
வேண்டியவன்
நீ
வழிமாறிப்
போனது
ஏனோ?

- பிரியங்கா -

புத்தகச் சுமையும்
ஏறத்தே ஏழ்மையும்"
அத்தனையோடு அறுந்த செருப்பு
எத்தனை துன்பங்கள்
அவற்றின் தீர்வுப்பொதிபோல்
கிடைத்தது தூக்குக்கயிறு!!

- ந. ஸ்ரீதரன் -
கிளிநொச்சி

வசந்த கால இடிமுழக்கம்
வாலிப வீணையில் முகாரி ராகம்
மன விகாரத்தின் வெடிச் சிதறல்கள்
முடிவு தெரியாமல்
முடிந்த கதை.
சகலதையும்
கைக்குள் அடக்கிக் கொண்ட
அறிவு விஞ்ஞானம் கூட
இவனை வாழ வைக்காததுதான்
பெரும் துன்பம்.

- கவிதா ஜெயப்பிரகாசம் -

கயிறு வாங்கக்
காசில்லாததால் தான்
கனபேர் தற்கொலை
செய்யாமலிருக்கிறார்கள்...

தண்ணீரில் விழுந்தவன் வாழ
நீச்சல் கல்வி கொடுங்கள்!
கண்ணீரில் விழுந்தவன் வாழ
உளவியல் கல்வி கொடுங்கள்!

- கதா -
யாழ். பல்கலைக்கழகம்

என்னவனே!
செருப்புக்கு ஊசி குத்தி
சட்டைக்குத் தினம்
சலவை செய்து
உலருமட்டும் காத்திருந்து
கல்வி விளக்கே
புத்தகத்துக்குக்
காசுதேடி
தோற்றுப்போன உன்
கனவு
இங்கு அநாதையாகிப்
போனதெடா!

- க. இந்து -
கொடிகாமம்.

கோழை அல்ல இவன்!
எனவே
தூக்கி விட்டானா?
அல்லது
தூக்கிலிட்டார்களா?


- க. யாழினி -

அறுந்த செருப்பு!
அதற்குப் 'பின்' குத்தி
அவலப்பட்டுப் படிப்பது
எத்தனை நாள்கள்!
அதனால் தூக்குக் கயிறே!
உன்னில் தூங்குகிறேன்!!

- லக்ஷி -
சுண்டுக்குளி.

# மௌன மொழி

## மௌன மொழி - 78




உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது. இதனை வரைந்தவர் பருத்தித்துறையைச் சேர்ந்த து. ஜெயதீபன்.

நீ வருவதற்காய்க் காத்திருந்தோம் - உன்
முகம் அறிவதற்காய்ப் பார்த்திருந்தோம்...
பூத்த முகம் வாடியதேன்? - உன்
பூ விழிகள் மூடியதேன்?

- முகுந்தன் -

பாட்டா கூறுகிறது...
நீ ஒரு புதிய மாணவன் என்று.
உனக்கு நடந்த மர்மம்...
என்ன என்று தெரியவில்லை!
மனதை நோக அடித்தவர்க்கு
நல்ல மருந்து கொடுத்தாயே?

- கம்பஸ் கும் -

சோதரனே சுமைகளும் சோகங்களும்
சொந்தமாகி விட்ட எம்வாழ்வில்
சோதனைகள் கண்டு துவளுவதா!
தூக்கில் தான் தொங்குவதா!!
சாதனைகள் படைக்க புத்தாயிரமாண்டு
வாவென அழைக்க நீயோ...

- மிதிலா -

நண்பா!
குப்பி விளக்கில்
கண் விழித்துப்படித்து
நீ இலட்சியத்தை
எட்டினாய்...
உன் தாய்
நீ சிகரங்களை நோக்கி
முன்னேறுவாய் எனக்
கண்ணிறைந்த
கனவுகளோடு காத்திருந்தாள்!
நீ முற்றுப்புள்ளியானாய்
இங்கே உனக்காக
பரிதாபப்பட சமூகம்
தயாராயில்லை - பதிலாக
பழிசொல்லத் தயாராயிருக்கிறது!
ஆதலால்
உன் ஆத்ம சாந்திக்காக
சில நிமிடங்கள்
மௌன அஞ்சலி செய்கிறேன்!

- சேரமான் -

# சோதிட சஞ்சீவி

| | | | |
|---|---|---|---|
| சூ | செவ் வியா. சனி | | |
| புத வெ | இராசிச்சக்கரம் | | ராகு |
| கே | | | சந் |
| | | | |

*மாற்றம்: மகம், சந்திரன் - சிங்கம் இராசியில் நிற்கும்.*

*போர்க்காலம் - குண்டுச்சத்தம் விட்டுவிட்டுக் கேட்டபடி இருக்கும். வெளிநாட்டுச் சமாதானப் பேச்சு சூடுபிடிக்கும். அரசியல் தலைவர்கள் மாறிமாறி பேச்சுக்கள் நடத்துவார்கள். மதத்தலைவர்கள் இறுதிநடவடிக்கைகள் செய்து பல மாற்றங்களைக் கொண்டுவர முயல்வார்கள். மதமா? அரசியலா? என மக்கள் பேசிக்கொள்ளுவார்கள். தொழிலாளர்கள் - மக்கள் உணர்ச்சிவசப் படுவர். உலக அரங்கில் இலங்கை பற்றிய பேச்சு எழும். இந்தியாவின் அழுத்தம் வடக்கு, தெற்கில் ஏற்படும். விஞ்ஞான ஆராய்ச்சிகள் - பொருளாதார மேம்பாடு வளரும். மேற்கு நாடுகளின் புதிய திட்டங்களால் கிழக்கு நாடுகளில் புதிய புரட்சிகள் வித்திடப்படும். அரசியல் தலைவர்கள் பேச்சு நடத்திவருவர். புதிய அணுகு முறையால் இந்தியா அதிக நன்மை அடையும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.*

# இந்த வார இராசி பலன்

**18-03-2000 இலிருந்து 24-03-2000 வரை**

## மேடம்

உள்ளத்தில் உறுதியில்லாதவர்கள் அடிக்கடி கோபப்படுவார்கள். இந்த உலகத்தில் பலதும் பத்தும் நடக்கத்தான் செய்யும். எதற்கும் தயாராக இருந்து செயற்பட்டுப்பாருங்கள்.வெற்றிகள் உங்கள் தொழில் ஸ்தானத்தில் தேடிஓடிவரும். மாமன் வீட்டிலிருந்து எதிர்ப்புக்கள் வரும். கட்டுப்பாட்டை மீறி நடந்து கஷ்டப் படுவீர்கள். எதிர்ப்பாலாருடன் கௌரவமாக நடந்து நல்ல பெயர் எடுக்கவும். சளி, கண்பார்வையில் பிரச்சினை, வயிற்றில் வருத்தம், வாய்வுத் தொல்லை என்பன இருக்கச் செய்யும். இடாம்பீகச் செலவுகள், வீட்டுச் செலவுகள் ஏற்படும். வாகனச் செலவு, பழுது ஏற்பட்டபடி இருக்கும். புடைவை, நகை, அச்சுவேலை செய்பவர்கள் கொம்பியூட்டர், செய்தித்துறையினர் நன்மை அடைவார்கள். அடிக்கடி களைப்பு வரும். சூட்டுக்காலம் எனவே அதிக பானவகைகளை உடல் கேட்கும். ஓய்வில்லாவிடில் சலிப்பு வந்து கோபிக்கலாம். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன், வியாழன், வெள்ளி.*

## இடபம்

சீதனத்தைவிடலாம் என யோசிக்கிறீர்களா? 'வேலைசெய்யும் பெண்ணும் வேண்டும். சுளையான பணமும் தேவை' எனச் சொல்லும் மனிதர்கள் நிறைய இருக்கிறார்கள். இவர்கள் துன்பப்படப் போகிறார்கள். எனவே நீங்கள் நிதானமாக இருங்கள். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் இருக்கும். ஆனால் நஷ்டப்படமாட்டீர்கள். அரச அதிகாரிகள் உதவி செய்வார்கள். 'சின்ன மீன் போட்டு - பெரிய மீன் பிடிக்கும் காலமாகும்.' பலமான செயல், தொழில், காரிய அனுகூலம் தேவையாயின் பணத்தைப் பார்க்க முடியுமா? கோவில் சேவை, பணச் செலவு, வாகனத்தால் செலவு அல்லது விழுந்து எழும்புவீர்கள். நெஞ்சுச்சளி, நரம்புவிறைப்பு, சலவருத்தம், தலைப்பாரம் வரலாம். தூரதேசச் செய்தி துயரத்தைத் தந்து விடும். பிரயாணத்துறை, குருத்துறை, சங்கீதத்துறை, செய்தித்துறையினர்கள், கொம்பியூட்டர் அச்சு தொழில் செய்பவர்கள் அதிக இலாபம் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள்,புதன், வியாழன்,வெள்ளி.*

## மிதுனம்

இப்பொழுதெல்லாம் வீட்டிற்கு வெளிச்சம் வருமுன் வீட்டை அடைந்துவிட வேண்டும். நாடே பதற்றத்தில் இயங்கும் பொழுது நாம் கண்டபடி வெளியில் திரிவதைக் கட்டுப்படுத்தவேண்டும். தொழில் ஸ்தானத்திலும் நீங்கள் கட்டுப்பாடாக இருக்க வேண்டும். அல்லது விசாரணைகள் வரலாம். மேலதிகாரிகளின் எதிர்ப்புக்கள் மனச்சஞ்சலத்தைக் கொடுக்கும். கண்கூச்சம், கலக்கம், வயிற்றுவலி, நெஞ்சுப் படபடப்பு, சளி வாய்வுத் தொல்லை என்பன கொடுக்கும். ஊர்விட்டு ஊருக்குப் போக மனமிருந்தாலும் இடமிருக்காது. போக்குவரத்துத்துறை, பத்திரிகைத்துறை, வியாபாரத்துறை போன்ற துறையினர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும். தூரதேசத்திலிருந்து துக்கச் செய்திகள் வர இடம் உண்டு.

*அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன், வியாழன், வெள்ளி.*

## கடகம்

கவர்ச்சி, இடாம்பீகப் பொருள்களைக் கண்டு ஏமாந்து விடக்கூடாது. அதனால் ஆபத்துக்கள் தேடிவரலாம். அதற்காக வடிவற்ற பொருள்களை வாங்க வேண்டுமா எனக் கேட்காதீர்கள். எதற்கும் அளவுடன் மனக்கருத்து வேற்றுமை வரலாம். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். வாய்வுத்தொல்லை, சலவருத்தம், காய்ச்சல், சளி என்பன கொடுக்கலாம். அரசியல்துறை, தொழில் நுட்பத்துறை, மருத்துவத் துறை, மரவேலைத்துறை போன்ற துறையினர்கள் அதிக இலாபங்கள் அடைவார்கள். வாகனங்களால் இழப்புகள் ஏற்பட இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள், புதன், வியாழன், வெள்ளி.*

## சிங்கம்

சிலர் நல்லதைச் சொன்னாலும், அவர்கள் தங்களை அழிவுப்பாதைக்குத்தான் செல்லச் சொல்வதாக எண்ணி பல துன்பங்களை அடைகிறார்கள். உங்களுக்குப் பொய் சொன்னாலும் அவர்களை நீங்கள் அளந்தறிந்து விடுவீர்கள். உங்கள் தொழில் ஸ்தானத்தில் உங்கள் மேலதிகாரிகளே உங்களிடம் ஆலோசனை கேட்பார்கள். நீங்கள் நிர்வாகச் செயற்திறன் மிக்கவர்கள். எதற்கும் அஞ்சாது செயற்பட்டபடி சென்று கொண்டிருப்பீர்கள். குடும்பத்தவர்களுடன் போராடவேண்டி வரலாம். திடீர், திடீரெனச் செலவுகள் அதிகரித்தபடி இருக்கும். உஷ்ணபீடைகள், சளித்தொல்லை, வாய்வுத் தொல்லை, வாய்வு அழுத்தம், கைகால்விறைப்பு என்பன ஏற்படும். சட்டத்துறை போக்குவரத்துத்துறை, விவசாயத்துறை, ஆசிரியத்துறையினர்களுக்கு மாற்றங்கள் ஏற்பட்டபடி இருக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி,புதன், வியாழன், வெள்ளி.*

## கன்னி

விவசாயிக்கு விளைச்சல் இல்லை. ஏற்றுமதித் தடை ஏன் வந்தது? கடற்றொழிலுக்கு கடலில் செல்லத் தடை - குடும்பம் பட்டினி - இது யார் செய்வது? இதற்கு விடிவு, முடிவு இல்லையா எனப் பல உள்ளங்கள் ஏங்கித் தவிப்பது போல நீங்களும் உங்கள் தொழில் ஸ்தானத்தில் பல கேள்விகளுக்கு விடை தேடப் போராடுவீர்கள். உதவிக்கு வருபவர்கள் உபத்திரவம் தராது பார்த்துக்கொள்ளுங்கள். எதற்கும் உத்தரவாதமற்ற நிலை. நாரிநோ, நெஞ்செரிப்பு, குடல் வருத்தங்கள், கைகால் விறைப்பு, பிடிப்பு என்பன ஏற்படலாம். இடமாற்றங்கள் நல்லதல்ல. கோயில் வேலைகள், அரசியல்துறை, நிர்வாகத்துறை, வியாபாரத்துறை, பத்திரிகைத்துறை, நீதித்துறை போன்ற துறையினர்கள் இலாபங்கள் அடைவார்கள். பொருள்கள் கொடுக்கல் வாங்கல்களில் நிதானமாக இல்லாவிடில் வீண் பழி கேட்க நேரிடலாம்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, புதன், வியாழன், வெள்ளி.*

## துலாம்

உங்கள் மனம் குழந்தையுள்ளம். நீங்கள் செய்யாத காரியங்களை - நீங்கள் செய்ததாகச் சிலர் முணுமுணுப்பர். அதற்காக எதிர்த்துப்போராடத் தயங்கமாட்டீர்கள். தொழில் ஸ்தானத்தில் தகுதிக்கு முதலிடம் கொடுப்பீர்கள். இது உங்கள் உள்ளத்திலிருந்துவரும் உறுதி நிலையாகும். குடும்பத்தில் சற்று சலசலப்பு ஏற்படலாம். அயலவர்களுடன் கொடுக்கல் வாங்கல் செய்யாது இருக்கவும். வாகனச்செலவு அல்லது இழப்பு ஏற்படலாம். உரசல் காயம், சளி, வாய்வுத்தொல்லை, நரம்புப் பலவீனம் என்பன இருக்கும். விருந்துகளால் வயிற்றுக் குழப்பம் வரலாம். இடமாற்றங்கள் நல்லதல்ல. உங்கள் ஆலோசனைகள் பலரை வழிநடத்தும். சுதந்திர மனப் போக்கு ஏற்படும். நீதித்துறை, பத்திரிகைத்துறை, போக்குவரத்துத் துறை போன்ற துறைகளில் நல்ல வருவாய் வரும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, புதன், வியாழன், வெள்ளி.*

## விருச்சிகம்

அரசு - எதிர்க்கட்சி யார்கையில் ஜனநாயகம்? எல்லோரும் உண்மைவாதிகளல்லர். இவர்கள் யாரை ஏமாற்றுகிறார்கள் எனச் சிந்திக்கிறீர்களா? பேசிப் பேசியே காலத்தைக் கடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அதனால் யார் தாக்கப்படுவது, யார் நன்மையடைவது என்பதைச் சிந்திக்கிறீர்களா? இதேபோல சிலர் உங்கள் தொழில் ஸ்தானத்தில் பேசிப் பேசிக் காலத்தைக் கழிப்பார்கள். இருக்கும் இடத்தில் ஆதரவு கிடைக்கும். நண்பர்கள், பெரியவர்கள் பல உதவிகள் செய்து தருவார்கள்.கிருமித்தாக்கம், நெஞ்சுநோ, சிரசு வருத்தங்கள், தொண்டைநோ, நாரிப்பிடிப்பு, கை கால் விறைப்பு வரலாம். பிரயாணக் களைப்பு சிலருக்கு ஏற்படும். அரசியல்துறை, ஆலயச் சேவை, குருத்துறை, போக்குவரத்துத்துறை. இரும்பு வேலை போன்ற துறையினர்கள் பலநன்மைகள், இலாபங்கள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, புதன், வெள்ளி.*

## தனுசு

கொம்பியூட்டர் காலம். அப்பா, அம்மாவுக்கு பயப்படாத பிள்ளைகள் உருவாகும் காலமாகும். அதனால் ஒரு சீரில்லாத, கட்டுப்பாடற்ற ஒரு சமுதாயம் உருவாக்கப்படும் என அதிகம் சிந்திக்கிறீர்களா? தொழில் ஸ்தானத்தில் வேகநிலை தோன்றி படபடப்புநிலை அடையும். குடும்பத்தினருடன் வாக்குவாதப்பட நேரிடலாம். இனஜனங்கள் நல்லதைச் சொல்லமாட்டார்கள். நெஞ்சு வருத்தம், வயிற்று வருத்தம், வாய்வுப்பிடிப்பு எனவந்து தொல்லை தரும். கட்டுமீறிய செலவு வந்தாலும் காரிய சித்திகள் ஏற்படும். பொய் பேசாதீர்கள். பிடிபட்டு மரியாதையீனப்படுவீர்கள். சட்டத்துறை, குருத்துறை, நிர்வாகத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள். இடமாற்றங்களைத் தவிர்த்து விடவும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி,திங்கள், புதன், வெள்ளி.*

## மகரம்

நேற்று விதைத்தேன்; இன்றைக்கு விளைந்தது. நாளைக்கு அறுவடை என காலவேகம் கட்டுமீறிச் செல்வதை யார்தடுப்பது? எல்லாம் கொம்பியூட்டர் மயம். மனித மனங்களின் செயற்பாடு குறைவு. அலட்சிய நிலை அதிகம். கட்சி மாறும் நிலை நீங்கள் யோசிப்பீர்கள். பிடியாததை விட்டு விட்டு பிடித்ததைச் செயற்படுத்துங்கள். தொழில் ஸ்தானத்தில் பதற்ற நிலை, மன மாற்றம் மாறி மாறி ஏற்பட்டபடி இருக்கும். குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும். சளி, நரம்புச்சோர்வு, வாய்வுத் தொல்லை என்பன ஏற்படும். மருந்துத்துறை, விவசாயத் துறை, தொழில்நுட்பத்துறை, கொம்பியூட்டர்த்துறையினர்கள் அதிக லாபம் அடைவார்கள். இடமாற்றம் நல்ல பலனைக்கொடுக்கும்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள், வியாழன்.*

## கும்பம்

உண்மைக்கு யார் மதிப்புக் கொடுக்கிறார்கள்? இதற்காக சிலர் பல பொய்களை சொல்லவேண்டி இருக்கிறது. தொழில் ஸ்தானத்தில் இப்படியான நிலைகள் ஏற்படும். பொருளால் வேதனை வரலாம். தூரதேசச் செய்திகளால் மனக்கலக்கம் ஏற்படும். வயிற்றில் வருத்தம், கைகால் வலி, நெஞ்சுப் படபடப்பு என்பன கொடுக்கும். குடும்பத்தில் எதிர்ப்பாலாருடன் அபிப்பிராய பேதங்கள் ஏற்படும். வீடு அல்லது வாகனச் செல்வுகள் அதிகரித்தபடி இருக்கும். தாயாருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட இடமுண்டு. கைகால் தாக்கம் வர இடமுண்டு. அரசியல்துறை, ரீ.வித்துறை, போக்குவரத்துத்துறை, செய்தித்துறை, கடல்துறை போன்ற துறைகளில் தொடர்பானவர்கள் அதிகலாபம் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள், வியாழன்.*

## மீனம்

பெரியவர்கள், சில சிறிய தப்புக்கள் செய்யாமல் பெரியவர்களாகி விடவில்லை. அதற்காக உங்கள் தொழில் ஸ்தானத்தில் தப்புக்கள் செய்யாதீர்கள். புதிய பல திட்டங்களை செயற்படுத்த முனைவீர்கள். ஆனால் எதிர்ப்புக்கள் வராது என எண்ண வேண்டாம். வெளிநாட்டிலிருந்து நற்செய்திகள் வந்து குடும்பத்தில் கொண்டாட்டம் கலகலப்பைக் கொடுக்கும். நரம்புச்சோர்வு, சளி, வாய்வு, வாதவிறைப்பு கொடுக்கும். சொத்து சுகம் பற்றி பேச்சுக்கள் வரும். எனவே நிதானமாக இருக்கவும். மாற்றங்களால் நன்மை ஏற்படும். நீதித்துறை, அரசியல் துறை, வியாபாரத்துறை கோயில் வேலைகள் போன்றவற்றில் நற்பலனும் இடமாற்றங்களும் அடைவீர்கள்.

*அதிர்ஷ்டநாள்:- சனி, திங்கள், வியாழன்*

**மகாதேவா ஜோதிடம்**

# முண்டமே நீபோய் முடங்கு

**உண்ட முலை மாய உண்ணா முலைகாட்டி**
**மண்டல மாளவந்த மாதரசி - பண் விடுத்து***
**பெண்டுகளைத் தூண்டி பிரபாவைப் பேசவைக்க**
**முண்டிபல போடும் முனைப்பு!**

**பெண்களைக் கெஞ்சுமிப் பேயணங்கு; எண்ணற்ற**
**கண்களைக் கிள்ளிய காலமதை - எண்ணுவளோ!**
**நுண்ணிய மூளை நுமக்கே உரித்தென**
**எண்ணியதால் வந்த இழிவு.**

**மண்ணுறிஞ்ச வந்தபெரும் மண்ணாசைப் போராக்கி**
**எண்ணிலாத் தீங்கெமக்கு ஏவியதை - உண்ணுவமோ!***
**பண்டை நெறிகாத்துப் பகைவெல்லும் பாடறிவோம்,**
**முண்டமே நீ போய் முடங்கு.**

**கண்ணகிதன் கோவலனைக் கத்தி பதம்பார்க்கப்**
**பெண்ணரசி தானுந்தன் திண்முலையைப் புண்ணாக்கி**
**விண்ணவர்கண் ணீர்சொரிய வெந்தழலில் வீசியதேன்?**
**எண்ணிப்பா ரேந்திழையே! இங்கு.**

**கோப்பெருந் தேவிக் குலத்திற் பிறந்த நாம்**
**ஆப்புனக்கு வைப்போ மடிபணியோம்; - யாப்பறிவோம்!**
**தோப்புக ளெங்கனுந் தோண்டிப் புதைக்குமுனைக்**
**காப்பதும் நங்கடனோ! காண்.**

*பண்விடுத்து - நிலைகுலைந்து
*உண்ணுவமோ - சீரணிப்பதோ(மறப்போமோ)

- அங்குசன் -

# தெளிவு

இரவு முற்றும் வேட்டொலி
இரசித்திடுமோ நம்செவி?
குரலெடுக்கும் குண்டடி!
குளறிடாதோ நிம்மதி?
சரசரக்கும் சருகுகள்;
'சாந்தி' போச்சு புற்றினுள்.
எரிசுமந்து எங்கள் மண்.
என்று ஆறும் வெந்த புண்?

குருவிக்கூட்டம் போல நாம்
குலவி வாழ்ந்த நாளினைச்
செரு புசித்துத்! தின்றதே!
சிறகை வெட்டிக் கொண்டதே
குருதி....., கங்கை போலவே
குடல் மிதக்கப் பொங்குதே!
தெருவைத் தீசுவைத்ததே!
சிதை......... உயிர் குடித்ததே!

தொடருகின்ற சண்டைகள்
தொடரின்; எங்கள் மண்ணடைகள்
உடையும் என்பதை உரை!
உணர்வை கொல்லும் வன்முறை!!
சுடலையான நம் சிறை
சுவர்க்கமாதல் எம்முறை?
புடங்கள் போடு உந்தனை!
புலர்வு காணும் நாள்வரை

- அருணன் -

# மனிதனைத் தாக்கும்

## பாகம் II


### பால் உறுப்புகளில் புற்று நோய்கள்

இந்த வகையில் ஆண்குறியில் ஏற்படும் புற்று நோய்களை முதலில் பார்ப்போம்.

**ஆண் குறியில் ஏற்படும் புற்று நோய்கள்:-**

கீழே தரப்பட்டுள்ள 3 நிலைகளும் ஆண்குறியில் புற்றுநோய் உருவாவதற்கான மூன்று முன் நிலைகளாகும்:-

1. ஆண்குறியின் முனையின் மேலணி (glans penis) வெண்ணிறமாகக் காணப்படல் (Leukoplakia). மேலணிகள் அதிகமாக வளர்ச்சியடைவதால் இந்நிலை தோன்றுகிறது. இது சாம்பல் வெண்ணிறம் கலந்த



ஆண்களில் ஏற்படும் புற்று நோய்கள்.

வர்ணப் பூச்சு போன்று காணப்படும். இந்நிலை நிச்சயமாக புற்றுநோயிற்கு முன்னான ஒரு நிலையாகும்.

2. நீண்டகாலமாக ஆண்குறியின் முன்தோலின் உட்புறம் அழற்சி (Eczema) போன்று செந்நிறத்தில் காணப்படல்.

3. ஆண்குறியின் முன்பகுதியில் இருண்ட செந்நிறமான தட்டையான அடையாளங்கள் காணப்படல்.

மேலே குறிப்பிட்டதுபோன்ற நிலைகள் காணப்படுமாயின் உடனடியாக வைத்தியரை அணுகி ஆரம்பத்திலேயே சிகிச்சைமுறைகளை மேற்கொள்ளல் நன்று.

அத்துடன் ஆண்குறியின் முனையில் வெளிவளர்ச்சிகள் காணப்படும். (சிலவேளைகளில் இவ்வளர்ச்சிகள் தொற்றுக்குள்ளாகி புண்களும் ஏற்படலாம்) அரைப்பகுதியில் நிணநீர் முடிச்சுகள் வீக்கமடைந்து காணப்படலாம்.

**விதையில் ஏற்படும் புற்றுநோய்**

ஆண்களில் ஏற்படும் புற்றுநோய்களில் ஒரு வீதம் விதைகளிலேயே ஏற்படுகின்றது. அத்துடன் இது இளவயதினிடையே ஏற்படும் ஒரு முக்கியமான புற்று நோயாகும். பொதுவாக 30முதல் 40 வயதெல்லைக்குள் ஏற்படுகின்றது.


செ.லோகேந்திரராஜ்
லோ.ராஜுகி
(யாழ். மருத்துவ பீட மாணவர்கள்)


விதைப் புற்று நோய் விதை இறக்கமடையாதவர்களில் (விதை விதைப்பையில் இல்லாதவர்களில்), விதைப்பையில் விதை உள்ளவர்களை விட 36 மடங்கு அதிகமாக ஏற்படுகின்றது. மற்றும் விதையில் ஏற்படும் காயங்கள், அடி, தொற்று நோய் போன்றவையும் புற்றநோயைத் தோற்றுவிக்கலாம் என ஊகங்கள் நிலவுகின்றன. இருப்பினும் விதைப் புற்று பரவலாகக் காணப்படும் ஒரு நோயல்ல.

*குணங்குறிகள்*

★ 80 வீதமானோரில் விதையில் ஆரம்பத்தில் கட்டி தோன்றுகின்றது. இதன் பருமன் படிப்படியாக அதிகரிக்கின்றது. சிலவேளைகளில் இக்கட்டி வேகமாக வளர்ச்சியடையலாம். இவை தன்மையில் மென்மையானதாக அல்லது கடினமானதாகக் காணப்படலாம்.

★ 35 முதல் 40 வீதமானோரில் விதையின் ஒரு பக்கத்தில் கடுமையான வலியும் வீக்கமும் காணப்படும். இந்நோ 30 முதல் 60 நிமிடங்களுக்கு நிலைத்திருக்கும். விதையை ஒரு அணை (Support) கொடுத்து வைத்திருப்பதன் மூலம் நோவைக் குறைக்கலாம்.

★ 40 வீதமானவர்களில் விதை, தொடைப்பகுதி என்பவற்றில் இழுப்பு போன்ற மெலிதான வலி காணப்படும். அத்துடன் விதையும் பருமனடைந்து கொண்டு செல்லும்.

இவற்றுடன் நோய்க்குள்ளானவர் சோர்வடைந்தும் மெலிந்தும் பசியற்றவராகவும் காணப்படுவார்.

சிலவேளைகளில் நிணநீர் முடிச்சுகள் வீக்கமடைந்தால் வயிற்றுநோ, மற்றும் கால்வீக்கம் என்பவையும் ஏற்படலாம்.

இவ்வாறு மேற்குறிப்பிட்ட குணங்குறிகள் காணப்பட்டால் தாமதமின்றி மேலும் புற்றுநோய் பரவ இடமளிக்காது சிகிச்சை பெறல் வேண்டும்.

**முன்னிற்கும் சுரப்பியில் புற்றுநோய்**

ஆண்களில் ஏற்படும் புற்று நோய்களில் முன்னிற்கும் சுரப்பியில் ஏற்படும் புற்றுநோய் 3ஆவது இடத்தைப் பெறுகின்றது. 50 வயதிற்கு மேற்பட்ட ஆண்களில் 'மூன்று வீதமானவர்கள் இப்புற்று நோயினால் பாதிக்கப்படுவதாக அறியப்பட்டுள்ளது. இப்புற்றுநோய் 65 முதல் 75 வயதிற்கு இடைப்பட்ட ஆண்களிலேயே பொதுவாக ஏற்படுகின்றது. இதன்போது 75 வீதமானவர்களில் இச்சுரப்பியின் பின்புறமே பாதிக்கப்படுகிறது. இப்புற்று நோயினால் இப்பகுதியிலுள்ள ஏனைய உள் அங்கங்களும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. [உதாரணம் நேர்குடல் (Rectum) மற்றும் ஆணுறுப்பு......]

*குணங்குறிகள்:-*

இந்நோயின் போது-

★ அடிக்கடி சிறுநீர் கழித்தல்.

★ மீண்டும் மீண்டும் சிறிய அளவில் சிறுநீர் வெளியேற்றல்.

★ சிறுநீர் வெளியேறல் தாமதமாக இருத்தல்.

★ குறைந்த வேகத்தில் சிறுநீர் பாய்தல்.

★ சில வேளைகளில் சிறுநீருடன் குருதி வெளியேறுதல்.

அத்துடன் இந்நோயினால் பசியின்மை, தலையிடி, தாகம், சோர்வு என்பனவும் ஏற்படலாம்.

மேற்குறிப்பிட்ட குணங்குறிகள் ஏற்படுமிடத்து உடனடியாக வைத்தியரிடம் சிகிச்சை பெறல் நல்லது.

### ஏனையவை

**விதை முறுக்கமடைதல்** (Tortion of testis)

பொதுவாக விதையானது விதையைச் சுற்றிக் காணப்படும் மென்சவ்வினுள் (Tunica vaginalis) இணைக்கப்பட்டுக் காணப்படும். ஆனால் இவ்வாறு இணைக்கப்படாமல் இம்மென்சவ்வானது விதையை மூடிக்காணப்படும் சந்தர்ப்பங்களில் (இந்நிலையில் விதையானது தொங்கிய நிலையில் மென்சவ்வினுள் காணப்படும்.) விதையானது இலகுவாக முறுக்கமடைகின்றது.

இது கூடுதலாக பாடசாலை செல்லும் வயதினிடையே ஏற்படுகின்றது. விளையாட்டில் ஈடுபட்டிருக்கும்போது அல்லது துவிச்சக்கர வண்டியிலிருந்து பாயும்போது விதையில் அடிபடுதல், மற்றும் வேறுசிறு அடிகாயங்களினாலும் ஏற்படலாம்.

*குணங்குறிகள்:-*

இதன்போது முக்கியமாக-

★ விதைபகுதி, அரை என்பவற்றில் தாங்கமுடியாத வலி ஏற்படும். இவ்வலி சடுதியாகத் தோன்றி பின்னர் வயிற்றின் நடுப்பகுதியிற்கும் பரவலாம்.

★ பொதுவாக குமட்டல்,வாந்தி என்பனவும் ஏற்படலாம்.

சிறுபிள்ளைகளில் ஏற்படும்போது அவர்கள் அமைதியற்றவர்களாகவும் சாப்பாட்டில் மனமில்லாதவர்களாகவும் காணப்படுவர்.

விதைப்பை சிலவேளைகளில் வீக்கமடைந்து காணப்படலாம்.

சில சந்தர்ப்பங்களில் சிலருக்கு இவ்வலி ஏற்பட்டு சிறிதுநேரத்தின் பின் தாமாகக் குறையலாம். (முறுக்கம் தாமாக சிலவேளைகளில் எடுபட்டுவிடும்) ஆனாலும் பாரிய வலி ஏற்படும்போது தாமதிக்காது உடனடியாக வைத்திய உதவியை நாட வேண்டும். ஏனெனில் சில மணித்தியாலங்களில் இம்முறுக்கானது மீண்டும் பழைய நிலையை அடையாது விட்டால் விதைக்கு குருதி செல்லுதல் தடைப்பட்டு சிலமணி நேரங்களிலேயே விதைக்கலங்கள் இறந்துவிடும். ஆகவே தாமதமானால் விதையை அகற்றவேண்டிய நிர்ப்பந்தமே ஏற்படும். பலர் இது பற்றிய போதிய அறிவின்மையால் நீண்ட நேரங்கழித்து வைத்தியசாலைகளில் காட்டுகின்றனர். இவ்வாறு அனுமதிக்கப்பட்ட பல இளைஞர்களின் விதைகள் யாழ் போதனாவைத்தியசாலையில் வேறுவழியின்றி அகற்றப்பட்டுள்ளன. எனவே இந்நிலையைத் தவிர்க்க உடனடியாக வைத்திய உதவியை நாடவேண்டும்.

**ஓதம்/விதை வீக்கமடைதல்** (Hydrocele)

விதையைச்சுற்றியுள்ள ஒரு மென்சவ்வினுள் (Tunica vaginalis) கூடுதலான அளவில் பாய்மப் பொருள் தேங்குவதனால் விதைப்பை வீக்கமடைந்து காணப்படும். இது "ஓதம்" என தமிழில் அழைக்கப்படும். இது முதற்காரணிகள் (Primary factors), துணைக்காரணிகள்(Secondary factos) என இரு வகையினால் ஏற்படலாம்.

முதற்காரணிகளை ஆராய்ந்தால் அது பெரும்பாலும் வயதுவந்தவர்களிலேயே ஏற்படுகின்றது. விதைக்குப் போதியளவு நிணநீர்க்கான்கள் இல்லாமையால் இந்நிலை ஏற்படுகின்றது. இங்கு விதையைச்சூழ மஞ்சள் நிறத்திரவம் காணப்படும். அத்துடன் மென்சவ்வும் உஷ்ணமடைந்து காணப்படும். இது சிகிச்சையளிக்கப்படாது விட்டால் காயங்கள் ஏற்படும்போது திரவம் வெளியேறுவதுடன் குருதியும் வெளியேற்றப்படலாம் (Haimatocoele).



ஓதம் அல்லது விதை வீக்கமடைதல்

துணைக்காரணிகளை நோக்கினால் இது பின்வருவனவற்றால் ஏற்படலாம்:-

★ விதைஅல்லது விதைமேற்றிணிவு அழற்சிகள் அல்லது புதிய வளர்ச்சிகள்

★ காயங்கள்

★ மேகநோய்

★ சூலைக்கட்டு வைரசுத் தொற்று

★ கொனோரியா

★ புற்றுநோய்

★ யானைக்கால் நோய்.

*குணங்குறிகள்:-*

இதன்போது விதைப்பை மென்மையானதாகவும், வீக்கமடைந்ததாகவும் காணப்படும். இவ்வீக்கம் விதைப்பைப் பகுதியில் மட்டுமே காணப்படும். விதைப்பை வரவரப் பருமனடைந்து கொண்டு செல்லும். அத்துடன் இதனால் சமூகப்பிரச்சினைகளையும் எதிர்நோக்கவேண்டி

(XV ஆம் பக்கம் பார்க்க)

# பால் உறுப்பு நோய்கள்

---

குறுங்காவியம்



# பசிப் பிணி மருத்துவன்

-புலவர் ம.பார்வதிநாதசிவம்-

*அங்கம்:- ஒன்று*

தீங்கனியைப் புவித்தலத்தோர் உண்ண நல்கும்
சிறப்புடைய பழமரத்தின் செயலைப் போற்றி
ஆங்கவற்றின் மேனியிலே ஞாயி றென்பான்
அன்புடனே பொன்னாடை போர்த்துங்காலை!
பூங்கொடிகள் விழிமலர்ந்தே இதனைக் கண்டு
புவித்தலத்தில் மிகமகிழ்ச்சி கொள்ளும்காலை!
தீங்குயிலும் பிறபுள்ளும் இசைச் செல்வத்தின்
சிறப்பதனைக் கூறுகின்ற இனிய காலை!

அவ்வினிய காலையிலே பண்ணன் என்னும்
அருளுடையோன் அறிவுடையோன் ஈகை வல்லோன்
செவ்வியதாம் சிறந்ததுவாம் குதிரை ஏறிச்
செல்கின்றான் வீதியிலே! வீதியோரம்
இவ்வுலகின் அழகெல்லாம் மலர்களாக
இலங்குவதைக் கண்டே நல்இன்பம் கொண்டான்!
எவ்வெவர்க்கும் நன்மையே ஆற்றும் மேலோன்!
ஈத்துவக்கும் இன்பத்தை நுகரும் நல்லோன்!

ஆண்டவனைக் கண்ணாரக் கண்டு விட்ட
அடியவர்தம் முகம் போல மலரும் பூவும்
வேண்டியவன் வரக்கண்ட காதற் பெண்ணின்
மிக அழகுமுகம் போல மலரும் பூவும்
தூண்டுமொரு பசியுடைய சேய்க்குச் சோற்றை
ஊட்டுகின்ற தாய்முகம் போல் மலரும் பூவும்
ஆண்டுவரும் வழியெல்லாம் மலரக் கண்டான்
அன்பார்ந்த பண்ணன் உளம் மலரலானான்!

'கண்ணுக்கு விருந்தளிக்கும் வண்டு வந்தால்
கருத்துடனே தேனளிக்கும் அழகு வாய்ந்த
பெண்ணுக்குக் கூந்தலிலே அழகு சேர்க்கும்
பெரும் பொருளாம் இறைவனடிதானும் சேரும்
மண்ணுக்குள் படைப்புகளில் மலரைப் போல
வாய்ப்புடைய பிறவிகளும் உண்டோ?' என்றே
எண்ணிக் கொண்டே பண்ணன் செல்லலானான்
இதயமெல்லாம் அன்பொன்றே விளங்கும் பண்பன்.

நாட்டுக்குத் தோள் கொடுத்தான்! வறியோர் தங்கள்
நலிவுக்குக் கரம் கொடுத்தான்! புலவர் பாடும்
பாட்டுக்குப் புகழ் கொடுத்தான்! திக்கற்றோர்க்குப்
பரந்த பெரும் நிழலானான்! மூவேந்தர் தம்
ஆட்சிக்கும் இல்லாத பெயரைப் பெற்றான்!
அறம் தெரிந்தான் என உலகோர் போற்றப் பெற்றான்
ஏட்டுக்குப் பொருளானான்! எனினும் மற்றோர்
எல்லோர்க்கும் பணிகின்ற பண்பு பெற்றான்!

இல்லையென்றோர்க்கில்லை யென்னா தீயும் வள்ளல்
இதயமெலாம் கருணைமழை பொழியும் வள்ளல்
அல்லலுற்றோர்க் கென்றென்றும் உதவும் வள்ளல்
அன்புபொதி இன்சொல்லே வழங்கும் வள்ளல்
தொல்லுலக அறநூல்கள் சொல்வதான
தூநெறியில் என்றென்றும் விலகா வள்ளல்
முல்லையூர் என்கின்ற கிராமத் தோரை
முழுவிருப்பால் பார்ப்பதற்குச் செல்லுகின்றான்!

பண்ணவள்ளல் வருகின்றான் என்ற செய்தி
பாகாகத் தேனாக இனித்ததாலே
திண்ணியராம் முல்லைநகர் மக்கள் எல்லாம்
திரண்டார்கள்! வள்ளலினை வரவேற்றார்கள்!
'கண்ணனையீர் உமைக்காண இன்று வந்தேன்
காலமெலலாம் உழைக்கும் உமை வாழத்துகின்றேன்
இன்னுமுங்கள் சிற்றூரின் உயர்வுக்காக
என்னபணி யான் செய்யவேண்டும்' என்றான்!

'வள்ளலே நாம்வாழ நிலத்தை ஈந்தீர்!
வளமாக்கி வயலாக்க நிதியும் ஈந்தீர்!
கொள்ளரிய ஏர்,எருதும் விதைக்கும் நெல்லும்
கொடுத்துதவி புரிந்திட்டீர்! இன்று நாமும்
பிள்ளைகளும் குறையேதும் இல்லாராகிப்
பசிப்பிணியில் விடுபட்டே வாழுகின்றோம்!
வள்ளலே இதுபோதும்' என்றார் மக்கள்
மனமகிழ்ந்து பண்ணனவன் சொல்லுகின்றான்

'என்னருமை மக்களே! பசியை வெல்ல
எல்லோரும் உழைத்தீர்கள் மகிழ்ச்சி உற்றேன்
இன்னுமொரு பசி உண்டே! அதையும் நீங்கள்
இக்கணமே வெல்லுவதற்கு முயல்தல் வேண்டும்
மன்னுயிர்க்குப் புவியினிலே பசி ஒன்றாகும்
மானிடர்க்கோ என்றென்றும் பசி இரண்டாம்
துன்னுமுயர் கல்வியினைப் பெறுவோமென்று
துடிக்கின்ற அறிவென்னும் பசியதாகும்.

பசிப்பிணியை வென்றாலும் கல்வி என்னும்
பகரரிய விழிபெறார் குருடர் அன்றோ?
நசிப்பதற்கும் நலிவதற்கும் பல்லோர் வாழ்வு
நைந்திற்றுப் போவதற்கும் கல்வி என்னும்
இசைப்பொருளை எய்தாமை என்ற ஒன்றே
இருக்கின்ற காரணம் நீர்அறிதல் வேண்டும்
திசைதோறும் உமைமதிக்க வேண்டும் என்றால்
திகழ் கல்விச் செல்வம் நீர் அடைதல்வேண்டும்.

(தொடரும்)

# பதற்றமான சூழ்நிலையில் தாய்வானில் இன்று ஜனாதிபதித் தேர்தல்!

தாய்வானில் இன்று ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகிறது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் கோமிங்டான் தேசியவாதிகள் சீனப் பெரும் பூமியிலிருந்து வெளியேறித் தாய்வானில் ஆட்சி அமைத்த பின்னர் நடைபெறும் ஜனநாயக ரீதியிலான இரண்டாவது ஜனாதிபதித் தேர்தல் இது ஆகும். 1996 ஆம் ஆண்டு சீனாவின் தாக்குதல் பயமுறுத்தல்களுக்கு மத்தியில் தாய்வான் தனது முதலாவது ஜனாதிபதித் தேர்தலை நடத்தியது. அப்பொழுது சீனா, தாய்வான் நீரிணைப் பகுதியில் தனது ஏவுகணைப் பரிசோதனையை நடத்தியதுடன் தாய்வானை எதிர்நோக்கி



தேர்தலில் ஆளும் கட்சி வேட்பாளராகக் போட்டியிடும் லின் ஷான்.

யுள்ள சீனக் கரையில் பெரும் இராணுவ ஒத்திகையையும் நடத்தியது. இந்த அச்சுறுத்தலை முறியடிப்பதற்காக அமெரிக்கா தனது விமானம் தாங்கிக் கப்பல்களைத் தாய்வான் நீரிணைப் பகுதிக்கு நகர்த்த வேண்டியிருந்தது.

### பதற்றமான சூழ்நிலை

இன்றைய தேர்தலும் பதற்றமான சூழ்நிலையிலேயே நடைபெறுகிறது. ஒரு மாதத்துக்கு முன்னர் சீனா பதினொராயிரம் சொற்கள் அடங்கிய வெள்ளை அறிக்கை ஒன்றை வெளியிட்டது. சீனா - தாய்வான் இணைப்புப் பேச்சுவார்த்தையைத் தாய்வான் ஆரம்பிக்கவேண்டும் என்றும், தாய்வான் இழுத்தடித்தால் தாக்குதல் நடத்தப்போவதாகவும் வெள்ளை அறிக்கையில் எச்சரிக்கப்பட்டிருந்தது.

1949 ஆம் ஆண்டில் தாய்வானில் கோமிங்டான் தேசியவாதிகள் ஆட்சி அமைத்த பின்னர் தாய்வானுக்கு எதிரான மிகப்பெரிய அச்சுறுத்தலாக இந்த வெள்ளை அறிக்கை கருதப்படுகின்றது. தாய்வான் சீனாவின் ஒரு பிரிக்க முடியாத மாகாணம் என்பதைச் சீனா வலியுறுத்தி வருகிறது. ஹொங்கொங்கில் தற்பொழுது சீனாவினால் அமுல் செய்யப்பட்டுவரும் "ஒருநாடு - இரு நிர்வாகங்கள்" என்ற கொள்கையைத் தாய்வானிலும் அமுல் செய்யலாம் என்று சீனா நம்புகிறது.

### கம்யூனிஸ்ட் புரட்சி

1949 ஆம் ஆண்டு சீனாவில் கம்யூனிஸ்ட் புரட்சி ஏற்பட்டது. அப்பொழுது ஆட்சியில் இருந்தவர் கோமிங்டான் கட்சியைச் சேர்ந்த சியாங்கே - ஷேக். மாஸேதுங் தலைமையில் கம்யூனிஸ்ட் படைகள் சீனப் பெரும் பூமியைக் கைப்பற்றிய சமயம் சியாங்கே - ஷேக்கும் அவரது ஆதரவுப் படைகளும் சீனாவின் ஒரு மாகாணமாக இருந்த போர்மோசாவுக்குத் தப்பிவந்து அங்கு ஆட்சியை அமைத்தனர்.

அதுவே பின்னர் தாய்வான் என்று பெயர் மாற்றம் பெற்றது. அமெரிக்காவின் முழு ஆதரவு சியாங்கே ஷேக்குக்கு இருந்தது. கம்யூனிஸ்ட் படைகள் தாய்வானைக் கைப்பற்ற முயன்ற சமயம் அமெரிக்கா தனது கடற்படையைச் சீனாவுக்கும் தாய்வானுக்கும் இடையிலான நீரிணைக்கு நகர்த்தியது.

தாய்வான் அன்றிலிருந்து இன்று வரை அமெரிக்க ஆதரவு நாடாகவே இருந்து வருகிறது. ஆரம்பத்தில் தாய்வானே உண்மையான சீனா என்று அமெரிக்கா கூறிவந்தது. ஐக்கிய நாடுகள் சபையிலும் சீனாவுக்கு இடம் கிடைக்கவில்லை. தாய்வான் பிரதிநிதியே சீனப் பிரதிநிதியாக அங்கீகரிக்கப்பட்டார். தாய்வான் தேசிய சீனா என்று அழைக்கப்பட்டது. ஐ.நா. பாதுகாப்புச் சபையில் வீட்டோ அதிகாரம் உடைய ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளில் ஒன்றாகத் தாய்வானும் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

### நிக்ஸனின் பதவிக் காலத்தில் ஏற்பட்ட மாற்றம்

ஜனநாயகத்தைக் கேலிக் கூத்தாக்கும் அமெரிக்காவின் இந்த அணுகுமுறை நிக்ஸனின் பதவிக் காலத்தில் 1971 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது. அமெரிக்காவின் அங்கீகாரம் சீனாவுக்குக் கிடைத்தது. 1972 இல் நிக்ஸனின் சீன விஜயத்துடன் அமெரிக்க - சீன உறவில் புதிய அத்தியாயம் ஆரம்பித்து வைக் கப்பட்டது. தாய்வான் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இருந்து வெளியேற்றப்பட்டு அதன் இடம் சீனாவுக்கு வழங்கப்பட்டது.

தாய்வான் பிரச்சினை தொடர்பாக அமெரிக்கா தற்பொழுது இரட்டைவேடம் போட்டுவருகிறது. ஒரே சீனக் கொள்கையை அமெரிக்கா ஆதரிக்கிறது. அதாவது சீனாவும்

## சுதந்திர பிரகடனம் செய்தால் சீனா தாக்குதல் நடத்தும்

தாய்வானும் ஒரே நாடு என்பதை அமெரிக்கா கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ளது. அதே சமயம் தாய்வானுக்கு ஆயுத உதவிகளையும் வழங்கி வருகிறது.

சீனா - தாய்வான் இணைப்பு சமாதான முறையில் இடம்பெற வேண்டும் என்பதே அமெரிக்காவின் தற்போதைய கொள்கை. ஆனால் கடந்த ஐம்பது ஆண்டுகளாக அமெரிக்காவின் செல்வாக்கில் ஊறிப் போன தாய்வான் தலைவர்கள்

உலக உலா
என்.பி.சீலன்

இணைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். தாய்வான் மக்களின் நிலைமையும் இதுதான்.

சீனாவில் ஜனநாயக ஆட்சி ஏற்படும் பட்சத்தில் மட்டுமே இணைப்புச் சாத்தியம் என்று தாய்வான் அரசியல்வாதிகள் கருதுகின்றனர். 1989 இல் சீனாவில் ஆட்சியாளர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட மாணவர் போராட்டங்கள் மிகவும் மோசமான முறையில் அடக்கப்பட்டன. 1990களில் அமெரிக்க - சீன உறவு மிகமோசமான அளவில் பாதிக்கப்படுவதற்கு இது முக்கிய காரணமாக இருந்தது.

### சீனாவுடன் நல்லுறவு கொள்ள ஆர்வம்

இன்று தாய்வானில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மூன்று பிரதான வேட்பாளர்களுமே சீனாவுடன் நல்லுறவை வைத்துக் கொள்ளப் போவதாக அறிவித்துள்ளனர். ஆனால் ஒருவராவது இணைப்புக்கு ஆதரவு இல்லை. இணைப்பை ஆதரிக்கும் வேட்பாளர் வெற்றி பெறவும் வாய்ப்பு இல்லை. சீனாவுடன் 30 வருடகால சமாதான ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும் என்று ஒரு வேட்பாளர் கூறுகிறார். சீனாவுடன் நேரடி கடல், விமானத் தொடர்புகள் தேவை என்று மற்றும் ஒரு வேட்பாளர் சொல்கிறார். தேர்தலில் போட்டியிடும் மூன்று பிரதான வேட்பாளர்களில் ஜனநாயக முன்னேற்றக் கட்சி சார்பாகப் போட்டியிடும் சென் சூய்-பியன் (Chen Shui-Bian) மட்டுமே தாய்வானின் சுதந்திரத்துக்குக் கூடுதலாகக் குரல் கொடுத்து வருகிறார். ஆனால் இவர் கூடச் சீன ஜனாதிபதி ஜியாங் ஷெமினை ஹொங்கொங்கில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்கிறார். ஒரு தலைப்பட்சமாகச் சுதந்திரப் பிரகடனம் செய்யப் போவதாக இவர் இன்னும் தெரிவிக்கவில்லை.

ஆகவே இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் உள்ள முக்கிய அம்சம், சீனாவைப் பகைக்காமல் வாழ வேண்டும் என்ற கொள்கை பெரும்பாலும் முழு வேட்பாளர்களினாலும் முன்வைக்கப்பட்டுள்ளது என்பதே.

### தாய்வானை எச்சரிக்கும் சீனாவின அறிக்கை

1949 ஆம் ஆண்டில் சியாங்கே - ஷேக் தலைமையில் சீனத் தேசியவாதிகள் தாய்வானில் ஆட்சி அமைத்த பின்னர், தாய்வான் சுதந்திரப் பிரகடனம் செய்யும் பட்சத்திலேயே சீனத் தாக்குதல் அபாயம் இருந்து வந்தது. தாய்வானில் வெளிநாட்டுப் படைகள் இருப்பதை அனுமதிக்கப்போவதில்லை என்றும் சீனா எச்சரித்து வந்தது. ஆகப் பிந்திய சீன எச்சரிக்கையாகவே கடந்த மாதம் வெளியிட்ட வெள்ளை அறிக்கை கருதப்படுகின்றது.

அதுவும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வாக்களிக்கவுள்ள சமயம் சீனா இந்த வெள்ளை அறிக்கையை வெளியிட்டிருப்பது வாக்காளர்களுக்கு ஓர் எச்சரிக்கையாகக் கருதப்படுகிறது. பெய்ஜிங்கில் உள்ள தாய்வான் தொடர்பான சீன ஆய்வு நிறுவனம் ஒன்றின் உதவித் தலைவர் யூகோலி தாய்வான் ஜனாதிபதித் தேர்தல் குறித்துத் தெரிவிக்கையில், "சுதந்திரத்துக்கு ஆதரவான வேட்பாளர் ஒருவர் வெற்றி பெறுவாரானால் தூர கிழக்கில் சமாதானத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படும்" என்று தெரிவித்துள்ளார். ஆனால் தாய்வானின் அரசியல் விஞ்ஞானியான அன்ட் ரூயங் சீனாவின் வெள்ளை அறிக்கையை வெறும் "கடதாசித்தாள் ஏவுகணை"(Paper Missile) என்கிறார்.

சீனாவின் முக்கிய இலக்கு சுதந்திரத்துக்கு ஆதரவான ஜனநாயக முன்னேற்றக் கட்சி வேட்பாளர் சென்சூய் - பியான்தான். சென் சூய் முன்னர் தைப்பே மேயராக இருந்தவர். சுதந்திர நாடாவதற்குத் தாய்



இன்றைய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மூன்று பிரதான வேட்பாளர்களில் முன்னணியில் இருப்பவர் தாய்வானின் சுதந்திரத்தை வலியுறுத்தும் சென்சூய்-பியன். தனது மனைவியுடன் அவர் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த காட்சி.

வானுக்கு உள்ள உரிமையை நீண்ட காலமாக வற்புறுத்தி வருகிறார். தேர்தலில் போட்டியிடும் மூன்று வேட்பாளர்களுக்கு இடையில் கடும் போட்டி நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மற்றொரு வேட்பாளர் ஜேம்ஸ் சூங் (James Soong). இவர் முன்னர் கோமிங்டான் கட்சியின் தலைவராக இருந்தவர். சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடுகிறார். சீனாவின் வெள்ளை அறிக்கை குறித்து இவர் கருத்துத் தெரிவிக்கையில், தாய்வானின் எதிர்காலத்தைத் தாய்வான் மக்களே தீர்மானிக்க வேண்டும் என்கிறார். சீனாவிடம் தாய்வான் சரணாகதி அடைந்து விடப்போவதில்லை என்றும் இவர் தெரிவித்துள்ளார்.

மற்றைய வேட்பாளர் தற்போ



சீனப் பெரும்பூமியில் இருந்து அச்சுறுத்தல்கள் வரும் போதெல்லாம் தாய்வான் பதிலுக்கு இராணுவ ஒத்திகையை பெரிய எடுப்பில் நடத்துவது உண்டு. இப்படியான ஓர் ஒத்திகையையே படத்தில் காண்கிறீர்கள்.

தைய உபஜனாதிபதி லின் ஷான் (Lien Chan), ஆளும் கட்சியான கோமிங்டான் வேட்பாளராக இவர் போட்டியிடுகிறார். சீனக் கம்யூனிஸ்ட்டுக்களிடமிருந்துவரக்கூடிய எந்தவொரு நெருக்கடியையும் தாய்வானின் 2கோடியே 20லட்சம் மக்களும் கடுமையாக எதிர்பார்ப்பார்கள் என்று லின் ஷான் கூறுகிறார்.

தாய்வான் அரசியல்வாதிகளின் சுதந்திரத்துக்கு ஆதரவான போக்கு, சீன எதிர்ப்புக் கொள்கை ஆகியவை காரணமாக அமெரிக்கா தனது ஒரு சீனக் கொள்கையில் இருந்து பின்வாங்கலாம் என்று சீனத் தலைவர்கள் அஞ்சுகின்றனர்.

சீனாவுக்கும் தாய்வானுக்கும் இடையிலான உறவு சுதந்திரமான இரு நாடுகளுக்கு இடையிலான உறவு முறையில் அமைந்திருக்க வேண்டும் என்று தாய்வான் ஜனாதிபதி லீ தெங் - ஹூய் (Lee Teng - Hui) கடந்த ஆண்டு தெரிவித்தார். ஒரு சீனக் கொள்கையை ஆதரிப்பதாக அமெரிக்கா கூறிக்கொண்டு தாய்வானின் சுதந்திரத்துக்கு மறைமுகமாக ஊக்கம் அளித்து வருவதாக சீனத் தலைவர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர். தாய்வானின் பாதுகாப்பை அதிகரிப்பது தொடர்பான சட்ட மூலம் சமீபத்தில் அமெரிக்க நாடாளுமன்றமான காங்கிரஸில் நிறைவேற்றப்பட்டது. அமெரிக்காவிடம் இருந்து கூடுதல் ஆயுதங்களைத் தாய்வான் கொள்வனவு செய்ய இந்தச் சட்ட மூலம் உதவப் போகிறது. இராணுவ ரீதியில் தாய்வான் பலம் அடைந்தால் இணைப்புக்கான சாத்தியங்கள் மேலும் பின் தள்ளப்பட்டுவிடும் என்று சீனா கருதுகிறது.

### நவீன நாசகாரிகளை வாங்கத் தாய்வான் முயற்சி

அமெரிக்காவிடமிருந்து மூன்று நவீன நாசகாரிக் கப்பல்களை (Ae gis - Class Destroyers) வாங்குவதற்குத் தாய்வான் முயற்சி செய்து வருகிறது. நவீன ராடர்கள் பொருத்தப்பட்ட இந்த நாசகாரிகள் ஒவ்வொன்றும் 150 கோடி டொலர் பெறுமதி வாய்ந்தவை. இத்தகைய கப்பல்களுக்கு ஓடர் கொடுத்தால் அவை கட்டி முடிக்கப்பட்டுத் தாய்வான் வந்துசேர 5 வருடங்கள் செல்லும். இவற்றை இயக்குவதற்கான பயிற்சிக்கு மேலும் 3 வருடங்கள் செல்லும்.

தாய்வானின் கடற்படை இந்தக் கப்பல்களை வாங்குவதற்குத் தாய்வானின் தரைப்படையும், விமானப் படையும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. கடற்படைக்கு இவ்வளவு பெருந்தொகைப் பணம் ஒதுக்கப்பட்டால் தமக்கு ஒதுக்கப்படும் நிதியில் வெட்டுவிழலாம் என்று இவை கருதுகின்றன.

அமெரிக்க - தாய்வான் வருடாந்த இராணுவ நிபுணர்கள் மாநாடு அடுத்த மாதம் நடைபெறுகிறது. தாய்வானின் கோரிக்கை குறித்து இந்த மாநாட்டில் முடிவுசெய்யப்படும். தாய்வான் எவ்வளவு ஆயுதங்களை வாங்கிக் குவித்தாலும் சீனா நினைத்தால் ஒரே நாளில் தாய்வானைக் கபளீகரம் செய்துவிட முடியும். 25 லட்சம் பேர் கொண்ட சீன இராணுவம் தற்பொழுது மிகவும் பலம் வாய்ந்ததாக நவீன ஆயுதங்களைக் கொண்டுள்ளது.

### சீனா அமைக்கும் ஏவுகணைத் தளம்

தாய்வானுக்கு ஆயுதங்களை விற்கப்போவதாகக் கடந்த ஜனவரியில் கிளின்ரன் அறிவித்தார். அதன் பின்னரே தாய்வானின் பாதுகாப்பை அதிகரிக்கும் சட்டம் அமெரிக்க காங்கிரஸில் நிறைவேற்றப்பட்டது.

தாய்வானை எதிர்கொண்டுள்ள தனது கரையில் சீனா பெரிய அளவில் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் உந்துவிசை ஏவுகணைகள் மற்றும் குருஸ் ஏவுகணைகள் அடங்கிய தளம் ஒன்றை அமைக்கும் பணியை ஆரம்பித்துள்ளது.

இதனால் அடுத்த ஐந்து ஆண்டு காலத்தில் சீனாவினால் தாய்வானுக்குப் பயமுறுத்தல் வரலாம் என்று அமெரிக்க ராணுவத் தலைமையகமான பென்ரகன் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

சீனா தாக்கினால் வெளிநாட்டு உதவி எதுவும் இன்றிப் பதிலடி கொடுக்கக்கூடிய நிலையில் தாய்வானைப் பலப்படுத்துவதே அமெரிக்காவின் நோக்கம். ஆனால் இது எவ்வளவு தூரம் சாத்தியப்படுமோ தெரியாது. சாத்தியமாக வாய்ப்பு இல்லை.

### சீனா - ரஷ்யா கூட்டு முயற்சி

சோவியத் யூனியன் உடைந்து ரஷ்யா பலவீனமடைந்த பின்னர், அமெரிக்காவின் இராணுவ பலத்துக்கு ஈடுகொடுக்கும் விதத்தில் சீனாவும் ரஷ்யாவும் இணைந்து செயற்படத் தற்பொழுது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ரஷ்யாவைப் பொறுத்தவரையில் அதற்குப் பணமே தற்பொழுது அவசியமாகத் தேவைப்படுகிறது. சீனாவுக்கு ஆயுதங்கள் தேவை.

சமீபத்தில் சீன வெளிவிவகார அமைச்சர் ரஷ்யாவுக்கு விஜயம் செய்து ரஷ்ய வெளிவிவகாரஅமைச்சருடன் சீன - ரஷ்ய இராணுவ ஒத்துழைப்புச் சாத்தியம் குறித்து விரிவான பேச்சுக்களை நடத்தியுள்ளார். செச்சின்ய பிரச்சினையில் சீனாவின் ஆதரவு ரஷ்யாவுக்கே இருந்து வருகிறது. சோவியத்யூனியன் உடைந்து

(XV ஆம் பக்கம் பார்க்க)

# டென்ஷன்... டென்ஷன்..!

நரம்புகள் விம்மிப் புடைக்கும் அளவுக்குச் சில நிகழ்ச்சிகள் நம்மை 'டென்ஷனாக்கி' விடுகின்றன. பல சமயத்தில் படபடப்பு உச்சக் கட்டத்துக்குப் போய் கைகால்களெல்லாம் உதற ஆரம்பித்தும் விடுகின்றன! இன்னும் சிலசமயம் இரண்டடி தள்ளி நிற்பவனுக்குக் கேட்கும் அளவுக்குக்கூட நம் இதயம் வேகமாகத் துடிக்கிறது! ஏதோ இனம் புரியாத கவலைக்கடலுக்குள் மூழ்குவது போன்ற பீதி நம் நெஞ்சைக் கவ்விக்கொள்கிறது. எல்லாவற்றுக்கும் காரணம் 'டென்ஷன்!'

பல சமயங்களில் நாம் 'டென்ஷன்' ஆவதே தேவையில்லாத விஷயங்களால்தான்! உதாரணத்துக்கு ஒரு சம்பவம்...

பேராசிரியர் ஒருவர் மாற்றலாகி வேறு ஊரிலிருக்கும் கல்லூரிக்குப் போகிறார். அவரை வழி அனுப்புவதற்காக அவருடன் பணிபுரியும் நான்கு பேராசிரியர்களும் ரயில் நிலையத்துக்கு வந்திருக்கிறார்கள். ரயில் புறப்படக் கொஞ்சம் நேரம் இருக்க... போராசிரியர்கள் 'பிளாட்பாரத்தில்' நின்று ஜாலியாகப் பேச ஆரம்பிக்கிறார்கள். பேச்சு சுவாரஸ்யத்தில் ரயில் நகர ஆரம்பித்து விட்டதையும் அவர்கள் கவனிக்கவில்லை. சடாரெனப் படபடப்பு வந்து விடுகிறது. 'எந்தக் கம்பார்ட்மெண்டில் ஏறினாலும் பரவாயில்லை... அடுத்த ஸ்டேஷனில் சரியான கம்பார்ட்மெண்டுக்கு வந்துவிடலாம்' என்று நெரிசலில் முட்டிமோதி நான்கு பேராசிரியர்கள் எப்படியோ ரயிலேறி விடுகிறார்கள். ஆனால், கையில் பெட்டி படுக்கையுடன் இருந்த ஒரு பேராசிரியரால் மட்டும் ரயிலில் ஏற முடியவில்லை! அவரைப் பார்த்துப் பரிதாபப்பட்ட 'போர்ட்டர்' ஒருவர், "கவலைப்படாதீர்கள் பத்து நிமிடத்தில் இன்னும் ஒரு ரயில் இருக்கிறது. அதில் நீங்கள் போய் விடலாம்" என்று ஆறுதல் வார்த்தைகள் சொல்கிறார்.

அதற்கு அந்தப் பேராசிரியர், "அடுத்த பத்து நிமிடத்தில் இன்னொரு ரயில் இருப்பது எனக்குத் தெரியும். ஆனால், நான் என்னைப் பற்றிக் கவலைப்படவில்லை. என் சக பேராசிரியர்களை நினைத்தால் தான் கவலையாக இருக்கிறது. காரணம், அவர்கள் என்னை வழியனுப்ப வந்தவர்கள். ஆனால், இங்கே ஏற்பட்ட அமளி துமளியில் அவர்கள் ரயிலில் ஏறிவிட்டார்கள்!" என்றார்.

இப்படித்தான் படபடப்பும் 'டென்ஷனும்' சாதாரண விஷயங்களைக் கூட நம்கண்ணில் இருந்து மறைத்து விடுகின்றன! நாம் பதற்றத்தில் இருக்கும்போது, எத்தனை கஷ்டப்பட்டு ஒருவேலையைச் செய்தாலும் சரி, அதனால் ஏற்படும் பலன் பெரும்பாலும் பூஜ்யமாகத்தான் இருக்கும்!

ஒரு சமயம் நான்கு குடிகாரர்கள் ஒன்றாக மது அருந்தப்போனார்கள். போதை தலைக்கேறும் மட்டும் குடித்த அவர்கள், வீட்டுக்குத் திரும்புவதற்காகப் புறப்பட்ட நேரத்தில் நன்றாக இருட்டிவிட்டது. ஆற்றைக் கடந்துதான் மறுகரைக்குப் போக வேண்டும். எனவே பரிசல்காரனைத் தேடினார்கள். அவனைக் காணவில்லை. ஆனால் பரிசல் மட்டும் இருந்தது. பரிசலைத் தாங்களே ஓட்டிச்சென்றுவிடலாம் என்ற நம்பிக்கையில், பரிசலில் ஏறி உட்கார்ந்து துடுப்புப்போட ஆரம்பித்தார்கள். ஒரு மணி நேரம் ஆனது... இரண்டு மணிநேரம் ஆனது... மூன்று மணிநேரமும் ஆனது. ஆனால், மறுகரை மட்டும் வரவேயில்லை! அதற்குள் மெல்லப் பொழுதும் விடிந்து... போதையும் மெல்லத் தெளிய... அப்போதுதான் கரையில் இருக்கும் மரத்தில் பரிசல் கட்டப்பட்டிருப்பதை அந்தக் குடிகாரர்கள் கவனித்தார்கள்.

குடிகாரர்கள் கண்களைப் போதையும் இருட்டும் மறைத்தது போல, பதற்றம் நம்முடைய கண்களைப் பலசமயம் உண்மையையும் நிதர்சனத்தையும் பார்க்கவிடாமல் மறைத்துவிடுகிறது.

புத்த மதத்தில் ஒரு பிரிவாக விளங்கும் 'ZEN' இலக்கியத்தில் உள்ள ஒரு கதை இது!

ஓர் அரசன் தன் நாட்டு முதலமைச்சர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க நினைத்தார். சம தகுதி பெற்ற நான்கு பேர் அவரது அமைச்சரவையில் இருந்ததால் ஏதாவது ஒரு பரீட்சை வைத்து அந்த நால்வரில் ஒருவரை முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்க முடிவெடுத்தார். ஒருநாள் அந்த நால்வரையும் அழைத்து "என்னிடம் ஒரு பூட்டு இருக்கிறது. கணித முறைப்படி வடிவமைக்கப்பட்ட இந்த விஞ்ஞானப்பூட்டைத் திறக்க நாளை காலை உங்கள் நால்வருக்கும் ஒரு வாய்ப்பு வழங்கப்படும். யார் இந்தப் பூட்டைக் குறைவான நேரத்தில் திறக்கிறாரோ அவரே நாட்டின் முதலமைச்சர்" என்று அறிவித்தார்.

முதலமைச்சராக வரவேண்டும் என்ற ஆசையில், அன்று இரவு முழுவதும் விடிய விடியப் பூட்டுப் பற்றிய



ஓலைச் சுவடிகளையும் கணிதம் பற்றிய எல்லாக் குறிப்புக்களையும் அந்த அமைச்சர்கள் தேடினார்கள். எதுவும் கிடைக்கவில்லை. அந்த நால்வரில் ஒருவரில் மட்டும், ஒருசில ஓலைச்சுவடிகளைப் புரட்டிவிட்டுத் தூங்கப் போய்விட்டார்.

மறுநாள் அரசவையில்... கணிதத் தந்திரத்தால் மட்டுமே திறக்கக்கூடிய பூட்டை அரசரின் சேவகர்கள் தூக்கிக் கொண்டு வந்து நால்வரின் முன்பும் வைத்தார்கள். எதிரே அரசர் வீற்றிருந்தார். பூட்டின் பிரமாண்டம் எல்லோரின் படபடப்பையும் இன்னும் அதிகரித்தது. கையோடு எடுத்துவந்த ஓலைச் சுவடிகளை அவர்கள் முன்னும் பின்னும் புரட்டிப் பார்த்தார்கள். ஆனால் கணிதப் பூட்டைத் திறக்கும் வழி மட்டும் அவர்களுக்குப் புலப்படவில்லை! தோல்வியை ஒப்புக்கொண்டார்கள்.

இரவிலே நன்றாகத் தூங்கிய அந்த ஓர் அமைச்சர், கடைசியாக எழுந்து வந்தார். அவர் பூட்டின் அருகில் வந்து பார்த்தார். என்ன ஆச்சரியம்! பூட்டு பூட்டப்படவேயில்லை. சாவியே இல்லாமல், சூத்திரமே இல்லாமல் அவர் பூட்டை எளிதில் திறக்க, அரசர் அவரையே முதலமைச்சர் ஆக்கினார்.

பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால், முதலில் பிரச்சினையைப் புரிந்துகொள்ள வேண்டும். பிரச்சினையைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், மனம் பதற்றம் இல்லாமல் சமநிலையில் இருக்கவேண்டும்.

**(சுவாமி சுகபோதானந்தாவின் 'மனசே ரிலாக்ஸ் ப்ளீஸ்' என்ற நூலில் இருந்து.....!)**

---

## 'சிறுவர்சுடர்' விடைகள்

XVI ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள 'சிறுவர் சுடர்' பகுதிக்கான விடைகள் வருமாறு:-

**பெயர்களைக் கண்டுபிடியுங்கள்**

1) டெண்டுல்கர்
2) ஜெயசூரியா
3) மக்கிராத்
4) அசாருதீன்
5) முரளிதரன்

---

## பதற்றமான சூழ்நிலை...

(XIV ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸம் வீழ்ச்சி அடைந்த பின்னர் சித்தாந்த வேறுபாடுகள் குறித்துக் கவலைப்படும் நிலையில் சீனா இல்லை. பொது எதிரியான அமெரிக்காவை எதிர்ப்பதிலும் அமெரிக்காவின் இராணுவ பலத்துக்கு ஈடாகத் தனது பலத்தை அதிகரிப்பதற்கும் முயற்சி செய்து வருகின்றது.

பொதுவாக இன்றைய தாய்வான் ஜனாதிபதித் தேர்தல் முடிவு தூர கிழக்கில் அமைதியா? பதற்றமா? என்பதை நிர்ணயிக்கப்போகிறது.

---

## காணாமற்.......

(III பக்கத் தொடர்ச்சி)

ஒரு குழப்ப நிலையைத் தோற்றுவித்திருக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சியுடனான பேச்சுகளுக்கு அரச தரப்பில் சந்திரிகாவே தலைமை வகிக்கிறார். அவ்வாறிருக்க விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தும் போது தலைவர் பிரபாகரனே தலைமை வகித்தால், ஜனாதிபதி என்ற வகையில் இல்லாவிடினும், ஆளுங் கட்சியின் தலைவர் என்ற வகையில் சந்திரிகாவே தமது தரப்புக்கு தலைமைவகிக்க வேண்டும். தமது பிடியில் இருந்து சந்திரிகா விட்டுக் கொடுக்க வேண்டியது அவசியம் என்று பலரும் சுட்டிக் காட்டுகிறார்கள்.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களுக்கு நிபந்தனைகள் எதனையும் அரசு விதிக்கமாட்டாது என்ற தொனியிலேயே சந்திரிகாவின் பதில்கள் அமைந்திருந்ததை அவதானிக்க முடிகின்றது. அதே போல ஐக்கிய தேசியக் கட்சி "பிடிச்சுராவிக்" கொண்டிருக்கும் நிறைவேற்று ஜனாதிபதி முறையை மேலும் ஆறு வருடங்களுக்கு நீடிக்கக் கூடாது என்ற விடயத்திலும் சந்திரிகா விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்கிறாராம்.

இப்போதுள்ள அரசமைப்புச் சட்டத்திற்குப் பதிலாக புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வரும் இடைப்பட்ட காலத்தில் மட்டும் இரண்டு வருடங்களுக்கு நிறைவேற்று ஜனாதிபதி முறையைத் தொடரலாம் என்ற நிலைக்குச் சந்திரிகா இறங்கிவந்துள்ளார். இது பெரும் மாற்றம் என்றும் அரசு தரப்பிலான விட்டுக் கொடுப்புகளில் ஒன்றாக அமையும் என்றும் அவதானிகள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஐக்கிய தேசியக்கட்சி விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுவதாக ஜனாதிபதி சந்திரிகா 'பார் ஈஸ்ரேன் எக்கனமிக் ரிவியூ' சஞ்சிகைக்கு அளித்த செவ்வியில் குறிப்பிட்டிருப்பது, ஐக்கிய தேசியக்கட்சி வட்டாரங்களைப் பெரிதும் குழப்பி உள்ளது.

இந்த விவகாரம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அரசுத் தரப்பும் ஐக்கிய தேசியக்கட்சியும் கலந்து கொண்ட இரண்டாவது சந்திப்பின் போது கொதித்துப் பொங்கியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆகையால் ஒரு புறம் விட்டுக் கொடுக்கத் தயாராக இருப்பதாகக் கூறிக்கொண்டு மறுபுறத்தில் 'குழப்பம் காய்ச்சி'க் கொண்டிருந்தால் இனப்பிரச்சினைக்கு எல்லாத் தரப்புகளின் இணக்கத்தோடும் தீர்வைக் கொண்டு வருவது சாத்தியப்படுமோ என்பது சந்தேகத்துக்குரியதே!

---

## மனிதனைத் தாக்கும்....

(XIIIஆம் பக்கத் தொடர்ச்சி)

வரலாம் (Social stigma). ஆகவே வெட்கத்தினால் நிலைமையை தீவிரமடையச் செய்யாமல் வைத்தியரிடம் சென்று சிகிச்சை பெறல் நல்லது.

*குடலிறக்கம்(HERNIA):-*

குடலிறக்கம் என்பது ஆண், பெண் இருபாலாரிலும் ஏற்படுகின்ற ஒருநோயாகும். இங்கு குடல்போன்ற வயிற்றுக்குழி உறுப்புகள் அவற்றைச்சூழவுள்ள சுவரில் ஏற்படும் பலவீனம் காரணமாக அதனூடு வெளியேற முற்படுகின்றன. ஆண்களில் சில வேளைகளில் இவ்வுறுப்புகள் விதைப்பையினுள் செல்வதனால் நாளடைவில் விதைப்பை பருமனடைந்து காணப்படும். இதனால் பாதகமான விளைவுகள் ஏற்படலாம். இங்கு பால்உறுப்பான விதைப்பையினுள் குடல் இறங்கிக் காணப்பட்டாலும் இது ஒரு பால் உறுப்பு நோயல்ல. எனவே தயக்கமின்றி ஆரம்பத்திலேயே வைத்தியரிடம் காட்டி சிகிச்சை பெறல் அவசியம்.

*(பெண் இலிங்க உறுப்புகளில் ஏற்படும் நோய்கள் பற்றிய தகவல்கள் அடுத்த வாரம் தொடரும்)*

---

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.146

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | 5 | ■ | 6 |
| 7 | | | ■ | 8 | | 9 | |
| 10 | | | 11 | ■ | 12 | | |
| | ■ | 13 | | 14 | | ■ | |
| ■ | 15 | | | | ■ | 16 | |
| 17 | | | ■ | 18 | 19 | | ■ |
| 20 | | ■ | 21 | | | ■ | 22 |
| 23 | | | | ■ | 24 | | |

**சொற்சிலம்பம் இல. 146**

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................................................

விலாசம்: ......................................................................

..........................................................................

..............................இங்கே வெட்டுக..................................

முடிவுத் திகதி:- 24 - 03 - 2000

### இடமிருந்து வலம்

1. உள்ளூராட்சி சபைகளில் பெரியது. 7. அழி. 8. இந்தியாவையும் இப்படி அழைப்பர்; ஓர் இதிகாசத்துக்கும் இதே பெயர். 10. உங்களுக்கு கிடைக்க வேண்டியது. 12. அழகு. 13. கடவுளைப் பற்றிநிற்பவன். 15. தள்ளிப் போகும். 16. பிசாசு. 17. தவம் அல்ல. 18. ஒரு கிழமை. 20. கையையும் குறிக்கும்; களவையும் குறிக்கும். 21. திருமால். 23. இது அறுக்கும். 24. மயரனம்.

### மேலிருந்து கீழ்

1. திருமாலின் மற்றொரு பெயர். 2. விலகு. 3. செய்த வினையின் பயன். 4. சபை. 5. இந்து சமயிகளின் கடவுள். 6. இது பரவினால் கட்டுப்படுத்துவது கஷ்டம். 9. குளிர்மை. 11. திசை. 14. நாண் கொண்ட ஒரு வாத்தியக் கருவி. 15. விளக்கம். 16. தலையில் இருந்து தொல்லை தருபவர். 17. எழுத்துக்களின் முதல். 19. செய்கை பண்ணப்படாத நிலம். 21. மூன்றைக் குறிக்கும் அடைமொழி. 22. சிரசு.

## சொற்சிலம்பம் 144 இன் விடைகள்

### இடமிருந்து வலம்

1. மாதாமாதம். 5. சாவி 6. சித்தம். 7. பாய. 8. கதாப்பிரசங்கி. 11. காண். 12. துறவி. 14. மலடு. 15. கர்ப்பகாலம். 17. புத்தர். 19. திரு. 20. துணி. 21. தசை.

### மேலிருந்து கீழ்

1. மாசிகம். 2. தாத்தா. 3. மாதப்பிறப்பு. 4. தம்பி. 5. சாயங்காலம். 7. பாச. 9. ரதி. 10. கிண்டு. 12. துர். 13. விபத்து. 14. மலர். 15. கத்தி. 16. காதணி. 18. பசை.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டசீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

**முதலாம் பரிசு:-** சி.தவரத்தினம்,
அரசடி வீதி,
இருபாலை கிழக்கு,
கோப்பாய்.

**இரண்டாம் பரிசு:-** செல்வி. பி. நகுலநாதன்,
5/6 கோணாவளை லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

**மூன்றாம் பரிசு:-** அ.சத்தியரூபன்,
ஏழாலை மேற்கு,
ஏழாலை.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 145 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில்.

# நொடிப் பொழுது


1) வெளியே வெள்ளி; உள்ளே தங்கம். அது என்ன?
2) நெஞ்சிலே ஒரு கல். அது என்ன கல்?
3) வருவான், போவான். ஆனால் தொடர்ந்து நிற்கமாட்டான். அவன் யார்?
4) குளிக்கப்போதும்; குடிக்கப்போதாது. அது என்ன?
5) துடிப்பு இருக்கும். இதயமல்ல; முள்ளிருக்கும். செடியுமல்ல. அது என்ன?
6) சின்னஞ்சிறுபிள்ளை; அவனைக் கடித்தால் தொல்லை. அவன் யார்?
7) சிவப்பு வாசல்; பச்சை வீடு. அது என்ன?
8) வாயால் வாங்கி வாயால் தருவான்; வயிறு பெருத்தவன். அவன் யார்?

**விடைகள்**

1) முட்டை 2) விக்கல் 3) மழை 4) வியர்வை 5) கடிகாரம் 6) மிளகாய் 7) கிளி 8) குடம்

* * * * * * * * * * * * * * * * * *

# வழிகாட்டுங்கள்




இருப்பிடத்துக்கு செல்லும் வழியைத் தவறவிட்டுவிட்ட மீன்குஞ்சுக்கு வழிகாட்டி உதவுங்கள்!

# பொருத்துங்கள்



துண்டுபட்டிருக்கும் இயந்திர மனிதனை சரியான முறையில் பொருத்துங்கள் பார்க்கலாம்.

## சிங்கமும் சுண்டெலியும்

தக்க பெரியதோர் சிங்கமடா - அது
தாவியே பாய்ந்திட வல்லதடா
மொக்கு நிறைந்த மர நிழலில் - அது
முச்சு விட்டே துயில் கொண்டதடா

ஓங்கிய கொப்பினில் சுண்டெலியும் - ஒன்று
ஓடி விளையாடி நின்றதடா - தூங்கிய
சிங்கத்தின் முதுகினிலே சுண்டெலியும்
விழுந்ததடா
சிங்கத்திற்குக் கோபம் மூண்டதடா

ஆபத்து வேளையில் நானும் உதவுவேன்
ஆத்திரம் கொள்ளாதே என்றதடா
மன்னித்து விட்ட சிங்கமும் - ஒரு நாள்
மாட்டிக் கொண்டது வேடன் வலையில்

சிங்கமும் வலையில் தவித்ததடா
சுண்டெலியும் அவ்வேளை வந்ததடா
வலையை நறுக்கென்று அறுத்ததடா -
அதனால்
சுண்டெலியும் பண்பால் உயர்ந்ததடா.

க. துளசிகா
(தரம் 4, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை)




# பனிமனிதன் இருப்பது உண்மையா?

(பகுதி 4) தரையில் பதியும் இராட்சத கால் தடங்களைப்பற்றி ஹில்லாரி என்ன கூறுகிறார்? 'எந்த ஓர் அடிச்சுவடும் பனியில் பதிந்து, பின்பு கலையும் போது தானாகவே விரிந்து பெரிதாவது இயற்கை. பாதி கலைந்து பெரிதான நிலையில் இவற்றைப் பார்த்து மக்கள் பீதியடைகின்றார்கள்' என்கிறார் ஹில்லாரி.



பனி மனிதன் அடிக்கடி நடமாடுவதாகத் தகவல் வரும் திபெத், நேபாளம், பூட்டான் பகுதிகளில் பனி மனிதனைக் கண்டால் பிடிக்க முயல்வதும், சுடுவதும் தடை செய்யப்பட்டுள்ளது. ஆராய்ச்சிப் பணிக்காக வருபவர்களுக்கு பனி மனிதனை உயிருடன் பிடிக்க மட்டும் தனி அனுமதி வழங்கப்படுகின்றது; சுடுவதற்கு அல்ல. ஆனால் இதுவரை எந்த 'யெதி'யும் பிடிபடவில்லை. கண்டிப்பாகப் பிடிபடும் என்ற நம்பிக்கை சில ஆய்வாளர்களுக்கு இருக்கின்றது. பொறுத்திருந்து பார்ப்போம். அதுவரை பனிமனிதனைப் பற்றி அவ்வப்போது வெளிவரும் சுவையான புருடாச் செய்திகளை நாமும் படித்து ரசிப்போம்!

(முற்றும்)

\+ \+ \+ \+ \+ \+ \+ \+ \+ \+ \+ \+ \+ \+ \+ \+ \+ \+ \+ \+ \+ \+

# உங்களுக்குத் தெரியுமா?

**+ பழைய புத்தகங்களின் காகிதங்கள் நாளாக வெள்ளை நிறத்தை இழந்து மங்கலாகி விடுகின்றனவே! இதற்குக் காரணம் என்ன?**

காகிதங்களை வெண்மையாக்க எத்தனையோ விதமான இரசாயனக் கலவைகளைச் சேர்க்கிறார்கள். நாளாக இவை மறைந்து விடுகின்றன. இதன் காரணமாகவே காகிதம் வெள்ளை நிறத்தினை இழந்து மங்கிவிடுகின்றது.

**+ கோலோகிறாம் (Hologram) என்றால் என்ன?**


கோலோகிறாம் என்பது ஓர் ஒளிப்பதிவு முறை. முப்பரிமாணப் படங்களை (Three Diamension) பிரதியெடுக்க இந்த முறை பெரிதும் துணைபுரிகின்றது.

**+ யானைக்கு வெள்ளை நிறம் பிடிக்காது என்பது உண்மைதானா?**

உண்மையே! இதன் காரணமாகவே காட்டுக்குள் செல்பவர்கள் வெள்ளை உடையைத் தவிர்க்கிறார்கள். யானைப் பாகன் வெள்ளை உடை அணிவதில்லை. யானைகள் அதிகமாக வாழும் சரணாலயப்பகுதிகளில் உள்ள மைல் கற்களுக்கும் மஞ்சள் வர்ணத்தையே பூசுகிறார்கள்.

* * * * * * * * * * * * * *

# பெயர்களைக் கண்டுபிடியுங்கள்



மேலுள்ள படத்தில் ஐந்து கயிறுகளை ஐந்து கைகள் பிடித்துள்ளன. ஒவ்வொரு கயிற்றிலும் உள்ள வளையங்களினுளும் ஒவ்வொரு புகழ் பெற்ற கிரிக்கெட் வீரர்களினது பெயர்கள் ஒழுங்கற்ற நிலையில் உள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தி பெயர்களை கண்டுபிடியுங்கள். *(விடை XV ஆம் பக்கத்தில்)*

# போற்றுங்கள்

நேர்மை கொண்டு வாழுங்கள்
நல்லவர் நட்பை நாடுங்கள்!

உண்மை நெறியில் நில்லுங்கள்
உயர்ந்த பண்பை வளருங்கள்!

நல்லதை மட்டும் செய்யுங்கள்
நாட்டுக்கென்று வாழுங்கள்!

எளியவர் துன்பம் துடையுங்கள்
என்றும் இனிதாய்ப் பேசுங்கள்!

மதத்தை - சாதியை மறவுங்கள்
மனிதர் நாமென எண்ணுங்கள்!

சுயநலப் பேயை விரட்டுங்கள்
சுதந்திர உணர்வைப் பெற்றிடுங்கள்!

# பேராசை

ஒரு கிராமத்தில் சிறந்த நீச்சல் வீரர்கள் இருந்தார்கள். ஒருநாள் அக்கிராமத்தினூடாகச் சென்ற ஆறு திடீரெனப் பெருக்கெடுத்தது.

அபாயத்தையும் பொருட்படுத்தாத பன்னிரண்டுபேர் ஒரு சிறிய படகில் ஆற்றைக் கடந்து செல்லத் தொடங்கினார்கள். நடு ஆற்றில் அவர்கள் சென்று கொண்டிருக்கும் பொழுது அந்தப் படகு கவிழ்ந்தது. படகில் சென்றவர்கள் நீந்தத் தொடங்கினார்கள். அவர்களில் ஒருவன் எவ்வளவோ முயற்சித்தும் சிறிதளவு தூரம்தான் அவனால் முன்செல்ல முடிந்தது.

"எங்களிலும் பார்க்க நீ எவ்வளவோ சிறந்த நீச்சல் வீரன். நீ ஏன் பின் நிற்கிறாய்?" என்று அவனது சகாக்கள் கேட்டனர்.

"என்னுடைய இடுப்பைச் சுற்றி ஒரு பையில் ஆயிரம் நாணயங்களை நான் கட்டி வைத்திருக்கிறேன்" என்று அவன் கூறினான்.

"அவற்றை நீ ஏன் அப்பால் வீசவில்லை? உடனே அவற்றை வீசிவிடு" என்று கூறி நாணயங்களை எறிந்து விடும்படி மற்றவர்கள் அவனைத் தூண்டினார்கள்.

அவன் தனது சகாக்கள் கூறியதைக் கேட்கவில்லை. தான் ஆபத்தில் சிக்கியுள்ளேன் என்று அவனுக்குத் தெரிந்திருந்தும் நண்பர்கள் கூறியதை அவன் பொருட்படுத்தவில்லை. தனது தலையை மாத்திரம் அவன் அசைத்தான்.

அவனுடைய நண்பர்கள் ஆற்றின் அக்கரைக்குச் சென்றுவிட்டார்கள்.

"முட்டாளே! நாணயங்களை எறிந்து விடு. நீ தண்ணீரில் மூழ்கி இறந்துவிடப் போகின்றாய். நீ செத்தால் இந்தப் பணத்தினால் உனக்கு என்ன பயன்?" என்று நண்பர்கள் சத்தமிட்டுக் கூறினார்கள்.

ஆனால் அவனோ மீண்டும் தலையை மாத்திரம்தான் அசைத்தான். சிறிது நேரத்தில் அவன் நீரில் மூழ்கிவிட்டான்.

த. ருஷாணி
(தரம் 4, யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை)

* * * * * * * * * * * * * * * *

# வர்ணம் தீட்டுங்கள்



புள்ளியிட்ட கட்டங்களுக்கு வர்ணம் தீட்டி மறைந்திருப்பவர் யார் என்று கண்டு பிடியுங்கள்.